# ஸ்நேகம்



முல்லை அமுதன்

# ஸ்நேகம்

முல்லை அமுதன்

இ. மகேந்திரன்
6, சேக்ஸ்பியர் கிரசன்ட்
மனோர் பார்க்
லண்டன் E12 6 LN

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

உரிமை பதிவு
முதற்பதிப்பு : தி.பி. 2030 பிரமாதி சித்திரை 1999

விலை : 20.00

விற்பனை உரிமை :

காந்தளகம்

834, அண்ணா சாலை,
சென்னை 600 002
தொலைபேசி: 853 4505

21, அஞ்சலக வீதி,
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.

மின்னம்பலம் : tamilnool.com
மின்னஞ்சல் : sachi@giasmd01.vsnl.net.in

# சமர்ப்பணம்

உலகின் காதலுக்கு

**என்னுரை :**

எதைப் புதிதாய்ச் சொல்லிவிடப் போகிறேன்.
நெட்டுருப் போட்டு எழுதிய நாவல் பல
ஆண்டுகளின் பிறகாவது வருவதில்
சந்தோஷம் தாம் வாசகர்களே!

பல ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட காலகட்
டத்தில் வந்திருப்பின் நன்றாக இருந்திருக்கலாம்
என்கிற ஆதங்கம் இல்லாமல் இல்லை.
எனினும் -
காதல் வாழ்வாங்கு வாழ்வது தானே.
விரசம் இன்றி எழுதியதில் திருப்தி.
எனி -
தங்கள் வழமையான மௌனம் அல்லது
விமர்சனத்தை எதிர்பார்த்தபடி...

முல்லை அமுதன்
லண்டன் 10-03-99

# அத்தியாயம் ஒன்று

மனிதன் தன் கடமையைச் சில சமயம் மறந்தாலும் கடிகாரம் தனது கடமையை மறப்பதில்லை...... மனிதனைப் போலச் சிலசமயங்களில் ஓய்வும் எடுத்துக் கொள்ளும்.

பூபாளம் மீட்டும் காலை நேரக் குளிர் காற்று அந்த அறையினுள் சில்லென்று வீசுகிறது.

போர்வையை இழுத்து மூடிப்படுத்திருந்தவன் உதறிப் போட்டுக் கொண்டு எழுந்து பின்கட்டுப் பக்கம் போனான். மார்பில் ஒன்றும் அணிந்திருக்காததால் சதைப் பிடிப்பான அவனது மார்பு மயிர்கள் சிலிர்த்து நின்றன.

வானொலியில் பொங்கும் பூம்புனல் நடந்து கொண்டிருந்தது. இனிமையான பாடல் ஒன்று அறிவிப்பாளரின் குரலோடு ஒலிபரப்பபாகிக் கொண்டிருந்தது ....

குளித்து முழுகி, தலையைத் துவட்டியபடி ஹாலுக்குள் வந்து நின்ற நவீன் முற்றத்தில் நின்று கொண்டிருந்த பேப்பர்க்காரனைப் பார்த்ததும் முற்றத்திற்குச் சென்று பத்திரிகையை வாங்கிக் கொண்டான்.

மணியை அடித்தபடி பக்கத்து வீடுகளுக்குப் பவனிவரத் தொடங்கி விட்டான் பத்திரிகைக்காரன்.

பத்திரிகையின் முகப்புச் செய்தியை மனதுள் வாசித்தபடி உள்ளே வந்தான் ....

ஷோபாக்களுக்கு நடுவில் இருந்த ஸ்ரூலில் பரப்பிவிட்டிருந்த பத்திரிகைகளை ஒவ்வொன்றாக வாசிக்கத் தொடங்கி விட்டான் .....

தாயின் குரல் கேட்டுச் சாப்பாட்டிற்கு ஆயத்தமானான் நவீன்.

நவீன் கல்லூரி மாணவன் ..... அவன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான கல்லூரியில் உயர்தர வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான்.

வீட்டில் சைக்கிள் ஒன்று இருந்தும் ஒருசில சௌகரியங்களுக்காக பஸ்ஸிலேயே சென்று வருவான்.

டீன்ஏஜ் வாலிபனான நவீன் இன்றும் கல்லூரிக்குத் தயாராகி விட்டான்.

தலைக்கிராப்பு அழகாக வாரிவிட்டு - அரும்பு மீசை கடைவாயில் தவழ - புறுஸ்லீ பனியன் மார்பை அலங்கரிக்க - எலிபன்ட் பெல்ஸ் இடையில் தொங்க -

ஆயத்தமாகி விட்டான் .....

கனவுலக ரதி மாறனோ ..... திரையுலக யுவராஜாவோ!

அம்மா போயிட்டு வருகிறேன் தாயின் பதிலுக்குக் காத்திராமல் வாசலைக் கடந்து பஸ் ஸ்டாண்டிற்கு நடக்கத் தொடங்கினான்.

வீட்டினுள்ளே -

தாயின் பிரார்த்தனை மகனைப் பற்றியதாகவே இருந்தது. கட்டுக்கடங்காமல் வளர்ந்து விட்டான் ..... எங்கே போய் முடியப் போகுதோ?

சாதாரண ஒரு தாயின் பிராத்தனை தான் .... இருந்தும் அவளின் பெருமூச்சு ..... ஓ ..... அந்த நினைவுகளே வேண்டாம் .... மாறாத வடுவாகிப் போன அந்த நிகழ்ச்சி - கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

பூஜை அறையினுள் கால்கள் சென்றன. முருகா ..... முருகா ..... மனம் ஓலமிட - கண்ணில் கங்கை பாய்ந்தது .....

மனதில் துன்பம் நெருடல்களை வெளிப்படுத்தி ஒத்தடம் கொடுப்பது, கண்ணீரும் - தெய்வப் பிராத்தனையும்தான்.

அவளும் அதையேதான் கடைப்பிடித்து வந்தாள்.

பஸ் நிலையத்திற்கு வந்த நவீன் -

''ஹாய் - என்னடா இன்று லேட்டாயிட்டுது .... மதன் ரதியின் நினைப்பில் இருந்திருக்கிறாரோ ....?'' கிண்டல் பண்ணினான் நண்பன். அவனுக்கு ஒத்து ஊதினான் மற்றவன்.

தலையைத் தாழ்த்திப் புன்னகை ஒன்றை உதிர்த்துக் கொண்டான். அவனது சிரிப்பில்தான் எவ்வளவு அழகு.

சிரிப்பே சீவியமாக நடத்துவோரும் உண்டு ..... சிரித்து வரும் உறவு நிலைப்பது இல்லை என்போரும் உண்டு. இங்கே -

நவீனின் சிரிப்பிற்காக எவ்வளவு பேர் காத்திருக்கின்றார்கள் .... இவனது சிரிப்பில் தானே கலக்கத்தினை வினையாக்கிக் கொண்டாள் இவளது தாய்.

தலையைச் சாய்த்து பெண்கள் கூட்டத்தினை நோட்டம் விட்டான்.

''ம்'' உதட்டைப் பிதுக்கிக் கொண்டான்.

விஷயத்தைப் புரிந்து கொண்ட ஒருவன், ''ரதியை இன்று காணவில்லை. சுகமில்லையோ யார் கண்டார்'' அவனைச் சீண்டினான்.

''பிருந்தா இன்று வரவில்லைதான்'' நவீன் நினைத்துக் கொண்டான், ''சுகமில்லையோ .... என்ன நோயோ?'' மனம் அழுதது.

'மாலை வரை பொறுத்திருப்போம்,' என்று மனதிற்குச் சமாதானம் செய்தபடி தலையைச் சிலிர்த்துக் கொண்டான்.

தலையின் சிலிர்ப்பில் -

ஷாம்போ போட்டு முழுகிய தலைமயிர்கள் அழகாக நடனமாடிவிட்டு மீண்டும் தூங்கி விட்டன. அவன் வாரிவிட்ட அழகு கவர்ச்சியாகத்தான் இருந்தது.

அரை மணி நேரம் காத்திருந்த பின்னரே பஸ் வந்தது..... பிரசவமாகப் போகிறவள் மாதிரி தள்ளாடியபடி வந்து நின்ற பஸ்ஸில் தொற்றிக் கொண்டான்.

பஸ் ஊர்ந்த படி சென்றது.

வீதி மருங்கில் எல்லாம் பூவரச மரங்களின் கிளைகள் ஆடி அசைந்து சாமரை வீசுவது போலிருந்தன. ரோட்டின் மேலாக வளைந்து நிற்கின்ற தென்னை மரத்தைத் தாண்டும் வரை பயமாகத்தானிருக்கும்.

யார் தலையில் எப்போது விழுமோ?

கல்லூரி ஆரம்பமாகி விட்டது.

முதல் மணி அடித்துப் பிரார்த்தனை மண்டபத்தில் எல்லா வகுப்பு மாணவர்களும் ஒன்று கூடிப் பக்தியுடனும் தியானத்துடனும் (ஏதோ ஒப்புக்காகவேனும்) தேவாரம், திருவாசகம், திருப்புகழ், புராணம் எல்லாம் முடிந்து 'அரகர மகாதேவா'வின் பின் அதிபரின் அறிவுரை நடந்து முடிந்து விட்டது.

பிரார்த்தனை முடிந்து வகுப்பிற்குச் செல்லும் மாணவர்களை மாணவர் தலைவர்கள் ஒழுங்குடன் அனுப்பிக் கொண்டிருந்தனர்.

நவீன் கூட மாணவர் தலைவர்தான் ..... அவன் தெரிவு செய்யப்பட்டு இரண்டு வாரங்கள் தான் ஆகியிருக்கும். படிப்பில் மகா கெட்டிக்காரனான நவீன், அழகை ரசிப்பதிலும் அழகுடன் வாழ்வதிலும் விருப்பம் அதிகம் கொண்டவன். அழகினால் அனைவரின் அன்பினையும் சம்பாதித்துக் கொண்டான்.

நீண்டு சென்ற வராண்டாவின் வளைவிலுள்ள சில நுழை வாயில்களில் நுழைந்த பின் கிழக்குப்புறமாக உள்ள அறைதான் நவீனின் வகுப்பறை. நவீனின் வகுப்பில் நாற்பது பேர் உள்ளனர்.

இரண்டாவது வரிசையில்தான் உட்கார்வான் எப்போதும். அதுவே அவனுக்கு சௌகரியமானதும் கூட. அன்றும் அங்கேயே உட்கார்ந்தான்.

பாடம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பொருளியல் பாடமாகையால் நாட்டின் பொருளாதாரநிலை - பெட்ரோல், அரிசி, சீனி போன்ற பொருட்களின் விலை அதிகரிப்பு அன்றைய பாடத்தில் முக்கிய இடம் பிடித்துக் கொண்டிருந்தது. பொருளியல் பாடம் திலகநாதன் ஆசிரியர்தான் படிப்பிப்பார். அவர் அதில் டபிள் ஒனர்ஸ் செய்தவர். அத்துடன் ஆர்ட் ஒவ் ரீச்சிங் தெரிந்தவர். ஆதலால் அவரைப் பெரிதும் மாணவர்கள் விரும்புவர். முன்புறச் சுவரில் பதிந்துள்ள நீளமான கரும்பலகையில் வரை படங்களைப் போட்டு விளக்கமளிப்பதில் அவருக்கு நிகர் அவரே தான். நேரம் போவதே தெரிவதில்லை.

பகல் மதிய உணவிற்கான இடைவேளை மணி ஒலித்ததும் வகுப்பறையில் இருந்து வெளிவந்த மாணவர்களின் முகத்தில் பசியைப் போக்கத் துடிக்கின்ற துடிதுடிப்பு ..... அவசரம் ..... ஸ்டாப் ரூமினுள் ஆசிரியர்கள் நுழைகின்றனர்.

நவீன் தன் நண்பர்களுடன் கேன்டீன் நோக்கிப் புறப்படுகின்றான். நல்லபசி ..... சிறு குடலைப் பெருங்குடல் தின்பது போன்று என்பார்களே அதுவோ?...

மதிய உணவினைச் சுடச்சுட உண்டபின் ஏற்படும் அசதியைப் போக்கடிக்க, முன் வராண்டாவில் வந்து நின்றாள் பிருந்தா.

தென்னந் தோப்பில் இருந்து வந்த காற்று அவளுக்குச் சுகமாக இருந்தது.

பாடசாலைக்குச் செல்லாததால் இன்று அவளுக்குப் பொழுது போவதே கஷ்டமாக இருந்தது. அங்கும் இங்கும் உலாவினாள் ..... இருப்புக் கொள்ளவில்லை.

"நாவல் ஏதாவது வாசிக்கலாம் என்றால் எல்லாம் நான் வாசித்து முடிந்தாகி விட்டது"- ஞாபகத்தில் உறைக்கிறது. பத்திரிகைகளில் விஷயங்கள் வாசிக்கக் கூடியதாக அவளுக்கு படாததினால் முற்றத்திற்கு இறங்கி வந்து வேலி ஓரத்தில் ஓங்கிக் கிளை விட்டு வளர்திருந்த சீமைக்கிளுவை மரத்திலிருந்து கரைந்து கொண்டிருந்த காகத்தினை 'ச்சூ' கொட்டிக் கலைத்தாள்.

பின் -

முற்றத்தில் நின்றவாறே உள்ளே போகத் திரும்பினாள். உள்ளே ஒரு மூலையில் அவளது தாய் சீலையை விரித்துப் போட்டுச் சௌகரியமாகப் படுத்திருந்தாள்.

தனது அறைக்குள் நுழைந்த பிருந்தா, கட்டிலில் சாய்ந்தவாறு பக்கத்து சிறிய மேசையில் இருந்த ஜெயகாந்தனின் இந்த நேரத்தில் இவள் என்ற புத்தகத்தை எடுத்துப் புரட்டினாள் .....

ஜெயகாந்தன் அவளது பிரியமுள்ள எழுத்தாளன். அவனின் நூல்களை ஒன்றும் விடாமல் படிப்பாள். அவள் கையிலிருந்த கதையை எத்தனை தடவை படித்திருப்பாளோ தெரியாது.

நாலைந்து பக்கங்களைப் புரட்டியவள் இனிய கனவுகளைச் சுமக்கின்ற தூக்கம் அழைக்க அயர்ந்து தூங்கிவிட்டாள்.

இனிய கனவுளைச் சுமக்கின்ற தூக்கம் அவளைப் போன்றவர் களுக்குத் தேவையானது தான். தூக்கம் தவிர்க்க முடியாத ஒன்று.

கடிகாரம் நான்கு முறை அடித்து ஓய்ந்தது.

புரண்டு படுத்த பிருந்தாவைத் தட்டி எழுப்பினாள் அவளது அம்மா.

பின்னேர டியூசனுக்கு மாணவர்கள் வரப் போகிறார்களல்லவா? அதனால்தான் பாதியில் அவளது தூக்கத்தைக் கலைத்தாள் அவளது தாயார்.

'உம்' கொட்டிப் பெரிதாகக் கொட்டாவியை விட்டவாறே எழும்பி முகம் கழுவுவதற்காக டவலையும் சோப்பையும் எடுத்துக் கொண்டு கிணற்றுப் பக்கம் போனாள்.

ஐந்து மணி -

தயாராகி விட்டாள் .....

அரசாங்கப் பாடசாலைகளில் படிப்பிப்பவர்கள் டியூசன் கொடுக்கக் கூடாது என்று சட்டம் வைத்தாலும் அதை தடுக்க யாராலும் முடிவதில்லை.

வருவாயைப் பெருக்க வழி இது என்றால் யார் தான் சும்மா இருப்பார்கள். பிருந்தா கற்பிக்கும் கல்லூரியில்தான் நவீனும் கற்கிறான். படிப்பில் சூரனான நவீனைத் தனது மாணவனாகக் கூறுவதில் பெருமையும் கொண்டாள் பிருந்தா. இல்லாவிட்டால் மற்றவர்களின் எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது நவீனை டியூசன் வகுப்பில் சேர்த்துக் கொண்டிருப்பாளா?

அவள் துணிச்சல்காரிதான்.

தனக்கென்று ஒரு வாழ்வு அமையவில்லையே என்ற அவளது ஆதங்கத்தின் நடுவிலும், அவளது சேவை மனப்பான்மையும் தியாக உணர்வும் அவளை ஆசிரியத் தொழிலில் ஈடுபடவைத்தன.

தனது எதிர்காலமே சூன்ய வெளியாகத் தெரிந்த அவள் ஆசிரியத் தொழில் என்ற கலங்கரை விளக்கின் ஒளியுடன் நம்பிக்கை நட்சத்திரத்தினைத் தேடிப் பயணம் செய்கின்றாள்.

பாடம் நடந்து கொண்டிருந்தது.

பிருந்தாவையே கண் வெட்டாது பார்த்துக் கொண்டிருந்தான் நவீன்.

அவள் கற்பிப்பது அவனுக்குப் பாடமாகின்றனவா? அல்லது அவளது அழகை ரசனைக்குரிய பாடமாக்குகின்றானா?

இதைக் கண்ட பிருந்தா நவீனின் சிந்தனையைத் திசை திருப்ப எண்ணி வினா ஒன்றைப் போட்டாள் .....

தடுமாறினான் அவன்.

சிரித்து விட்டு அவனுக்குப் புத்தி சொல்லிவிட்டுப் பாடத்தைத் தொடர்ந்தாள் ..... அவனது பார்வையும் தொடர்ந்தது.

படிப்பு ஏனோ அவனுக்கு அன்று ஏறவில்லை .....

பிருந்தாவும் உணர்ந்தாள்

'என்ன காரணமாயிருக்கும்?'

'விசாரித்துத் தெரிந்து கொள்ளலாமா?'

'என்ன நினைப்பானோ?'

பிருந்தாவின் சிந்தனை படர்ந்தது.

நல்ல மாணவனின் வாழ்வு தன்னால் பாழாகக் கூடாது. திடமாக்கிக் கொண்டாள். கூடவே கேள்வியும் தயாராகி விட்டது.

பாடம் முடிந்து வீடு செல்ல எல்லோரும் ஆயத்தமான போது நவீனைத் தனியே அழைத்தாள். 'எப்படிப் பேசுவது?' ..... தடுமாறினாள். ஒரு நிமிடம் விட்டு, ''நவீன், நீர் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்த பிள்ளை. நல்ல எதிர்காலம் உமக்கிருக்கு. நல்லாப் படிக்க முடியும் உம்மால். ஏன் இன்று மட்டும் ஏதோ பாதை மாறச் சிந்தனையை அலையவிடுகிறீர்?'' கேட்டுவிட்டாள்.

கேட்டேவிட்டாள்.

தடுமாறிப் போனான் நவீன்.

''டீச்சரா இப்படிக் கேட்டார் ..... எவ்வளவு இனிமையான ஒரு வார்த்தையிலே எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துக் கேட்டு விட்டார்.'' மிடறு விழுங்கினான்.

''வந்து ..... வந்து ..... டீச்சர் .....'' இழுத்தான்.

''நவீன், வாலிப வயது இருக்கிறதே அது பொல்லாத வயது. கட்டுக்கடங்காமல் திமிறும். நாம்தான் கட்டுப்படுத்த வேண்டும். இப்போதே நமது மனத்தினைத் திசை திருப்பாவிட் டால் நமது பலம் அத்தனையும் பலவீனமாகிவிடும். எதிர்காலத்தில் நீரும் ஒரு பெரிய மனிதனாய் வாழ வேண்டும். வாழ முடியும் என்ற நம்பிக்கையில் தான் உம்மை எனது மாணவனாகச் சேர்த்துக் கொண்டேன். உமது

எதிர்காலம் ஒன்றே எனது குறிக்கோள் என்று கூடச் சொல்லலாம். நீர் யாரோ நான் யாரோ. இருந்தும் ஏதோ ஒருவித உறவு எம்மை இணைத்திருக்கிறது போலும். உமது பார்வையில் வெறி ஏற்படக் கூடாது. அப்படியான நோக்கு இனிமேல் வேண்டாம். உம்மைக் கெடுத்து விட்டேன் என்று ஊரார் பழி சொல்லக் கூடாது. இப்போது கூட உம்மையும் என்னையும்''.... முடிக்கவில்லை.

நவீன் நிமிர்ந்து பார்த்தான் ......

அவள் கண்களில் நீர் பரவி இருந்தது ......

''ஓ! டீச்சர் அழுகின்றாவா?...'' நவீன் மனம் புலம்பியது. ''நோ ....... நோ ...... டீச்சர் அழக் கூடாது. என்னால் அவள் அழக் கூடாது. யாரும் அழக் கூடாது'' - மனம் மீண்டும் மீண்டும் புலம்பியது ...... இதய நெருடல் அவனையும் அழ வைத்து விட்டது.

அங்கே அப்போது யாரும் இருக்கவில்லை.

நிசப்தம் சில நிமிடம்வரை தொடர்ந்தது.

''உறவு என்றொரு சொல்லிருந்தால்......ஓ......''

பிருந்தாவின் கரங்கள் அவனது கண்ணீரைத் துடைத்து விட்டன. பிருந்தாவின் கண்ணீரை அவனது கரம் துடைக்கத் துடித்தது. அடக்கி அடக்கிப் பார்த்தும் முடியாததால் துடைத்து விட்டான்.

இதை பிருந்தா எதிர்பார்க்கவில்லை ...... அங்கே யாரும் இல்லாததால் அவள் தடுக்கவில்லை ......

ஒருவர் மீது ஒருவர் ஏன் அன்பு வைத்திருக்கிறார்கள். இனம் புரியாதது அன்பு தானோ ...... இரத்த உறவே இல்லாத அவர்களுள் என்னதான் அப்படி இருக்கிறது?

பிருந்தா மாநிறம் .... அழகி என்று சொல்ல முடியாவிட்டாலும் சுமாரானவள் ...... தலை மயிர் வெளிறத் தொடங்கிய நேரம் அது ..... இருபத்தைந்து வயது இன்றோ நாளையோ அவளைத் தாண்டிச் சென்று விடும்.

அரும்பு மீசையுடனும் வாலிப மிடுக்குடனும் காதல் யுவராஜாவாகக் காட்சி அளிக்கும் நவீனுக்குப் பதினெட்டு தான் இருக்கும். சுயநினைவிற்கு வந்த நவீன், ''டீச்சர் இருட்டிப் போய் விட்டது'' என்றான்.

பிருந்தாவின் மனதில் அவ்வார்த்தை தைத்தது.

''விளக்கைப் போடட்டுமா?'' நவீன் தான் சொன்னான். ''ம்ம்'' ..... என்றாள் பிருந்தா.

கண்களைத் துடைத்தபடி ''நில்லும் நவீன், முகம் கழுவிக் கொண்டு வாறன், டீ சாப்பிட்டுப் போகலாம். கதைத்துக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை......''

நவீன் பெருமூச்சொன்றை விட்டவாறு நிமிர்ந்து உட்கார்ந்தான். உள்ளே சென்ற பிருந்தா சிறிது நேரத்தில் டீ கொண்டுவந்து நவீனிடம் நீட்டினாள்.

''தாங்ஸ்'' என்றான் நவீன்.

''யாருக்கு?'' - பிருந்தா.

''டீச்சருக்குத் தான்'' - நவீன்.

''எனக்கில்லையா'' - இருந்தபடி பிருந்தா.....

சிரிப்பொன்றைப் பதிலாக்கிவிட்டு வீட்டுக்குப் போகத் தயாரானான் நவீன் -

எட்டுமணி ஆகிவிட்டது.

❋ ❋ ❋

# அத்தியாயம் இரண்டு

அன்று வெள்ளிக்கிழமை

மாணவர்கள் எல்லோரும் பிரார்த்தனை மண்டபத்தில் கூடினார்கள். வெள்ளிக்கிழமை ஆதலால் தேவாரத்துடன் ஆரம்ப மாகிய பிரார்த்தனை ''நமச்சிவாய வாழ்க'' எனத் தொடர்ந்தது.

ஆனைமுகனை அழைத்து நமப்பார்வதிபதையே என முடிந்ததும் அதிபர் சொற்பொழிவுக்குத் தயாரானார். அன்று இரண்டு மூன்று பேச்சுக்கள் இருக்கும்.

நேரம் சென்று கொண்டிருந்தது.

பிரார்த்தனை முதலாம் பாடத்திற்குரிய நேரத்தினையும் விழுங்கிவிட்டது.

அன்று சிவக்கொழுந்து மாஸ்டரின் சொற்பொழிவு நன்றாகத் தானிருந்தது. தனது கரிய உதடுகளைப் பிதுக்கி அனைத்து ராகத்துடன் கூடிய பாடல்களையும் பாடித் தனது 'சிற்றுரையை' முடித்தார்.

மாணவர்கள் 'அப்பாடா' போட்டார்கள்.

பெருமூச்சுடன் ஒப்புக்காக்க் கைதட்டினார்கள். அதில் சலிப்புத் தன்மை தெரிந்தது. இந்த நாளில் யார்தான் பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்கிறார்கள் ..... கால்வலிக்க - மனம் சலிக்க, ''ஏன் இந்த வெள்ளிக் கிழமை வருகின்றதுவோ''.... மாணவர்கள் மனம் நினைத்தது.

இரண்டாவது பாடத்தினையும் தனதாக்கிக்கொண்ட பிரார்த்தனைக் கூட்டம் ஒருவாறு முடிந்து மாணவர்கள் தங்கள் வகுப்பறை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். வழமைபோல் மாணவர் தலைவர்களின் வழி நடத்தலில் வரிசை வரிசையாக மாணவர்கள் விரைந்தனர்.

பட்டு வேட்டி கட்டி, சில்க் சேட் அணிந்து வந்திருந்தான் நவீன். பெல்ஸ்ஸூம் மொடேன் கேட்டுகளுடனும் காட்சி தருகின்ற அவனை இன்று இக்கோலத்தில் பார்த்ததும் வித்தியாசமாக இருந்தது.

''என்ன தம்பி! சிவப்பழமாகக் காட்சி தருகின்றீர்'' ராமனாதன் ஆசிரியர் நவீனிடம் கேட்டார்.

சிரிப்பொன்றைப் பதிலாக்கிவிட்டு நழுவிவிட்டான் நவீன்.

அவனது கண்கள் பிருந்தாவைத் தேடின.

அப்போது -

பிருந்தா ஆசிரியர் அறையில் இருந்தாள். அன்றைய தினசரியைப் புரட்டிய வண்ணம் இருந்தாள். பத்திரிகைகளில் வழமையான செய்திகளை விடப் புதிதாக ஏதும் இல்லாததால் திருமதி நாகநாதன் ஆசிரியரின் பக்கம் திரும்பி, ''மிஸ், சிரித்திரன் ஒருக்காத் தருகிறீர்களா?'' என்றாள் ..... திருமதி நாகநாதன் தன்னிடமிருந்த சிரித்திரன் சஞ்சிகையை நீட்டினார்.

பக்கங்களைப் புரட்டிய பிருந்தா -

பதினெட்டாம் பக்கத்தில் வந்திருந்த புதுக்கவிதையைத் திரும்பத் திரும்ப விரும்பிப் படித்தாள்.

நன்றாக இருந்த அக்கவிதையைத் திரும்பத் திரும்ப மனதில் ரசித்துப் பார்த்தாள். ஆழப் பதிந்துவிட்டது. புதுக்கவிதையை அவள் விரும்பிப் படிப்பவள். அப்படியானால் மரபுக்கவிதைக்கு விரோதியல்ல ...... ஏதோ ஒரு ஈர்ப்பு ..... சிறுகதை நாவல்களில் உள்ள ஈர்ப்பு புதுக்கவிதையிலும் அவளுக்குண்டு.

முன்பு இப்படித்தான்,

ராஜநாயகம் ஆசிரியர் பிருந்தாவிடம் ஒரு சஞ்சிகையை நீட்டி, ''மிஸ், இதில் உள்ள புதுக்கவிதை பற்றி என்ன நினைக்கிறீர்?'' என்றார். அவரை நிமிர்ந்து பார்த்த பிருந்தா,

''மாஸ்டர், இப்ப வருகின்ற புதுக்கவிதைகளை விரும்பி வாசிப்பவர் ஒரு சிலரே..... ஈழத்தைப் பொறுத்தவரை, சிந்தாமணி,தினகரன், வீரகேசரி, மல்லிகை, சுடர், சிரித்திரன் இன்னும் எத்தனையோ பத்திரிகைகள், சஞ்சிகைகள் புதுக்கவிதைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. இவற்றில் மனதில் நிற்கும் கவிதைகள் ஒரு சிலவே. அப்படியாயின் தரமற்றவையை ஒதுக்கிவிடமுடியாது. தரமற்றவை எனினும் அவற்றை விமர்சித்தாவது தரமானது உருவாக வழி அமைக்கலாம் ..... நீங்கள் தந்த சஞ்சிகை கூட ஈழத்தில் இலக்கியத் தாக்கம் ஏற்படுத்தியதுதான். இப்போது இதில் உள்ள கவிதை ஏதோ என் மனதில் பதிய மறுக்கிறது.''

''ஏன்'' என்று இடைமறித்தார் ராஜநாயகம் மாஸ்டர். ''கவிதைக்கு அழகு தேவைதான் ..... அது ஆபாசமாகக் கூடாது என்பதை விரும்புபவள்'' என்று கூறினாள். நறுக்குத் தெரிந்தால் போலிருக்கிறது.

''இன்று வரவேற்கப்படுவது இப்படியான கவிதைகள் தானே'' என்றார் ராஜநாயகம் .

''இன்று வரவேற்கப்படலாம். நாளைய சரித்திரத்தில் இடம் பெறுமா என்பது சந்தேகமே''- கூறினாள் பிருந்தா. ''கோவில்களின் கோபுரங்களில் உள்ள சிற்பங்கள் பற்றி என்ன கூறுகின்றீர்கள்? அதுவும் ஆபாசம் தானே?'' - இது அவர்

விடமாட்டார் போலிருந்தது பிருந்தாவிற்கு. ''சிற்பி வடித்தது அது ..... கலை நெஞ்சத்துடன் பயபக்தியுடன் பார்த்தால் அது ஆபாசமாகப் படாது''.

அவளது பதிலைக் கேட்டு மடங்கி விட்டார் ராஜநாயகம் மாஸ்டர். வகுப்பிற்கு வந்தாள் பிருந்தா.

அப்போது தேனீர் இடைவேளை விட்டுத் தொடங்கியிருந்தது.

அன்று இலக்கியத் தர்க்கம் புரிந்த ராஜநாயகம் மாஸ்டர் இன்று வேறு பாடசாலையில் படிப்பிக்கிறார். மாற்றத்தில் சென்று

விட்டார். பாடத்தில் முழுக்கவனத்தையும் செலுத்திப் படிப்பித்துக் கொண்டிருந்தாள் பிருந்தா.

இடையில் சுற்றறிக்கை ஒன்று வந்தது.

ஆசிரியர் சங்கக் கூட்டத்திற்கான அழைப்பு ..... அதில் கையொப்பமிட்டுவிட்டுப் பாடத்தைத் தொடர்ந்தாள். பசி வந்த நேரமோ என்னமோ மாணவர்கள் அமைதியாக இருந்தார்கள். அவர்களின் அமைதி பிருந்தாவிற்கு நன்றாகப் பட்டாலும் ஏதோ மாதிரி இருந்தது.

நவீன், அதிபரின் அறைக்கு அருகில் இருந்த அறைக்குள் நுழைந்து வெண்கட்டிகளைப் பெற்றுத் தனது வகுப்பிற்குள் நுழைந்தான்.

வகுப்பறைகளுக்கு அருகில் மாமரங்கள் அடர்ந்து பரவி வளர்ந்திருப்பதால் மத்தியான வேளையிலும் குளிர்ச்சியாகத்தான் இருக்கும்.

* * *

# அத்தியாயம் மூன்று

"நவீன் வாரீரா யாழ்ப்பாணம் கடைப்பக்கம் போயிட்டு வருவோம்".

வாசலில் படியேறி வந்தவனை பிருந்தா கேட்டாள். நடந்து கொண்டே பிருந்தாவைப் பார்த்தான்.

அப்போதுதான் குளித்திருந்தாள் பிருந்தா.

மணம் இனிதாக வீசியது ..... பவுடர் அளவாகப் பூசிய அவளது முகம் செம்மை படர்ந்திருந்தது.

நான் ரெடி என்றான் நவீன். அவன் மட்டும் என்னவாம் அழகாகத்தான் இருந்தான். ஐ லவ் யு பனியன் மார்பை அலங்கரிக்க, சிஸ் மீ என்று முழங்காலுக்கு மேலாகத் தொடையில் ஒட்டப்பட்ட பெல்ஸ், செருப்பு, மார்பில் தொங்குகின்ற '234' நம்பர் பொறித்த வெள்ளிச் செயின்- டீன் ஏஜ் வாலிபனல்லவா? கண்ணுக்கு அழகாகத்தான் இருந்தான்.

பிருந்தாவும் நவீனும் தேனீர் அருந்திவிட்டுப் புறப்பட்டனர்.

வெகு நேரம் காத்திருக்க வைக்காது பஸ் வந்து அவர்களை ஏற்றிச் சென்றது.

ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி வாங்கி முடித்துவிட்டுப் பஸ் நிலையம் நோக்கித் திரும்பினார்கள்.

"வாரும் டீ குடிச்சிட்டுப் போகலாம்" பிருந்தா அருகிலிருந்த ரெஸ்ரோரன்ட்டுக்கு அழைத்தாள்.

'டீ' என்றதும் நாவில் நீர் ஊறியது நவீனுக்கு.

திரும்பி பிருந்தாவுடன் நடந்தான் ......

உள்ளே -

பிருந்தாவே ஆடர் கொடுத்தாள். வெயிட்டர் வெள்ளித்

தட்டில் பலகாரங்களைக் கொண்டு வந்து வைத்தான்.

"சாப்பிடுமன்'' அவள்தான் கூறினாள்.

எடுக்க அவன் மனம் துடித்தது. நாகரீகம் பார்க்கவும் மனம் பரபரத்தது.

டீ சாப்பிட்டதும் வெயிட்டர், பில்லைக் கொண்டு வந்து மேசை மீது வைத்தான்.

நவீன் பாக்கெட்டுக்குள்ளிருந்து காசை எடுக்க முன்னர் பிருந்தா முந்திக் கொண்டாள். ''சும்மா இரும் நவீன் ..... நான் தானே உம்மை அழைத்தது. நீர் கொடுப்பது முறையல்ல. நான் கொடுக்கிறேன்''. பிருந்தா பில்லுக்குப் பணத்தைச் செலுத்தினாள்.

''டீச்சர் இதுக்காவது நான் .... ஆம்பிளைக்குப் பெண் செலவழிக்க நான் சலுகைகளை அனுபவிப்பது எனக்கு ஒரு மாதிரி இருக்கிறது. என்னை இன்சல்ட் பண்ணி விட்டீர்கள்''. நவீன் வேதனையுடன் கூறினான். ''நவீன் .... நான் உமக்கு இன்சல்ட் பண்ணவில்லை. வயதில் குறைந்த நீர் எனது மாணவன் கூட. அதோட எனது தேவைக்காக கடைப்பக்கம் நான் அழைத்ததும் மறுக்காமல் நீர் வந்தனீர். உமக்கு நான் ஏதாவது வாங்கித் தராட்டி எனக்கு நன்றாக இராது. அது தான் இப்படி .....'' பிருந்தாவின் கண்கள் பனித்திருந்தன ......

நவீனின் மனம் சீயென்றது. பாவம் டீச்சரின் மனம் தன்னால் வேதனைப் பட்டு விட்டது. ''ஓ! ஐ ஆம் சாரி டீச்சர் ......''

சொல்லத்துடித்தான் முடியவில்லை ...... மனதுள் சொல்லிக் கொண்டான். அவளை எப்படியாவது சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காக ''டீ வாங்கித் தந்தீர்கள். சாப்பிட்டதும் அது மறந்து ஞாபகத்தில் இருந்து அழிந்து விடும். ஞாபகம் வைத்திருக்கக் கூடியதாக ஏதாவது வாங்கித் தந்திருக்கலாமில்லையா?''.....

இதைக் கேட்டு பிருந்தா சிரித்தாள்.

"ஓ அப்படியா? வாரும் வாங்கித் தருகிறேன்" என்றாள் பிருந்தா. பேனை ஒன்றைப் பரிசாக அவனுக்குத் தந்தாள் பிருந்தா. அதைப் பெற்றுக் கொண்ட நவீன், "மாணவனை வழிநடத்த இந்த எழுதுகோல் போதும் என்று நினைக்கிறீர்களா டீச்சர்?" என்று கேட்டான்.

அவள் சிரித்தாள்.

இருவரும் வீதியில் இறங்கி நடந்தார்கள்.

அவர்கள் செல்ல வேண்டிய பஸ், காத்திருந்தது போல் இவர்கள் ஏறியதும் சீறிக் கொண்டு புறப்பட்டது.

டீசல் நாற்றம் மூக்கைத் துளைக்க, புகையைப் பின்னோக்கித் தள்ளியபடி பஸ் புறப்பட்டது.

முன்னாலிருந்து மூன்றாவது சீட்டில் வசதியாக நவீனும் பிருந்தாவும் அருகருகே அமர்ந்து கொண்டனர்.

வீட்டிற்கு வந்ததும் -

நவீன் பார்சல்களை மேசையில் வைத்து விட்டு "டீச்சர் நான் போய் வருகிறேன்" என்றான்.

"நன்றி நவீன். உமது உதவியை நான் மறக்கமாட்டேன்" என்ற பிருந்தாவைப் பார்த்துச் சிரித்து விட்டு .....

"நானும் தான் மறக்க மாட்டேன் - ஐமீன் உங்கள் அன்புப் பரிசு" - பேனாவைக் காட்டினான் .....

அவனது மார்பில் ஐ லவ் யு பெரிதாகப் பார்த்துச் சிரித்தது... கேற்றைத் தாண்டி வீடு நோக்கிப் புறப்பட்டான் நவீன்.

***

# அத்தியாயம் நான்கு

வானொலியில் இன்றைய நேயர் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. படுக்கையில் சாய்ந்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள் பிருந்தா.

தலைமாட்டில் இரண்டு மொத்தமான தலையணைகள் வைத்திருந்ததால் கொஞ்ச நேரம் வசதியாக இருந்தது அவளுக்கு. இன்றைய நேயரின் தெரிவுகளில் ஒன்றான - மாடப்புறா படத்தில் சுசீலாவும் சூலமங்கலம் ராஜலட்சுமியும் பாடிய 'மனதில் கொண்ட ஆசைகளை மறந்து போய் விடு' பாடல் நடந்தது. கேட்டுக் கொண்டிருந்த பிருந்தாவின் மனதில் சிறிது மாறுதல் காணப்பட்டது.

கண்கள் ஏனோ பனிக்கத் தொடங்கின.

ஏன்?

அவளது கலக்கத்தின் காரணம் என்ன?

ஓ ..... அந்த நிகழ்ச்சி ஞாபகத்தில் வருகிறது ......

'எது எது எப்ப வரணுமோ அது அது அப்பப்ப வந்துதான் தீருமோ?' பிருந்தா.....!

அழகில்லாவிட்டாலும் அற்புதமான மலர் .....

அந்த மலர் கருகி நிலத்தில் வீழ்ந்து மண்ணாகப் போகின்றது ..... விதைப்பதெல்லாம் முளைப்பதில்லை. அப்படியாயின் அவள் விதைத்தது தான் என்ன?

கண்ணீர் தலையணையை நனைத்தது.

ஓ ..... ஓ ..... இடது கை விரல்களால் தலையணையின் மூலையை உருட்டி ..... உருட்டி .....

அழுகையைக் கட்டுப்படுத்தும் பிரயத்தனம் வெற்றியளிக்க வில்லை ..... ஏன்? இந்த நேரத்தில் அவளது கடந்து போன, மறக்கத் துடிக்கின்ற நினைவுகள் வருகின்றன.

தனிமை தான் காரணமோ?

அப்படியாயின் ......?

துணையேயில்லாமல் காலம் காலமாக வாழ்வற்ற வாழ்வு வாழ்வது தான் அவளது விதியா?

விதியை மாற்றிவிடலாம் என்கிறார்களே ......

அது முடியுமா.....?

விழிகளில் தேங்கிக் கன்னங்களை நனைத்துக் கொண்டிருக்கும் உப்பு நீர் ஆறாகப் பெருகியது ..... அழுகையை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை ...... குமுறிக் குமுறி அழுதாள்.

மனதில் கொந்தளிக்கும் அலைகடல் பெருக்கெடுக்க கண்ணீராகப் பெருகும். கண்ணீராக வெளிவராவிட்டால் உடல் நலத்தைப் பாதிக்கும். இங்கு இவளுக்கு அழுகையை அடக்க முடியவில்லை.

கல்யாணமே ஆகாமல் கன்னித் தன்மையே இன்னும் கழியாமல் ஒருத்தி எத்தனை காலத்திற்குத்தான் வாழ முடியும்? அவளை ஒத்த பெண்களெல்லாம் பிள்ளை குட்டிகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இவளுக்கோ .....?

இவளுக்கு வாழ்வு இல்லையா ......? சபிக்கப்பட்ட மலரோ ......?

திரும்பிப் படுத்தவள் ஜன்னல் ஓரம் உள்ள கதவுகளிரண்

டையும் திறந்து விட்டாள்.

காற்று உள்ளே வீசும்போது இதமாகத்தானிருந்தது. மனதுக்கு ......?

சிவந்திருந்த கண்களை ஒரு முறை அழுத்தி ஒதுக்கிக் கொண்டபோது கடி எடுத்தது ....... எரிச்சலாகவும் இருந்தது.

தந்தை என்ற ஒரு காவலன் இருந்தாலாவது பாதுகாப்பாக இருந்திருக்கும். இப்போது - தனிமரமாக, தாய்க்குத் துணையாக அவளும், அவளுக்குத் துணையாகத் தாயும் இருந்து வருகின்றனர்.

அவளது தந்தை இறந்து இன்னும் ஓராண்டு நிறைவடையவில்லை. இன்னும் இரண்டொரு மாதத்தில் ஆண்டுத் திவசம் வந்துவிடும்.

கல்வித் திணைக்களத்தில் குமாஸ்தாவாகக் கடமையாற்றிய அவளது தந்தை வீதியில் வரும் போது கார் ஒன்றினால் மோதுண்டு அவளது தாயாரின் பூவையும் பொட்டையும் பறித்து வெண்துகிலை மட்டும் பரிசளித்து விட்டுச் சென்று விட்டார்.

தந்தையின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்குத் தொண்டையில் ஏதோ ஒன்று அழுத்த விறைத்து நின்றாள். நேரம் தன் பாட்டிற்குப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

''பிருந்தா'' - அம்மா.

''பிருந்தா''

''என்னம்மா''?

''இப்படி எத்தனை தடவை கூறுவது? உட்கார்ந்து கொண்டிருக்காதே மூதேவி பிடித்துவிடும் என்றால் கேட்கிறாயில்லையே ....... எழுந்திரம்மா'' என்று தாயார் கூறினார்.

''என்னம்மா? பிடித்த மூதேவி போதாத எனிமேல் தான் அது பிடிக்கப் போகுதா?'' என்று கூறத்துடித்தாள் சொல்லவில்லை.

கலைந்திருந்த தலைமயிரைக் கோதி முடிந்து விட்டாள் தாயார். ''என்னால் தாயாருக்குத்தான் எவ்வளவு வேதனை.....''

பின்பு வீட்டிற்குள் முகம் கழுவச் சென்றாள் பிருந்தா.

கிணற்றடிக் கல்லொன்றில் ஜோடிப்புறாக்கள் சல்லாபித்துக் கொண்டிருந்தன. அதைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தவள் ஆத்திரம் பொங்கச் சிறிய கல்லொன்றை எடுத்தெறிந்து கலைத்தாள். ஏமாற்றங்கள் தந்த விரக்தி இப்போது ஆத்திரமாக வெளிவந்தது. எந்தப் பெண்ணும் தன் உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு யாரையும் நாடமாட்டாள். அவளை அவளது கவசங்கள் தடுத்துவிடும். பெற்றவர்களிடமோ தன்னினத்தவர்களிடமோ தனக்குத் திருமணம் செய்து வைக்கும்படி கேட்க மாட்டாத மனநிலை பெண்ணுக்கு உண்டு. ஆணுக்கும்தான். பிருந்தா இதற்கு விதிவிலக்கல்ல. கல்பட்டதும் புறாக்கள் கத்திக் கொண்டு பறந்தன ......

அவளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. என்ன செய்வாள் பாவம்? முகம் கழுவிக்கொண்டு சாமியறை நோக்கித் திரும்பினாள். கண்ணனின் படத்திற்கு முன் மண்டியிட்டுக் கண் மூடித் தியானித்தபடி இருந்துவிட்டுத் தேனீர் குடிக்க வெளியேறினாள். வேதனைகள் காஞ்சோண்டி இலை மாதிரி ..... மனதில் பட்டுவிட்டால் அதன் அரிப்புவேதனை மாறாது. பிருந்தாவுக்கும் அப்படித்தான் சில சமயங்களில் செந்தமிழ்ச் செல்வி மாதிரிச் சிரித்துக் கலகலப்பாக இருக்கிறாள். சிலசமயங்களில் கண்ணீரே துணை என அடங்கி விடுகின்றாள். பார்ப்பவர்களுக்கு அழகிய புறா தான் .... ஆனால் அவளோ தனக்குள் எரி நட்சத்திரமாய் அல்லவா இருக்கிறாள்.

* * *

# அத்தியாயம் ஐந்து

அன்று வெள்ளிக்கிழமை -

பிருந்தாவின் அழைப்பின் பேரில் நவீனும் புறப்பட்டான் கோவிலுக்கு.

''நீர் எவ்வளவு வடிவாயிருக்கறீர் இந்தப் பட்டு வேட்டி சால்வைக்கு?'' குளித்து, புதிய பட்டு வேட்டிக்குள் நுழைந்து தோளில் ஒரு சால்வையைச் சுற்றிக்கொண்டு நெற்றியில் மெல்லிய திருநீற்றுக் கோட்டுடன் சிரித்தபடி நின்றவனைப் பார்த்துக் கேட்டாள் பிருந்தா.

''நீங்கள் மட்டும் என்னவாம்? நதியா மாதிரி....''. என்றான். சிரித்து விட்டு நன்றி என்றாள்.

''டீச்சர், நதியாவும் இப்படித்தான். அவளுக்கும் எந்த உடுப்பும் பொருந்தும். இக்கால ஆடைகள் எல்லாம் அவளுக்கு அழகூட்டும்''.

''ஏன், நீர் நதியாவின் ரசிகனோ!''

''நதியா மட்டுமில்லை. அழகு எங்கு இருந்தாலும் ரசிப்பேன். அழகை ரசிக்கத் தெரியாட்டி மனிதன் பேயன் தான்.'' இருவரும் நடந்தார்கள்.

அவனே தொடர்ந்தான் -

''ஏன் டீச்சர் நீங்கள் அழகு என்பதில் சந்தேகமில்லை. அன்பின் இருப்பிடம் அழகின் உறைவிடம் என்பார்கள் அது மாதிரி''

''என்ன நவீன், நீர் நல்ல ரசிகன் தான்''

"நன்றி"

மௌனமானார்கள். வழியில் ராஜநாயகன் மாஸ்டர் அவரது 'வெஸ்பா' ஸ்கூட்டரில் கடந்து சென்றார் - புன்னகை ஒன்றை உதிர்த்தபடி.

''நவீன், உந்த மாஸ்டர் எங்கட பள்ளிக்கூடத்தில் தான் படிப்பிக்கிறார். எப்பவும் அவருடன் புதுக்கவிதை பற்றிச் சர்ச்சை நடக்கும்.''

''ஏன் டீச்சர், நீங்களும் புதுக்கவிதைகளை ரசிப்பீர்களா?''

"நல்லவை எங்கிருந்தாலும் அதுமரபுக்கவிதையாயினும், புதுக்கவிதையாயினும் நிச்சயம் ரசிப்பேன்''

''உங்களுக்குப் பிடித்த நூலாசிரியர் யார் டீச்சர்?''

''ஜெயகாந்தன்''

''நான் கூடத்தான் டீச்சர். அவர் எழுதிய *கங்கை எங்கே போகிறாள்* நாவலை ஐந்து முறை வாசித்திருக்கிறேன்''. காலில் மிதிபடுகின்ற குருமணலை மோதியபடியே தெற்கு வாசலையும் கடந்து தேர் முட்டியடிக்கு வந்தார்கள்.

''உள்ளே வாரீரா? சுத்திக் கும்பிடுவோம்''

"நீங்கள் எங்க கூப்பிட்டாலும் வரத் தயாராய் இருக்கிறேன்''.

சிரித்தாள்.

"அங்கு மட்டுமல்ல, வாழ்க்கைத் துணையாகவும்தான்"

சொல்லவில்லை, நினைத்தான்.

முருகன், பிள்ளையார், வயிரவர் எல்லாரையும் கும்பிட்டு விட்டுச் சனீஸ்வரனுக்கு அர்ச்சனை பண்ணினாள்.

''நீர் அர்ச்சனை செய்யேல்லையே?'' கேட்டாள்.

'இல்லை' எனத் தலையாட்டினான் நவீன்.

ஐயரிடம் ஒரு ரூபா டிக்கட்டை நீட்டி ''நவீன் மக நட்சத்திரம்'' என்றாள்.

நவீனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'இவளுக்கு எப்படித் தெரிந்தது எனது நட்சத்திரம்?'

ஐயர் பிரசாதம் தந்தார்.

வாங்கியபடி வெளியேறினார்கள்.

மேற்கு வீதியில் கச்சான் ஒரு பக்கட் வாங்கிக் கொண்டாள்.

இருவருமாக வீடு நோக்கி நடைபயின்றார்கள்.

கச்சானை பிருந்தாவே உடைத்துக் கொடுத்தாள்.

வாங்கி வாயில் போட்டபடியே நடந்த நவீனுக்கு அவளின் செய்கையை ரசிக்காமல் இருக்கவும் முடிய்வில்லை.

''இவள் என்னை லவ் பண்ணுகிறளா?''

''ஏன் நேரடியாகவே கேட்டிருக்கலாமே 'நவீன் ஐ லவ் யு என்று''

''ஓ டீச்சர், என்னை நீங்கள் குழப்புகிறீர்கள்''..... நினைத்தான் இப்படி. ஆனால் கேட்கவில்லை.

பிருந்தாவின் தாயார் தந்த சூடான தேனீரை வாங்கிப் பருகிய பின், தன் வீடு போவதற்கு எழுந்தான்.

''மெத்தப் பெரிய உபகாரம் தம்பி ..... பிருந்தாவுக்குத் துணையாக நீங்கள் இருக்கிறதாலே எனக்குச் சந்தோஷமே''. பிருந்தாவின் தாயார் சொன்னது இவனுக்குள் குதூகலம் வந்தது மாதிரி இருந்தது.

''வழித்துணை மட்டுமா அம்மா?... காலமெல்லாம் வாழ்க்கைத் துணையாக்கக் கூட இருந்து விடுகிறேன் - நீங்கள் விரும்பினால்'' சொல்லவில்லை நடந்தான்.

முன் வீட்டு வேலியில் யாரோ கறையான் தட்டியது இவனுக்குக் கேட்டது. என்னுள்ளும் கறையான் ஒட்டிக் கொண்டதே! யார் தட்டி விடப் போகிறார்கள்?

* * *

# அத்தியாயம் ஆறு

லைபிரரியில் இருந்து எடுத்து வந்த *உன்னை ஒன்று கேட்பேன்* நாவலை அப்போதுதான் வாசித்து முடித்தாள். ரேடியோவில் மெல்லிய சுருதியில் காதல் பாட்டுகளை ஓடவிட்டாள். ரூபவாஹினியிலும் நல்ல நிகழ்ச்சி இருந்ததனால் இசையில் மூழ்கிப் போனாள்.

நேரம் தன்பாட்டிற்கு ஹாயாய்ச் சென்று கொண்டிருக்க ..... முற்றத்துத் தென்னை மரத்தினூடே மெல்லியதாக வந்த குளிர் காற்று காதோரம் தடவிச் சென்றது.

நிமிர்ந்து இருந்து பார்த்தாள். அடுக்களையில் அம்மா பால் சுடவைத்துக் கொண்டிருப்பது மெல்லியதாகத் திறந்திருந்த கதவினூடே தெரிந்தது.

காலாற எழுந்து நடந்துவிட்டு,

பக்கத்து வீட்டு அன்ரின் வீடு நோக்கிச் சென்றாள்.

''அவர்கள் ஏதாவது வீடியோவில் படங்கள் போட்டாலும் போடுவார்கள்''

ஆனால் அன்று படம் போடவில்லை.

டி.வியில் கால் பந்தாட்டம் - ஓடி ஓடி விளையாடிக் கொண்டிருந்தான். 10 மரடோனாவினுடையது. அவனைப் பார்த்தால் அச்சொட்டாக நவீன் மாதிரி இருக்கும்.

''ச்சா, நம்ம நவீன் மாதிரி இருக்கானே!''

முன்பு கூட பாடசாலை இல்ல உதை பந்தாட்டத்தின்போது கென்னடி இல்லத்தின் சார்பில் நவீன் விளையாடியது நினைவில் வந்து ஓடியது.

மெல்லியதாய் அரும்பியது புன்னகை.

உள்ளே அன்ரியின் பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்தார்கள். மாமா மட்டும் டிவிக்கு முன்னால் - கால் பந்தாட்டம் பார்த்தபடி. சிறிது நேரம் இருந்து பார்த்தாள் - மனதில் ஏதோ கள்ளம் புகுந்த மாதிரி .....

மரடோனாவும் நவீனும் கண்முன்னால் ..... சிறிது பொழுதுதான். தன்னைச் சுதாகரித்துக் கொண்டு எழுந்தாள்.

அன்ரி கேட்டார் -

''பிருந்தா டீ சாப்பிட்டு போயேன்''

மறுக்க முடியவில்லை.

இதமுடன் பொருத்தி டீ ஐக் குடித்தாள்.

''மாலையில் நவீன் சொன்னது ஞாபகத்தில் வந்தது. ''டீச்சர், நதியா மாதிரி இருக்கிறது உங்களைப் பார்க்க ..... சில சமயம் பொறாமை தான் ..... உங்களை love பண்ணணும் மாதிரி ஒரு துடிப்பு ...... கனவில் நதியாவுடன் சல்லாபித்த ஒரு விதக் களிப்பு மாதிரியோ தெரியாது .....''

சிரித்த படி. சொன்னவனைப் பார்த்து -

''நல்லா ஜோக்கடிக்கத் தெரியுது. காதல் முத்திப் போச்சு. நல்லாப் பழுத்த எலுமிச்சம் பழத்தைத் தலைக்குத் தேய்த்து முழுகும் சரியாப்போம்''

"உண்மையாக ஐ லவ் யு டீச்சர்"

என்றானே சிறியவனான மாதிரி.

இவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''எப்படி இவனால்?''

ஆத்திரப்படவோ அனுதாபப் படவோ முடியவில்லை. ''டீன் ஏஜ் ஆசைதான் ...... கனவுகள் இப்படித்தான் யாரையும் அலைக்கழிக்கும். நவீன்!, நான் உமக்குப் பாடம் போதிக்கும் குரு மாதிரி .... ச்சி .... நவீன், இப்படிப் பேசாதீர்'' சொல்லத்துடித்தாள்.

பதிலுக்கு அவன் காத்திருந்தால்தானே. சென்று விட்டான். தூரத்தே சைக்கிளை வேகமாக ஓட்டிச் செல்வது இவளுக்குத் தெரிந்தது.

இன்னும் காதல் பாட்டு ஒடிக்கொண்டிருந்தது. கட்டிலில் உட்கார்ந்தாள்.

''சரீ..... நவீன் ..... உம்மிடம் மரியாதை கொடுத்து நட்பாயிருத்தேன்? என்ன கேட்கிறீர்? உமது கேள்விக்கு விடை சொல்ல முடியாது. கடவுளே! உமக்கு எப்படிச் சொல்லித் தருவது?''

தாய் வந்து கூப்பிட்டாள்.

சாப்பிட்டாள். மனதுள் இன்னும் ஏதோ ஒன்று ..... ''அது என்ன பிருந்தா நீ காட்டியது பாசமா காதலா? உன்னாலேயே தீர்மானிக்க முடியாதபோது, யாரோ ஆண் சிறுபிள்ளை - எப்படி முடியும்? உன் அடிமனதைத் தொட்டுச் சொல் ..... நீ கூட வெளியிட முடியாதளவிற்கு பண்ணுகிறாய் .... காதல் தானே .....? ஒரு பொருட்டல்ல எனினும் காதல் காதல் தானே?''

எங்கிருந்தோ உள் மனது சொல்லியது - அடித்துச் சொல்லிற்று.

❋ ❋ ❋

# அத்தியாயம் ஏழு

அன்று -

வழக்கம் போலவே தாயின் துன்புறுத்தலின் பேரில் எழுந்து காலைக்கடனை முடித்து விட்டுப் புறப்பட்டான்.

''இன்று பிருந்தா டீச்சரின் பேச்சு இருக்கு'' வழிபாடு முடிய நண்பன் சொன்னான்.

இவனது அலுப்புப் பறந்து விட்டது.

தலையச் சரித்துக் கொண்டு தூரத்தே பார்த்தான்.

''பிருந்தா வரவில்லை......

பெண்கள் பஸ் போய் விட்டது''

நண்பன் நினைப்பூட்டினான்.

"நான் பிந்திப் போனேன்"

இவர்களுக்கு பஸ் வந்தது.

ஏறிக்கொண்டான்.

இன்றும் வழக்கம் போலே 'புட்போட்' பிரயாணம் தான். இவனைப் போலவே பலருக்கும் - குறிப்பாக டீன்ஏஜ் இளைஞர் களுக்கு புட்போட் பிரயாணம் விருப்பமானது. கண்டக்டர் கத்துவார் .....

''உள்ளே போ'' என்று.

யாரும் கேட்கத் தயாரயில்லை.

ஒரு நாள் பஸ்ஸை வழியில் நிறுத்தி ''நீங்கள் உள்ளே போகா விட்டால் பஸ் நகராது'' என்ற கண்டக்டரின் சொல்லுக்கு அடங்கி உள்ளே சென்றனர். பின் வழமை போலவே ......

"ஒரு நாளைக்குத் தவறி விழப்போகினம்" ஒரு வயோதிக மாது சொன்னது.

"அவங்கள் கேட்க மாட்டினமம்மா"

"விழுந்தாப் பிறகு தானே ஞானம் வருகுது".

திரும்பவும் அதே மாதிரி பாடசாலை மணி ஒலித்து ஓய்ந்தது. மாணவர்கள் வழமை போலவே வரிசை வரிசையாக மண்டபத்தில்.

"பிருந்தா டீச்சர் பேசுவார்"

நவீனுக்கு இருப்புக் கொள்வில்லை.

அவளின் முகத்தைப் பார்த்து விடவேண்டும் என்கிற துடிப்பு.

நேற்று முழுவதும் அவளைப் பார்க்காததால் ஏற்பட்ட துடிப்பு ..... நேற்று லீவு நாளாதலாலும், டியூசன் கூட இல்லாததினாலும் பிருந்தாவைச் சந்திக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது நவீனுக்கு.

"இன்று ..... அவள் எப்படிப் பேசுவாள்? இப்படித்தான் பேசுவாளோ!" மனது நினைத்துப் பார்த்தது.

பின்னால் இருந்தவன் நவீனைக் கிள்ளினான்.

"என்ன? உனது ஆள் இன்று பேசுகிறாளாமே!. உன்னை நினைத்துக் கொண்டு அவள் என்னென்ன உளறப் போகிறாளோ? பாவம் டீச்சர் அவருக்கேன் இந்த வேலை"....... சொன்னான்.

நவீனுக்கு ஒரு மாதிரி இருந்தாலும் "ச்சீ டீச்சர் நன்றாகப் பேச வேண்டும், இல்லையெனில் உங்களுக்கு மட்டுமில்லை எனக்கும் தான் அவமானம்," நவீனின் மனது படபடத்தது.

அதே சமயம் -

பிருந்தா ஆசிரியர் அறையில் தனது பேச்சுக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தாள். பாடசாலை வாழ்விலும் பல்கலைக்கழக வாழ்விலும் ஆசிரியப்பயிற்சிக் காலங்களிலும் பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றியவள், நீண்ட இடைவெளிக்குப் பிறகு

இன்று பேச நடுக்கம் பிடித்தாலும், மனதைத் திடப்படுத்திக் கொண்டு தயாராகி விட்டாள்.

ஓரத்தில் பாத்திமா டீச்சர் 'சார்' எண்ணிக் கொண்டிருந்தார். அவர் முஸ்லிம் ஆதலால் அவர் தனியே தனது தொழுகையை மேற்கொண்டார்.

திருப்புராணத்துடன் யாவரும் அமைதியாகி விட, நிமிர்ந்தபடி மேடையில் தோன்றினாள் பிருந்தா. இரட்டைப் பின்னல், சாந்துப் பொட்டு, மெல்லிய வீபூதிக் கோட்டுடன் தனது முத்துப்பல் உதடுகளில் சிரிப்பொன்று உதிர்த்த வண்ணம் ஆரம்பித்தாள்.

அவள் பேசுகையில், பச்சை நிற சாறியும் அதற்கேற்றாப் போன்ற பிளவுஸ்உம் அவளுக்கு மேலும் அழகூட்டின.''

''வானத்துத் தாமரை தரையில் பூத்ததுவா?''

நவீனைக் கிண்டல் பண்ண எண்ணி நண்பன் சொன்னான். நவீன் நிச்சயமாக இந்த உலகத்தில் இல்லை

'இளைஞர் எதிர்காலம்' -

காதல் ரசனை ததும்பப் பேச்சைப் பேசி முடித்தாள்.

கை தட்டல் ஒலித்தது. சிரிப்புடன் வரவேற்பை ஏற்றுக் கொண்டாள்.

அதிபர் சொன்னார்,

''பிருந்தா டீச்சர் நன்றாக மாணவர்களுக்காகவே அவர்கள் வரவேற்கும் விதத்தில் பேசினார். தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவரது பேச்சைக் கேட்க நாங்களும் விரும்புகிறோம்.''

மாணவர்கள் குதூகலித்து

கரகோஷம் எழுப்பினார்கள்.

நவீன் இந்த உலகத்தில் இல்லை.

மாணவர்கள் வகுப்புக்குத் திரும்பினர்.

நான்கு சுவர்களிலிருந்தும் 'நவீன்,' 'நவீன்' என்று பிருந்தா கூப்பிடுவது போல ஒரு பிரமை.

''என்ன பலமான யோசனை?''

பதில் வர மறுத்தது.

அவளே கேட்டாள்,

''பேச்சு எப்படி இருந்தது?''

''வொண்டர்பூல்'' என்று சைகையில் சொன்னான்.

இருவரும் நடந்தார்கள்.

ஆசிரியர் அறையைக் கடக்கும்போது திருமதி. நாகராஜா டீச்சர் சொல்வது காதில் விழுகிறது -

''பிருந்தா டீச்சரும் நவீனும் நல்ல ஒட்டு - காதலர் மாதிரி.''

"வித்தியாசமான வயது. எப்படி காதல் சாத்தியமாகும்?'' பாத்திமா டீச்சர் சொன்னாள்.

"அபூர்வராகங்கள் பார்க்கேல்லையா?''.... திருமதி. நாகராஜா டீச்சர்.

- பதில் ஏதும் வரவில்லை. பாத்திமா 'டீச்சர் மௌனமாகி விட்டார்.

இவர்களைக் கடந்து அதிபர் செல்வது தெரிந்தது. நவீன் எந்தவித சலனமுமின்றி வகுப்பறையினுள் சென்றான். பிருந்தவின் முகத்தில் புன்னகை மறைந்திருந்தது. எல்லாரும் எழுந்து ''வணக்கம் டீச்சர்'' என்று சொன்னார்கள். பதிலுக்குச் சுரமில்லாமல் ''வணக்கம்'' என்றபடி பாடத்தை ஆரம்பித்தாள்.

***

# அத்தியாயம் எட்டு

அஞ்சலகம் போய்த் தனது கணவனின் பென்ஷன் பணத்தை எடுத்து வீட்டிற்குள் நுழைந்ததும் பிருந்தா கட்டிலில் படுத்திருந்ததைக் கண்ட அவளது தாயார், குடையையும் பேர்ஸையும் மேசைமீது வைத்துவிட்டு, பிருந்தாவின் அருகில் உட்கார்ந்து, ஆதரவாக அவளது தலையை கோதி விட்டாள். அவளது தலையைத் தூக்கித் தன்மடிமீது வைத்துத் தடவிக் கொடுத்தாள். பின் -

எழுந்து பிளாஸ்க்கில் இருந்த பாலை எடுத்துக் கப்பில் ஊற்றி அலுமாரியில் புரொட்டினெக்ஸ் போத்தலை எடுத்துக் கரண்டியால் சிறிதளவு போட்டுக் கலக்கி பிருந்தாவிற்குப் பருக்கி விட்டாள்.

தாயார் அதுவரை எதுவும் கேட்கவில்லை.

மகளைப் பற்றித் தெரிந்தது தானே. களைத்து வந்திருக்கிறாள். எவ்வளவுதான் வளர்ந்தாலும் பெற்றவளுக்கு அவள் என்றும் குழந்தையே. பிருந்தாவிற்கும் தாயாரின் மடியில் படுத்திருந்து பருகுவது ஆறுதலாகவும் சுகமாகவும் இருந்தது.

கணவன் இறந்த பின் அவரின் பென்ஷன் பணம் போதாதிருந்தும் பிருந்தாவின் ஆசிரியத் தொழில் மூலம் மாதாந்தச் செலவைச் சமாளிக்க முடிகிறது. பிருந்தாவிற்கு என்று சீதனமாகக் கொடுக்க இருப்பது வெறும் காணி மட்டுமே.. வங்கியில் இருந்த பணம் கணவன் இறந்த போது எடுத்துப் பின் சிறுகச் சிறுகக் கனத்து இப்போது வெறுமையாக உள்ளது.

இருவராலும் முடியவில்லை வங்கியில் பணம் நிரப்புவதற்கு. பிருந்தாவிற்கு என்று நல்ல வாழ்க்கை வராமலா போய் விடும். வேண்டாத தெய்வங்களில்லை. விரதங்களுக்குக் கடவுள் பதில் தந்துதானே ஆக வேண்டும்? - நம்பினர்.

முன்பு வந்த வரன்களெல்லாம் சீதனம் அது இது என்று குழம்பிப் போயிற்று. சென்றவாரம் கூட புரோக்கர் கொண்டு வந்த பொருத்தம் எட்டில் செவ்வாய் என்று தவறிப் போயிற்று.

''ம் ......'' பெருமூச்சொன்று விட்டாள் தாயார். ''கணவன் இருந்திருந்தால் ஓரளவு பாதுகாப்பாக இருக்கும். வீட்டுத் தலைவன் என்கிற அந்தஸ்தில் பிருந்தாவின் திருமணத்தை ஓடி ஓடி முடித்திருப்பார்.''

கணவனின் நினைவு அவளை அழச் செய்தது.

அந்த விபத்து நடந்து, அவளது பூவையும், பொட்டையும் பறித்து, பிரேதமாக நாலு பேரின் உதவியுடன் ஹாலுக்குள் கொண்டு வந்து கிடத்திய போது -

''ஓ.......''

மார்பில் ஓங்கி அடித்து அடித்து அழுதாள். கதறினாள். பிருந்தா அப்போது ஆசிரியப் பயிற்சியில் இருந்தபடியால் பிறகு செய்தி கேட்டுத் துடித்து ஓடிவந்து அழுதாள் - உலகமே அவர்களுக்கு இருண்டது மாதிரி ......

''கடவுளே இது என்ன சோதனை?''

ஜனங்கள் கூடினர்.

அழுதார்கள்.

குருக்கள் வந்தார். ஈமக் கிரியைகள் நடத்தினார். பிரேதம் நாலு பேரின் உதவியுடன் ஊர்வலமாய்ச் சுடுக்காடு நோக்கிப் போனது.

இவர்கள் மட்டும்

அழுதபடி அழுதபடி ......

பிருந்தா சிறிது நேரம் அசந்து தூங்கிப் போனாள்.

தாயார் எழுந்து சாமி அறைக்குள் நுழைந்தாள்.

முருகன் - விஷ்ணு படங்களுக்கிடையே -

கணவனின் படம் சிரித்தபடி.

சந்தனக்குச்சியை எடுத்துக் கொளுத்தி வைத்தாள்.

கைகூப்பிக் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்து விட்டாள்.

கண்கள் மட்டும் கண்ணீரைச் சிந்தியபடி ......

துன்பம் மனதை அழுத்தும் போது அவள் இப்படித்தான் தணிந்து வந்து தியானத்தில் ஆழ்ந்து விடுகிறாள்.

வாசிலில் சத்தம் கேட்கத் திரும்பிப் பார்த்தாள்.

பிருந்தா நின்றிருந்தாள்.

வரும்படி கண்களால் அழைத்தாள்.

வந்து உட்கார்ந்து கொண்டாள்.

தந்தையின் படத்தையே உற்று நோக்கினாள்.

''தெய்வீகத் தன்மை பொருந்திய உடல், கண்கள், விபூதி ஒடி வீற்றிருக்கும் உங்கள் நெற்றி, புன்கைமட்டுமே எனக்கும் சொந்தம் என்கிற சிரிப்பு, .... ஓ ..... அப்பா! எப்படி உங்களால் சீக்கிரம் கடவுளிடம் செல்ல முடிந்தது. நான் இப்போ நரகத்தில்......''

கண்களை மெல்ல மூடினாள் -

மனது ஒருமுகப்பட்டது போல.

சிறிது ஆறுதலாக இருந்தது.

பாடசாலையில் நவீனையும் தன்னையும் இணைத்துப் பேசிய சுவரில் எழுதிய வாசகங்கள் ..... மனதில் சபலத்துடன் திரியும் ஆடவர்கள் ..... எல்லாவற்றையும் விழுங்கும் வாழ்க்கைச் சுறாக்கள் ..... எல்லாம் ஒரு கணம் மறந்து அன்பாயிற்றே! வீடுவரும்வரை .... இப்போது வரை இருந்த அந்த நிகழ்ச்சிகள், எரிச்சல்கள், ஆத்திரங்கள், நெருப்புப் பார்வைகள் எங்கே ஒளிந்து கொண்டன?

கடவுளே யாவருக்கும் நல்ல மனங்களைக் கொடு.

பிரார்த்தித்தாள்.

***

# அத்தியாயம் ஒன்பது

மாணவர்கள் அனைவரையும் பரீட்சைக்குத் தயார் படுத்திக் கொண்டிருந்தார்கள். சிறப்பு வகுப்புகள் எல்லாம் எடுத்துப் படிப்பித்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் நல்ல திறமைச் சித்திகள் பெற்றுப் பல்கலைக்கழகத்திற்கு எடுபடும் மாணவர்களைக் கொண்டது அக்கல்லூரி. தலைநகரின் நடுமையத்தில் இரண்டு மாடிக் கட்டிடங்களைக் கொண்டது அது.

அருகே பெரிய விளையாட்டு மைதானம்.

நூறு யார் தள்ளி நகரின் கலைக்கல்வித்துறைக்கென லைப்ரறி...... அப்பால் ரீகல் தியேட்டர்..... முனியப்பர் கோயில்..... திறந்த வெளி அரங்கு.... ஹோட்டல்.... மகளிர் கல்லூரி....

பிருந்தா படிப்பிக்கும் கல்லூரியில் உயர்தர வகுப்பு மட்டுமே பெண்களைப் படிக்க அனுமதித்திருந்தார்கள்.

இதனால் இளைய உள்ளங்களுக்குக் குதூகலத்திற்கும் குறைவில்லை.

அதிபர் கடுமையானவர். கட்டுப்பாடுகளில் கவனம் செலுத்தி வருபவர்; நல்லவர். பிருந்தா கூட கவனமெடுத்து மாணவர்களுக்குப் படிப்பிக்கவும் கல்லூரி விழாக்களில் விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளில் கல்லூரிக்காக உழைக்கவும் முடிகிறது.

இப்போது கூட -

பரீட்சைக்கு சிறப்பு வகுப்பு எடுத்து மாணவர்களுக்கு மீளப்படிப்பு நடத்தத் தொடங்கியிருந்தாள்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தனி அக்கறை கொண்டிருந்த பிருந்தா, நவீனின் பரீட்சை வெற்றியிலும் தனது முழுப்பங்கையும் செலுத்தினாள்.

வகுப்பிலேயே நல்ல மாணவனும் படிப்பில் கெட்டிக் காரனுமான நவீன் சிறந்த புள்ளிகளுடன் பல்கலைக்கழகத்திற்குள் அனுமதி பெற வேண்டும் என்பது அவளது முழுமூச்சுடன் கூடிய உழைப்பு மட்டுமின்றிப் பிரார்த்தனையாகவும்கூட இருந்தது.

அதனால்தான் நவீனைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று சிறப்பு வகுப்பு கூட நடத்தினாள்.

''நவீன்! நீர் நல்லாப் படிக்கக்கூடியவர். மனதுகளை அலைய விடாது நல்லாப்படியும்.... நான் என்றும் உறுதுணையாக இருப்பேன்..... நிச்சயமாக நீர் பல்கலைக்கழகத்துக்கு எடுபட்டு எமது கல்லூரிக்குப் பெருமை வாங்கித் தருவது மாத்திரமன்றிப் பிறகு ஐந்தாண்டுகளில் ஒரு பட்டதாரியாகவும் கூட வருவீர்''.

''ம்..... நான் பட்டதாரியாக வந்தபின் நாட்டிலுள்ள வேலையற்றோர் சங்கத்தில் உறுப்பினர் ஆகிறதா?'' சிரித்தபடி கேட்டான்.

அவனது தலைமயிரை வருடி..... தலையை உலுப்பி விட்டாள். பின் தலையைத் தாழ்த்தி, முகத்தைச் சரித்து, கூர்ந்து நவீனைப் பார்த்தபடி கேட்டாள்.

"நவீன் எனக்காகவாவது பரீட்சையில் பாஸ் பண்ணுவீர்தானே''

"கட்டாயம்....... நான் பெயிலாகிவிட்டால் உங்களது காதலை இழந்திடுவேனே''.

அவளும் சேர்ந்து சிரித்தாள்.

வெளியே மெல்லிய குளிந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. பிருந்தாவின் தயார் பக்கத்து வீட்டுக்கு டிவி பார்க்கப் போயிருந்தாள்.

பிருந்தா நவீனைப் பரீட்சைக்குத் தயார் படுத்திக் கொண்டிருந்தாள்.

''நவீன் சோதனைக்கு ஒரு கிழமை இருக்கு. கவனமாகப் படியும். விடியவும் எழும்பிப் படிக்கிறனீரே?'' கேட்டாள்.

''அதிகாலையில் நித்திரையை விட்டுத் தாய் வந்து உலுப்பி எழுப்பாவிடில் பாடசலைக்கு அரோகரா தானே''........ சொல்லவில்லை.

'ம்' கொட்டினான்

''விடிய எழும்பிப் படிக்கேலாட்டி இங்க வந்து படும், நான் எழுப்பி விடுறேன் நீர் படிக்கலாம்''

நவீன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''டீச்சர் நீங்கள் ஏன் இப்படிக் கூடுதலாக அக்கறை எடுக்கிறீர்கள்? உள்ளத்தைத் தொட்டு சொல்லுங்கள்...... என்னைப் போலவே நீங்களும் என்னை விரும்புகிறீர்களா? நேரே சொல்லுங்கோ, உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்லுங்கோ'' சொல்ல நினைத்தான்.

அவனது பார்வையின் அர்த்தத்தினைப் புரிந்து கொண்டாள் அவள்.

சிறிது நேரம் இருவரும் மௌனமானார்கள்.

நேரம் பதினொரு மணி. வீட்டுக்குப் போக எழுப்பினான்.

''அம்மா தேடுவாள்'' மனது சொல்லியது.

ஏன் இன்று மட்டும் மனது சொல்லிற்று?

இப்படி இருவரும் தனியே எத்தனை நாட்கள் இருந்திருக்கிறார்கள். இன்று மட்டும் நவீனின் உடல் சூடு கண்டது. அவசரமாக எழுந்து சென்றான்.

அவள் எதுவும் கேட்கவில்லை.

* * *

# அத்தியாயம் பத்து

''நவீன் உன்னை டீச்சருடன் இணைத்துக் கதைக்கினமே, உன் காதில் விழவில்லையா?''

தாய் கேட்டாள்.

நவீன் விளக்கைக் குறைத்து வைத்து விட்டு நிமிர்ந்து சாய்ந்து உட்கார்ந்தபடி தாயைப் பார்த்தான்.

''என்னடாப்பா அப்படிப் பார்க்கிறாய்?''

''உனக்கும் டீச்சருக்கும் காதல் என்டு சனம் கதைக்குதே அதான் கேட்டேன்''

சிரித்தான் அவன்.

''அம்மா உங்களுக்குத் தெரியும் தானே டீச்சர் எப்படிப்பட்டவர் என்று. கஷ்டப்பட்டு உழைக்கிறார். மாணவர்களைப் பிடித்துப் போய் விட்டால் இலவசமாகவே பாடம் சொல்லிக் கொடுக்கிறார். எல்லா மாணவர்களையும் போலவே எனக்கும் தனிக் கவனம் செலுத்திப் படிப்பிக்கிறார். என்னை முழுதாக நம்புகிறார். ஏனெனில் ஆண் துணை இல்லாத வீட்டில் எனக்கு இவ்வளவு உரிமை தந்து உலாவ விட்டிருக்கிறாவே. கடைப்பக்கம் போவதற்குக் கூட என்னைத்தானே அழைக்கிறா. சனம் ஆயிரம் சொல்லட்டுமம்மா. நம்மிடையே எந்தவித தவறும் இல்லாமல் பழகி வருகிறோம்''.

தாய் பெருமூச்சு விட்டாள் .......

அம்மாவுக்குத் தெரியாது தானே ..... எனது மனம் பிருந்தாவின் மீது படர்ந்தது ...... கவிதையாய் ....... கனவாய். இப்போதும் எனது மனம் சொல்லத் துடிக்குது. ஆனாலும் ஏதோ தடுக்க ..... ஓ டீச்சர் ஐ லவ் யு. உங்களது பார்வை ...... ஏக்கம் ...... என்மீது உங்கள் மனமும் தாவுகிறது புரிகிறது. ஆனாலும் சொல்ல முடியாமல் ஏதோ தடுக்கிறது ...... வயது ..... கட்டுப்பாடு ..... ஆசிரியர் மாணவர் தகுதி........ இவைகளே தடைகளாகின.......

கண்களில் எரிச்சல் எடுத்தது. அழுத்தித் துடைத்தான்.

கட்டிலில் சாய்ந்தபடி தலையணையை மடிமீது வைத்து "அம்மா காற்றாடியைப் போட்டுவிடும்மா" என்றான்.

தாயும் மின்விசிறி சுழல சுவிட்சை அழுத்தினாள். மீண்டும் தாய் கேட்டாள்.

"நவீன் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். நீ சின்னப் பிள்ளையாக இருக்கும் போது உன் அப்பா சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போனார்......"

நவீன் தாயையே பார்த்துக் கொண்டிருந்தான். "எந்தவிதச் செய்தியும் கிடைக்காமல்..... அவர் இறந்து போனார், என்று ஜனங்கள் சொல்ல..... எனது பூவும் மஞ்சளும் இழந்து, வெள்ளைப் புடவைக்குள் விதவையாக நுழைந்து, உன்னை ஆளாக்கப் பட்ட கஷ்டம்......"

தாய் அழுவது இவனுக்கு ஏதோ மாதிரி இருந்தது. எழுந்து தாயை அணைத்தபடி கட்டிலில் உட்கார வைத்தான்.

"அழாதீர்கள் அம்மா.... அப்பா ஓடும்போது நீங்கள் வெள்ளைப் புறாவானது..... நான் மனிதனாக நீங்கள் உழைத்தது..... தெரியாதும்மா. போனது போகட்டும் நானிருக்கிறேன் அம்மா."

தாய் நவீனைப் பார்த்து..... அவனை அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

"அப்பா! அம்மாவின் கண்ணீருக்குக் காரணமான நீ திரும்பி வந்தால் நான் நிச்சயம் கொலைக்காரனாவேன். செத்துப் போனவர் செத்தவராகவே இருக்கட்டும்".

மனதுள் நினைத்தான்.

எங்கோ சாமக்கோழி கூவி ஒய்ந்தது.

முன்பெல்லாம் தாய் இப்படிச் சொல்லி அழும்போது ஆத்திரப்பட்டிருக்கிறான். ஆனால் இப்போது பிருந்தாவின் நட்புக்

கிடைத்தபின் நவீன் மாறியே போயிருந்தான். கோபப்படுவதைக் குறைத்திருந்தான். சில சமயம் தன்னையே நினைத்துச் சிரித்தும் கொள்வான்.

''அப்பாவால் எங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட களங்கத்தை என்னால் சரிக்கட்ட அம்மா நினைக்கிறாள். என்னால் சோதனை நேரத்திலும் படிக்க முடியவில்லையே..... டீச்சரின் கனவுகள் பொடியாய்த்தான் போகுமோ?''

தாய் தூங்கி வெகு நேரமாகியிருந்தது.

எழுந்து பின் பக்கம் போய்விட்டுக் கிணற்றடியில் கால்களைக் கழுவிவிட்டு வந்து தரையில் உட்கார்ந்தான்.

''இண்டைக்கு நித்திரை கொண்ட மாதிரித்தான்'' கஸட்டை மெல்லியதாக ஓடவிட்டான்.

இளையராஜா பாடல் ஒலித்தது.

* * *

# அத்தியாயம் பதினொன்று

திரையரங்கினில் படம் ஓடிக் கொண்டிருந்தது. அது ஒரு காதல் கதை. வயது கூடிய பெண்ணுக்கும் டீன்ஏஜ் வாலிபனுக்கும் ஏற்பட்ட காதல் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தனித்து வெந்து இறுதியில் நிலைமாறிப் போகும் மனதுகளின் கதை.

பிருந்தா கதையில் ஒன்றிப் போனாள். ஒரு பக்கத்தில் நவீனும் மறுபக்கத்தில் பிருந்தாவின் அம்மாவும் இருந்தனர்.

படம் ஆரம்பம் முதல் முடிவுவரை பிருந்தாவை ஆடாமல் அசையாமல் இருத்தி வைத்திருந்தது. படத்தின் கதை, டைரக்ஷன், படப்பிடிப்பு.......

தன்னையும் நவீனையும் இணைத்துச் சமூகம் கதைக்கிறது. அவளுக்குத் தெரியாமலில்லை. அவளாலும் நவீனின் நட்பை இழக்கவும் முடியவில்லை. பாசமா காதலா என்று சொல்ல முடியாதபடி...... இடை இடையே பாடல் காட்சி வந்தது.

கதாநாயகியினதும், நாயகனதும் கற்பனையில் இசைப் பாடல்கள் - நன்றக இருந்தன. குறிப்பாகக கமராப் படப்பிடிப்பைப் பெரிதும் ரசித்தாள்.

''பாட்டு நன்றாக இருக்கிறது டீச்சர்''

''ம்..... கதாநாயகன் எவ்வளவு அழகாக இருக்கிறார் நவீன் உண்மையில் அழகுதான்".

''ராதா பாத்திரம் அழுகைப் பாத்திரம், ஆனாலும் அவள் அழகாக உள்ளாள்."

பெண்கள் ஆண்களில் மயங்குவதும் ஆண்கள் பெண்களின் அழகில் வயப்படுவதும் இயற்கை. இவர்கள் கூடவிதிவிலக்கல்லவே.

இடைவேளையில் சோடா வந்தது. தாய்க்கு ஒன்று வாங்கிக் கொடுத்து விட்டு நவீனைக் கேட்டாள் ''என்ன குடிக்கிறீர்?''

"கோக்" என்றான்.

கோக் ஒன்று வாங்கிக் கொடுத்தாள்.

''உங்களுக்கு டீச்சர்?'' - கேட்டான்.

''இருவரும் பாதி பாதியாக அடிப்போம்''

என்று மெதுவாக அவனது காதுக்குள் சொன்னாள். நவீனுக்கு சூடேறியமாதிரி இருந்தது.

நெஞ்சுக் குழிக்குள் வியர்த்தது.

ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தான்.

அதே புன்னகை...... மாறாத நிலையில் "சும்மா இரும்" என்றாள் பார்வையால்.

இவன் குடித்து விட்டுப் பாதியை அவளிடம் நீட்டினான்.

அவள் குடித்து விட்டு சோடா தந்த பையனிடம் நீட்டினாள்.

படம் முடியும் வரை நவீனால் கதைக்குப் போக முடியவில்லை. படத்திலும் ஒன்ற முடியவில்லை. பிருந்தாவின் நடத்தை இவனை ஆகாயத்தில் பறக்க வைத்தது. டியத்தலாவ பயிற்சிச் சாலையில் 'க்டேட்' பயிற்சிக்குப் போன போது விமானத்தில் பறந்து பார்த்தது நினைவுக்கு வந்தது.

பிருந்தா மட்டும் கதையில் லயித்துப் போயிருந்தாள். படம் முடிந்தும் இருவரும் கதைத்துக் கொள்ளவில்லை. பிருந்தா கதையிலும், நவீன் பிருந்தாவிலும் லயித்துப் போனதால் கதைக்க வார்த்தை வரவேயில்லை மனமும் இல்லை. இரட்டைத்தட்டு பஸ்சில் ஏறி வீடுவந்து சேர்ந்தனர்.

* * *

# அத்தியாயம் பன்னிரண்டு

வீடு வந்தவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அங்கே ஒரு சாமியார் தரையில் உட்கார்ந்திருக்க, மான் தோல் அவருடைய பாதங்களில் மிதிபட......

அம்மா ஓடி ஓடிப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவர்களைச் சுற்றி நாலைந்து பெண்கள் வீபூதி வாங்கி ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டிருந்தனர்.

''இன்று அம்மாவுக்கு என்ன நடந்தது''?

அதிர்ச்சியுடன் உள் நுழைந்தான்.

தாய் அறிமுகப்படுத்தினாள்.

சாமியார் விழிகளை மலர்த்தி நவீனைப் பார்த்தார்.

நவீனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''அம்மா சாமிபக்தி உள்ளவள்தான். சமயம் சாத்திரம் என்று கோயில்களுக்குச் செய்பவள்தான். ஆனால் இப்படி வீட்டிலேயே சாமியாரை வைத்துக் கொண்டு ஜனங்களை வந்து வந்து போக....''

''என்னம்மா இது''

மெதுவாகக் கேட்டான்.

தாய் பணிவாக ''சாமியை வணங்குப்பா''

ஏன் என்பது போலத் தாயைப் பார்த்தான் நவீன். ''எல்லாம் விபரமாக அப்புறம் சொல்கிறேன். சாமியின் அனுக்கிரகம் உனக்கும் கிடைக்கட்டுமே. பரீட்சையில் நிச்சயம் வெற்றி பெறப் பிரார்த்தித்து வீபூதியை வாங்கிப் பூசிக் கொள்ளப்பா!''

நவீனுக்குப் புரியவில்லை.

வலது கையை நீட்டி வீபூதியை வாங்கிப் பூசினான்.

சாமியார் எதுவும் பேசவில்லை.

தியானத்தில் இருந்தார்.

கூட்டம் கலைந்தது.

நேரம் நாலுமணி இருக்கும்.

இவன் பிருந்தாவின் வீட்டுக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தபோது தாய் வந்து மெதுவாக ஆரம்பித்தாள்.

''நவீன்! சாமியரை உனக்கு அடையாளம் தெரிகிறதா''?

''இல்லை'' - தலையாட்டினான்.

''உனக்கு ஆறுவயது இருக்கும் போது எங்களைத் தவிக்க விட்டு விட்டு ஓடிப்போன உங்க அப்பா - எனது கணவர்.''

தாயை ஏறிட்டுப் பார்த்தான்.

கண்களில் நீர் பெருக் கெடுத்திருந்தது.

''ஓ அம்மா நீயா?.... எங்களைத் தவிக்க விட்டுவிட்டு ஓடிப்போனது..... உருத்தெரியமுதலே, - தந்தை முகத்தை ஞாபகத்தில் இருக்கு முதலே - இடம் பெயர்ந்து..... இறந்து போனதாகச் செய்திகள் கிடைத்துப் பூவும் பொட்டும் இழந்து, வெள்ளைப்புடவைக்குள் நுழைந்து, கோயிலும் வீடுமாய் வாழ்கின்ற அம்மா நீயா இன்று கணவன் என்று உரிமை கொண்டாடுகிறாய்? உன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்று இருக்கின்ற பழி தீர்க்கும் உணர்ச்சிகளை உன் கண்ணீரால் தகர்த்து விடுகிறாயே!''

மௌனமானான். தாயின் விசும்பல் இன்னும் அவனுக்குக் கேட்டுக் கொண்டிருந்தது.

திடீரென ஆத்திரத்துடன் எழுந்தான்.

முற்றும் சூழலை மறத்தான். குசினிக்குள் கிடந்த இறைச்சி வெட்டும் நீளக் கத்தியை எடுத்துக் கொண்டு திரும்பியவனைத் தாய் தடுத்து நிறுத்தினாள்.

கண்கள் சிவப்பேறி இருந்தது அவனுக்கு. "என்னைத் தடுக்காதேம்மா..... உன் கண்ணீருக்குக் காரணமானவன் உன் கணவனாக இருக்கக் கூடாது. அழித்தால்தான் ஆத்திரம் அடங்கும். கூடவே இவனைப் போன்ற ஆட்களும் திருந்துவார்கள்....."

திமிறினான்.

"உள்ளுக்குள் எத்தனை காலத்திற்கு அழுது கொண்டிருக்கிறது. மகனே எனியாவது நமக்கு நல்ல காலம் பிறந்தது மாதிரித் தானே! உன்னையும் தகப்பன் இல்லாத பிள்ளை என்று யாரும் சொல்ல மாட்டார்கள் தானே"

"அம்மா, தந்தை செத்திருந்தால் துரதிஷ்டம் என்று இருந்து விடலாம். ஓடிப்போனால் எப்படிச் சும்மா இருந்துவிடுவது. உன்னை மேலும் அழித்துக் கொள்ளவா?"

"உன்வீட்டு அப்பாவாக இல்லா விட்டாலும், வீட்டுக்குத் தலைவனாகவாவது இருந்துவிட்டுப் போகட்டுமே". கெஞ்சினள் தாய். "வேண்டாம், வேண்டாம். என் தந்தை செத்துவிட்டதாகவே எனது முடிவு. உனது மஞ்சள் குங்குமம் மீண்டும் நெற்றியில் உனக்குத் தேவையாயின் நீ வேறொரு கல்யாணம் செய்து கொள்ளம்மா......" முடிக்கவில்லை......

தாயின் கரம் அவனது கன்னத்தில் பதிந்தது.

எதிர்பார்க்கவில்லை இருவரும். "கணவன் உயிருடன் இருக்கும் போது மறுமணமா? - தமிழ்ப் பண்பாட்டில் வளர்ந்த பெண்ணுக்கு...... எனக்கு நீ இப்படி சொல்லலாமா? கரகரத்த குரலில் சொன்னாள்."

மகனை அடித்த கரத்தைச் சுவரில் அடித்தாள்.

"முடியலையே மகனே..... முடியலையே"

''என்னாலும் முடியலையே அம்மா...... அவரை அப்பா என்று ஏற்றும் கொள்ள முடியலையே. உங்களை ஏமாற்றியவனைத் தெய்வத்துடன் ஒப்பிட்டுப் பேசியது என்னால் முடியலையே அம்மா'' கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியது. கன்னத்தில் அறை விழுந்ததும் கத்தி நிலத்தில் வீழ்ந்தது. காலில் தட்டுப்படக் குனிந்துபார்த்தான். தாயையும் பார்த்தாள்.

இருதலைக் கொள்ளியானான்.

எதுவுமே பேசாது வெளியேறினான்.

இவனின் முகவாட்டத்தைக் கண்டதும் பிருந்தா கேட்டாள் ''என்ன நடந்தது நவீன்?"

தரையில் போய் உட்கார்ந்தான். அவளும் ஒரு நாற்காலியை இழுத்து முன்னால் நெருங்கி இருந்தாள்.

தலையை வருடிக் கொடுத்தாள்.

அவனது அழுகையைப் பார்த்ததும் இவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

டி.வியை நிறுத்திவிட்டுத் திரும்பவும் கேட்டாள். எல்லா வற்றையும் சொன்னான்.

அழுகையை நிறுத்தத்தான் முடியவில்லை.

கன்னத்தில் தட்டிக் கொடுத்தாள். "கவலையை விடும், விடுமென்கிறேன்"

ஒரு தாய் சொல்வது போலிருந்தது அவனுக்கு. இன்னும் நெருங்கி இருந்ததால் நிச்சயமாக அவனுக்கு ஆறுதல் தேவைப்பட்டது.

திடீரென்று.....

அவளது மடியில் தலை புதைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதான். பிருந்தா தடுமாறிப் போனாள். இருந்தும் ஆதரவாகத்

தலையை வருடிக் கொடுத்தாள்.

எழுந்து "மன்னிச்சிடுங்க டீச்சர்" என்றான்.

"ஓ.. ஒன்றுமில்லை" என்றாள் பதிலுக்கு.

"நவீன், மனதை ஆறுதல் படுத்தும் எல்லாம் சரியாய்விடும்" என்றாள். சுவிட்சை மெல்லியதாக ஓடவிட்டாள். டி.வியை வீடியோவிற்குப் பொருத்தி மடோனா பாடல் பார்க்கச் சொன்னாள்.

அவனால் முடியவில்லை.

மேசையில் தலை வைத்துச் சரிந்து கொண்டான்.

பிருந்தா காற்றாடியைச் சுழலவிட்டு, சூடாகக் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

டிஸ்பிறின் ஒன்றை வாயில் போட்டுக் கொண்டான்.

"நித்திரை வந்தால் இங்கேயே படும்" கைகளைப் பிடித்து எழுந்திருக்கச் சொன்னாள்.

அவளது குளிர்ச்சியான கை பட்டதும், அவனது உணர்வுகள் விழித்துக் கொண்டன.

"நித்திரை வரேல்லை டீச்சர்"

"சரி, ஆறுதலாய் இரும்"

அவள் டியூசனுக்குத் தயாராகி வெளி அறைக்குச் சென்று விட்டாள்.

நேரம் ஏழு மணி.

* * *

# அத்தியாயம் பதின்மூன்று

வாரங்கள் பல கடந்தன.

ஒரு நாள் அதிகாலையில்

ஜனங்கள் கூடத் தொடங்கினர்.

நவீன் நினைத்தான்.......

வழமை போல் சாமியாரிடம் விபூதி - சாஸ்திரம் - அதுக்கொன ஜனங்கள் வருகிறது என்பது.

பிறகுதான் புரிந்தது.

வந்த ஜனங்கள் வீபூதிக்காகவோ சாஸ்திரம் கேட்பதற்காகவோ வரவில்லை என்பது.

தாயைக் கேட்டான்.

தாய் அழுதபடி -

''உன் அப்பா..... அதுதான் என் கணவர் மீண்டும் ஓடி விட்டார்''

சிரித்தான் நவீன்.

''ஏன் சிரிக்கிறாய்'' தாய் கேட்டாள்.

''பின் என்னம்மா. முன்பே ஓடிப் போனவர் தானே.....பிறகு வந்த போது நல்ல பாடம் உன்னால் படிப்பிக்க முடியவில்லையே. கணவர் என்கிற ஸ்தானத்தைக் கொடுத்தாய்.... பூச்சூடிக் கொண்டாய்.... குதூகலமானாய்..... உன் சந்தோஷத்தில் தலையிட நானும் விரும்பவில்லை. சாமிசாமி என்று நீயும் ஜனங்களுடன் சேர்த்து தேவாரம் பாடினாய் - இப்போ.....? நிறுத்தினான்.

தாய் கூரையைப் பார்த்தபடி சொன்னாள்.

''முன்பு ஓடிப்போனது உன்னை மட்டும், என்னை மட்டும் தான் தவிக்க விட்டது.... இப்போ ஜனங்களைத் தவிக்க விட்டுட்டாரே....!

துனுக்குற்றான்.

''என்னை?'' - பார்த்தான்.

''ஆமாம். கோயில், சாமி, என்று ஜனங்களிடம் பணமாகவும் நகையாகவும் வாங்கி இப்போது தலைமறைவாகி விட்டார்''

தலையிலடித்துக் கொண்டான்.

''பகலில் ஜனங்களையும் இரவில் உன்னையும் நல்லா ஏமாத்திப் போட்டார். எனியாவது யாரையும் நம்பாதேயம்மா'' விசும்பல் கேட்டுக் கொண்டிருந்தது.

வாசலுக்கு வந்தான்.

அவனால் முடியுமா ஜனங்களுக்குச் சமாதானம் கூற? முற்றத்து மாமரத்தடிக்கு வந்தான்.

கந்தன் தென்னை மரத்திலிருந்து தேங்காய்களைப் பறித்து விட்டு இறங்கி வந்தான்.

காசைக் கொடுத்து விட்டுத் தேங்காய்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சாக்கில் போட்டு விட்டுச் சுவரோரத்தில் வைத்தான். பக்கத்து வீட்டு மாமி கிணற்றடியில் குளிப்பது தெரிந்தது. ''உன் அம்மா முந்தி தலைமுழுகினதோட விட்டிருக்கலாம். பூச்சூட ஆசைப் பட்டாள். பிறகும் மனிசன் எல்லாத்தையும் சுருட்டி விட்டு ஓடி விட்டான்''.

பதில் இவனிடமிருந்து வராததினால் மாமி தொடர்ந்து பேசவில்லை. மௌனமாகிவிட்டாள்.

பரீட்சை நடந்து கொண்டிருந்தது.

ஆகஸ்ட் 27ம் தேதி - அவனது பிறந்த நாள் கூட அன்று தான்.

பரீட்சை முடிந்ததும் பிருந்தாவிற்குச் சுவிட்டை நீட்டினான்.

"நன்றி இன்று போல் என்றும் வாழ்க" என வாழ்த்தினாள். தலையைத் தாழ்த்தி நன்றி சொன்னான்.

''எப்படி?.... பரீட்சை எழுதினீரா?''

'ம்' கொட்டினான்.

"நீர் பாஸ்பண்ணுவீர் என்று. எனது பிரார்த்தனை கூடத்தான்''.

நவீன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர் நவீன்?''

"சும்மா" என்று விட்டு, பின் சொன்னான் எனது அம்மாவை விட நீங்கள் நிறைய அக்கறை எடுக்கிறீர்கள் அதுதான்''

''ஏன் நவீன், ஒருவர் மீது ஒருவர் அக்கறை காட்டுவது தவறா?

"எனது கருத்து அப்படியல்ல. உங்களது அக்கறைக்கு என்னால் அர்த்தம் காணமுடியவில்லை, அதுதான்''

''ஒரு ஆண் பெண்மீது கொள்வதோ, பெண் ஆண் மீது கொள்வதோ, காதல் என்பதைத் தவிர எப்படி வெறும் அக்கறை என்பது?''

''ஏன் ஆபாசமாகக் கூட இருக்கலாம் இல்லையா''?

''இருக்கலாம் ஆனால் 80/100 வீதமே காதல் என்பது தான் ஒத்துக் கொள்ளப்படுகிறது.''

"என்னைப் பொறுத்தவரை 'வெறும் அக்கறை' மட்டும் தான்.'' சொன்னாள் பிருந்தா.

அதிபர் அவர்களைக் கடந்து போனர்.

கன்டீனில் டீ சாப்பிட்டார்கள்.

"காதலர் கன்டீனையும் அலங்கரிக்கினம்''

யாரோ சொன்னது காதில் வீழ்ந்தது.

பதில் ஏதும் இவர்களிடமிருந்து வரவில்லை.

வெளியேறினார்கள்.

இருவர் மனதிலும் ஏதோ ஒன்று அலைபாய்ந்து கொண்டிருந்தது.

பிருந்தா புரண்டு படுத்தாள்.

தூக்கம் வரவில்லை.

''நவீனைத் நான் காதலா பண்ணுகிறேன்?''

''ஏன் காதல் பண்ணக் கூடாதா?''

''அவனும் தனி நானும் மணமாகதவள்''

''வயது.....''

''ப்பூ என்ன வயது.... மனதுகள் ஒன்றுபட்டபின்''

''வாழ்க்கையில் திருமணம் என்றால் ஆண் வயது கூடியவனாகவும் இருக்க வேண்டும்''

''ஏன் பக்கத்து வீட்டு மாமிக்கு வயது கூடத்தானே. அவர்கள் சந்தோஷமாக வாழவில்லையா?''

"உடல் சுகம் கிடைக்காது''

''ஏன் யார் சொன்னது?''

''எல்லாம் எழுத்துக்கு மட்டும் தான்''

''தவிர, உடலின்பம் வாழ்வின் ஒரு பகுதிதான், காதல் ஒருவரின் வாழ்க்கை முழுவதுக்கும்''

''காதல் தான் வாழ்க்கை''

"காமம் இப்போ இரண்டாம் பட்சம்தான்''

தலையணையை அணைத்தபடி தூக்கத்தை வரவழைக்கப் பாடுபட்டுத் தோற்றுப் போனாள்.

***

# அத்தியாயம் பதின்னான்கு

கணவன் மீண்டும் காணமல் போனதிலிருந்து அம்மாவின் போக்கு மாறி இருந்தது. யாருடனும் கதைப்பதில்லை. நவீனைக் கூட நிமிர்ந்து பார்த்துக் கதைக்கச் கூச்சப்பட்டாள்.

''ஏன் அம்மா நீ மாறிப் போனாய்?''

பதில் வரவில்லை. பெருமூச்சுத்தான். நவீன் பின் எதுவுமே கேட்கவில்லை.

பென்ஷன் காசு எடுக்க வெளியில் மார்க்கட்டுக்கு நடை நடந்தால் ஜனங்களின் கேள்விகளுக்கு பார்வைகளுக்குத் தப்ப முடியவில்லை. பின், நவீன் வெளியில் போய் வரத் தொடங்கினான்.

இன்பம் நாணயத்தின் ஒரு பக்கம் மாதிரி ஆனால் ஏன் அடிக்கடி மறைந்து போகிறது. சோகத்துப் பக்கங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவா?

''என்னப்பா நவீன், உங்க அப்பா எப்ப மீண்டும் வருகிறதாம்?'' கடை முதலாளி கேட்டார்.

நவீனுக்குப் பார்வை நெருப்பாகியது.

நிமிர்ந்து பார்த்தான்.

கடை முதலாளியால் தொடர முடியவில்லை.

வீதியில் நடந்தான்.

எரிச்சலாக வந்தது.

''தெளிந்த நீரோடையில் ஏன் மீண்டும் அந்தக்கல்.... அப்பாவும் பசிவரும் போது உணவைத் தேடுவது போல.... பசிவந்ததோ....? ஓ அம்மா! நீ பூச்சூடுவதில் ஆசைப்படுவது தவறில்லையம்மா! உனது காதல் வாழ்க்கையில் சந்தேகப்பட்டோ....

சாப்பாடு புளித்தோ..... ஓடிப்போய் எத்தனை ஆண்டுகள்.... மனைவியைப் பிள்ளையை மறந்து,.... இறந்தார்களா உண்டார்களா படுத்தார்களா என்று பாராது இப்போது என்ன வேண்டிக் கிடந்தது.

திக்விஜயம்.... பிறகு ஜனங்களையும் ஏமாத்தி - சாமியின் பேரால் - ஓ.... கடவுள் கூட சும்மா விடாது.''

வெக்கைக் காற்று இவனைக் கிழித்துச் சென்றது.

ஏ லெவல் சோதினை முடிவு வந்திருந்தது.

நவீனின் முடிவைப் பார்ப்பதில் ஆர்வம் கூடிய பிருந்தா சோர்ந்து போய் ஆசிரியர் அறைக்குள் நுழைந்தாள். யாருமே அங்கிருக்கவில்லை.

கைகளைத் தலைக்கு முண்டு கொடுத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் அதிபர் அழைத்ததால் எழுந்து சென்றாள். அதிபர் அவளைப் பாராட்டி விட்டு நவீனைப் பற்றியும் சொல்லி வைத்தார்.

அதிபர் கடைசியாகத் துப்பிய வார்த்தை அவளால் ஜீரணிக்க முடியாதிருந்தது.

"ஓ....... அவனின் இந்த நிலைக்கு நானா காரணம்?''

ஒங்கி மேசையில் அடித்து அதிபரைக் கேட்க வேண்டும் போலிருந்தது.

கேட்கவில்லை.

மௌனமாகத் தலை குனிந்தபடி நின்றிருந்தாள்.

"மிஸ் பிருந்தா எனியாவது இப்படியானதுகளுக்கு படிப்பிக்கிறதை விட்டுடுப் போ....

அவன் அப்பா கூட ஓடுகாலி தானே.......?''

அதிபரின் வார்த்தைகள் கூரிய அம்பென வந்து இதயத்தில் தைத்தது.

மின் விசிறி சுழன்றும் கூட இவளுக்கு வியர்த்தது.

வெளியேறினாள்.....

யாருடனும் எதுவும் பேசவில்லை.

''ஏன் டீச்சர் உங்களுக்கென்னாச்சு"

'ஒன்று மில்லை' தலையாட்டினாள்.

கேட்டவளுக்குத் தெரியும் தெரிந்துதான் கேட்டாள்.

"ஒன்று மில்லை என்பது என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால் அதுக்கென்ன என்றாலும், ஜிரணிக்க முடியாமல் தானே உள்ளுக்குள் அழுதபடி.....உங்களுக்குப் புரியலையே?'' அழுகை வெடித்தது. கேட்டவள் தொடரவில்லை.

கன்டீனில் டீ சாப்பிட்டுவிட்டு ஆசிரியர் அறைக்குள் நுழைந்தாள்.

* * *

# அத்தியாயம் பதினைந்து

''அவருக்குப் பசிச்சப்போ இங்க வந்தாரம்மா. உனக்குப் பசி எடுத்தா யார்கிட்ட போவேம்மா?''

நவீன் கேட்டான்.

தாய் கூரையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

- தனது தோல்வியை ஒத்துக் கொள்ளும் வீரனைப் போல். ஆனாலும் தன்னை விட அனுபவம் குறைந்தவனால் எப்படி யெல்லாமே பேசமுடியும் என்பதையும் உணர்ந்தாள்.

''காதல் என்பது சமுத்திரம் மாதிரி''

''இவனுக்கு இது புரியவா போகிறது''

''மனிதனுக்கு வயித்துப் பசி, உடற்பசி இரண்டும் இருக்கிறது. இவன் உடற்பசியை மட்டுமே வாழ்க்கை என்று நினைத்துப் பேசுகிறான்''.

''நான் எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கைப் பசியை அதாவது நாலுபேர் வாழ்கிற மாதிரி வாழனும் என்கிற பசியை நினைத்து வாழ்கிறேன், ஏங்குகிறேன்''.

ஐந்து நிமிட சந்தோஷ வாழ்வு கூட அவளை யுகம் யுகமாய் சந்தோஷத்தில் இருத்திவிடும்.

சிட்டுக் குருவிகள் இரண்டு மாமரத்திலிருந்து சிறகடித்துப் பறந்து போயின.... ஜன்னலூடே பார்த்த நவீனுக்கு அந்த இரு குருவிகளிடயே ஏதோ ஒரு பிணைப்பு அவர்களின் மொழியில் - வாழ்க்கையைப் பற்றியா பேசிவிட்டு சுதந்திரமாக வான வெளியில் பறந்து போகின்றன?

கரங்கள் ஜன்னல் கம்பிகளைப் பற்றின.

காதல் ஒரு சமுத்திரம் தான்.... சில சமயம் முத்தும் வரும். சில சமயங்களில் சோகங்களையும் அழைத்து வரும் அம்மாவின் காதல் எனக்கு அப்பா என்பவரைத் தந்தது. அம்மாவுக்குக் கணவனாக மட்டுமே இருந்துவிட்டு.....

கோடிப்புறத்தில் வாழை இலையைப் பக்கத்து வீட்டு மாமி அறுத்துக் கொண்டு போனாள்.

யாரோ விருந்தினர்கள் வந்துள்ளனர் போலும்.

பிருந்தாவின் ஞாபகம் வந்தது.

பிளாஸ்கில் சுடச்சுடத் தேநீர் இருந்தது. ஊற்றிக் குடித்து விட்டுப் புறப்பட்டான் பிருந்தாவினைப் பார்ப்பதற்கு.

''மனதுள் ஓராயிரம் கேள்விகள்..... சோகங்கள் பயங்கள் எழுந்து மோதின''

நேயல் கபேயில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த போது கூட அவன் நண்பன் கேட்டான்,

''ஏண்டா மச்சான் பிருந்தா டீச்சர் போற போக்கைப் பார்த்தால் விரைவில் கல்யாணம் முடித்துவிடுவாள் போலிருக்கிறது''

நவீன் எதுவும் பேசவில்லை.

சில நண்பர்களின் கைகளில் சிகரட் புகைத்துக் கொண்டிருந்தது. கல்லூரி மாணவர்கள் சிகரட் குடிப்பது யரார்த்தமாகி விட்டது. நவீன் சிகரட் குடிப்பதில்லை.

ஒரு நாள் நண்பனின் வேண்டுகோளுக்கு ஒரு சிகரட் குடித்து விட்டு, வெங்காயத்தை வாயில் போட்டுக் குதப்பி விட்டு பிருந்தாவைப் பார்க்கப் போனபோது இவனின் வாயிலிருந்து சிகரட் குடித்த மணம் வந்ததை உணர்ந்து கண்டித்தாள்.

''நீர் சிகரட் குடிக்கிறீர''

பதில் இல்லை.

''உடம்புக்கு கூடாது. எனக்கு சிகரட் குடிக்கிறவர்களைக் கண்டால் பிடிக்காது''

பதில் இல்லை.

''எனி மேலும் சிகரட் குடிப்பதாயின் தயவு செய்து இங்கு வரவேண்டாம் நான் உம்மோட கதைக்க மாட்டன்''

''மன்னிச்சுங்க டீச்சர் இனி சிகரட் குடிக்க மாட்டன்'' சத்தியமாகச் சொல்லி விட்டான்.

பிருந்தாவிற்கு திருப்தி - தனக்கு கட்டுப்பட்டது.

''இன்று முதல் நவீன் நல்ல பிள்ளையாகத்தான் தோன்றுவான்''.

அன்று கூட நவீனை நண்பன் கரைச்சல் படுத்தினான்.

"முடியாது" மறுத்தான்.

பில்லை இவனே கட்டி விட்டு நடந்தான்.

***

# அத்தியாயம் பதினாறு

வாசலில் கோலிங் பெல்லை அழுத்தியதும் பிருந்தாதான் திறந்தாள். நவீன் புன்னைகத்தான்

பேசவில்லை.

தன் பாட்டி கிச்சன் பக்கம் போய் விட்டாள்.

தொடர்ந்தான்.

தேநீர் தயாரிப்பதில் மும்முரமாக இருந்ததைக் கண்டு நிலைமையை உணர்ந்து கொண்டான் நவீன். ஏதோ ஒன்று நடந்து விட்டது.

சிறிது மௌன இடைவெளிக்கு பிறகு நவீன் கேட்டான்

"என்ன நடந்தது டீச்சர்?"

பதில் வரவில்லை.

பல நாட்கள் பழகியபின் திடீரென்று இப்படி கோபப்பட்டால் நவீனுக்கு ஏதோ மாதிரி இருந்தது.

''என் மீது கோபமா?''

மீண்டும் மௌனம்.

''ஓ! டீச்சர் பூக்களால் எறிந்து கொல்கிறீர்களா?

மௌனத் தீயில் சுட்டுக் கொல்கிறீர்களா?''

கேட்கவில்லை......

"நான் பிழை விட்டிருந்தால் மன்னியுங்கோ டீச்சர்...."

முடிக்க வில்லை -

நிமிர்ந்து பார்த்தாள்.

அப்பார்வையைத் தாக்குப் பிடிக்க அவனால் முடியவில்லை. பதறிப் போனான். தலைகுனிந்து கொண்டான். கணப் பொழுதில் அவளது வலதுகரம் நவீனின் கன்னத்தில் பதிந்து திரும்பியது. நவீன் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. தடுமாறிப் போனான். கண்கள் கலங்கின ஏதோ சொல்லத் துடித்தான். முடியவில்லை ஏதோ ஒன்று தடுத்தது.

கண்கள் நீர் பெருக்கியது. முதல் முறையாக அழுதான். பிருந்தா அவனைத்தள்ளி விட்டு குசினிக் கதவைச் சாத்திக் கொண்டாள்.

உள்ளே பிருந்தா குமுறிக்குமுறி அழுதது கேட்டது

''ஐயோ ஏன் அழுகிறீங்க டீச்சர்''

''என் குரு நாதர் நீங்கள். உங்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட பிணைப்பு..... எனக்கென்று ஒன்றெள்றால் நீங்களும்..... ஏன் உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே. நீங்கள் அடித்ததை விட நீங்கள் அழும் போது தான் எனக்கு வலிக்கிறது.''

நேரம் கடந்தது.

அவளே கதவைத் திறந்து வந்தாள்.

பார்வைகள் மோதின. பின் தாழ்ந்து கொண்டன.

'' ஐ ஆம் சொறி நவீன்''

''உங்களது இன்றைய கோபத்திற்கான காரணம் யாது?''

''உமக்கே தெரியும். உம்மிட படிப்பில் முழுக்க கவனம் எடுத்து படிப்பீர். நீர் பெயில் ஆனதும் எனக்குத் தாங்க முடியவில்லை.''

''ஒரு மாணவன் பாசாகிறதும் பெயிலாகிறதும் அவரவர் கையில் உள்ளது என்பது வாஸ்தம் தான். அதையும் மீறி பெயிலாயிடும் போது கோபப்பட்டு என்ன செய்வது.''

''இருந்தும் உமது தோல்வியை என்னால் தாங்க முடியவில்லையே நவீன்''

அவளை ஊடுருவிப் பார்த்தான்.

''ஏன்''

'ஏன்' என்று கேட்டதும் அதை அவள் எதிர்பார்க்கவில்லை.

''உங்க பாஷையில் வெறும் அக்கறை என்பது தான் சரியா''? நவீன் தொடர்ந்தான்.

''என்னால் கூட சரியாகப் புரிந்து கொள்ளமுடியவில்லை உங்களை.''

சுவரில் சாய்த்து நின்றவள் மெதுவாக நடந்து ஷோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

அப்போதும் அவனது கன்னம் சிவந்திருந்தது.

''நவீன், நம்மைப் பற்றி ஜனங்கள் என்ன மாதிரி எல்லாம் கற்பனை பண்ணி காது மூக்கு வைத்துக் கதைக்கிறது தெரியுமா?''

''தெரியும். இருந்தும் நமது நட்பின் இறுக்கம் மேலும் மேலும் வலுப்பெற்று வந்துள்ளது என்பதற்கு உங்களது அடியே சாட்சி''

அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

''என்னால் உமது படிப்பு, வாழ்வு பாதிப்பதை நான் விரும்ப வில்லை நவீன்''

''உங்கள் தொடர்பால் தான் எனது படிப்பு பாழாகிற்று என நீங்கள் கருதுகிறீர்களா?'' நவீன் கேட்டான்.

"...... அப்படித்தான் எல்லோரும் கதைக்கிறார்கள்''

"அதிபர் கூட என்னை நேரடியாகக் கேட்டதும் என்னால் ஆத்திரப்படாமல் இருக்க முடியவில்லை..... அதுதான்.''

''அவர் சொன்னார் என்பதற்காக நீங்கள் ஆத்திரப் பட்டீர்களாயின் சொல்லுங்கள் டீச்சர், நீங்கள் என்னை விரும்புகிறீர்களா?'' இந்தக் கேள்வியை அவனிடமிருந்து அவள்

எதிர்பார்க்கவில்லை. மௌனமாகி விட்டாள்.

சிறிய மௌன இடைவேளையை நவீன் உடைத்தான்.

''என்னால் கூட சொல்ல முடியவில்லை பாருங்கள் - டீச்சர் வெறும் அக்கறை தான். அதை என்னால் கூட என்னை புரிந்து கொள்ள முடியவில்லை பாருங்கள்.....

இதில் தான் நாம் ஒன்று படுகிறோம்.

''இதைக் காதல் என்கிறீரா?

"என்னாலை சொல்ல முடியவில்லை ஆனால் எனக்குத் தெரியும் இருவரும் ஒருவரை ஒருவர் அளவுக்கு மீறி விரும்புகிறோம் என்பது எனக்குத் தெரியும்......."

எதுவுமே பேசாமல் இருந்தாள்.

''நீங்கள் உண்மையில் விரும்புகிறீர்களா என்பதை ஏன் நீங்கள் மறுபரிசீலனை செய்யக் கூடாது......?''

''மறு பரிசீலனை மூலம் சரியான தீர்ப்பு இதற்குக் கிடைக்கும் என நம்புகிறீரா?''

''நிச்சயமாக உங்களது வெறும் அக்கறைக்கு விடை கிடைக்கும். என்றலும் ஒரு பாதை வகுக்க இது உதவும்''.

"எனக்கு விளங்கேல்லை"

"ஏ லெவல் சோதனையில் தான் பெயில். வாழ்க்கைச் சோதனைக்கு நீங்கள் விடை தந்தால்..... பாஸ் பண்ண முடியு மில்லையா?''

நிமிர்ந்து உட்கார்ந்தாள்

''வயது, காமம் இவைகளுக்கப்பாற்பட்டது தான் உண்மையான அன்பு, காதல். நமக்குள் புரியாத தவிப்புக்கு விடை கிடைத்தது மாதிரி இருக்கும்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''மனதுகள் ஒத்துழைத்தால் மணமேடை தான் பாக்கி என்கிறேன்''

திடீரென எழுந்து கொண்டாள்.

"....... முடியாது நவீன்''

''பறந்த பறவை ஏன் மீண்டும் சிறகுகளை முறித்துக் கொண்டு அடைபட்டது மாதிரி ஒரு தவிப்பு?''

- சுவரில் பல்லி கத்தியது.

''என்னால் உமது படிப்பு நாசமானது மாதிரி உமது வாழ்க்கையையும் நாசமாக்க மாட்டேன்''

''யார் சொன்னது வாழ்க்கையை நாசமாக்க?''

"நாங்கள் இருவரும் எங்களுக்குள் உண்மையைத் தேடவேண்டும் அதைச் செய்வம். அப்ப பதில் தெரியும்"

போவதற்கு வாசல் பக்கம் போனான்.

கதவைத் திறந்தபடி திரும்பிச் சொன்னான்,

"எங்கள் இருவரின் தனித்தனி வாழ்க்கையை மட்டுமல்ல எங்கள் காதலையும்......"

சென்று விட்டான்.

அதே நேரம் இருட்டில் இருந்தவள் தாயின் குரல் கேட்டு. எழுந்து லைட்டைப் போட்டாள். டி.வியைப் போடவோ ரேடியோவைப் போடவோ மனமில்லாதவளாய் மெதுவாகக் கிணற்றடி நோக்கிப் போனாள்.

தாய் அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

* * *

# அத்தியாயம் பதினேழு

அன்றும் வழமை போலவே கல்லூரி தொடங்கிற்று. வழிபாடு, பேச்சு இத்தியாதி இத்தியாதியான தொடர்களின் பின் வகுப்புகளை அடைந்தனர் மாணவர்கள்.

ஒரு மாத மெடிக்கல் லீவிற்குப் பின் அன்று தான் வந்திருந்தாள். வகுப்பிற்கு வந்ததும் நவீனின் வரவு இல்லாதது வெறுமையைத் தந்தது. ''சோதனை பெயில் என்றால் திரும்பி ஒரு வருஷம் படிச்சு எடுக்கலாம் தானே...... நவீன்.... வரேல்லை'' நினைத்துக் கொண்டாள்.

பாடத்தை ஆரம்பித்தாள்.

அன்று அந்த வகுப்புக்கு ஆங்கில இலக்கியப் பாடமாதலால் இலக்கியப் புத்தகத்திலிருந்தது ஒரு கதையை எடுத்து விளக்கினாள். ரோமியோ + ஜூலியட் காதல் சோகம் ஆங்கில உச்சரிப்புகள் மாணவர்களிடம் சரியாகச் சென்றடைய முயற்சித்து வென்றடைந்து விட்டாள்.

அதிபர் அழைத்ததை பியோன் வந்து சொன்னான்.

சென்றாள்.

சொன்னார் அதிபர்

''டீச்சர்.... நவீனும் மற்ற நான்கு பெடியளும் பெயில் ஆனதால் வெட்கத்தில் வராமலேயே விட்டினம்''

கதிரையில் இருந்து கொண்டாள்.

அதிபரின் தலைக்கு நேரே பின்னால் நமது நாட்டு ஜனாதிபதியின் படம் பெரிதாகத் தோன்றியது. அரசாங்க ஆதரவாளரான அதிபர் படத்தினைப் பெரிதாக்கித் தனது ஆதரவைக் காட்டிக் கொண்டார் போலும்.

பிருந்தா நினைத்தாள்.

அருகே அலுமாரியில் பலவித வடிவங்களிலான வெற்றிக் கிண்ணங்களிலும் புத்தகங்களிலும் பைல்களிலும் கண்கள் பதிந்து பின் அதிபரை நோக்கின.

மீண்டும் அவரே தொடர்ந்தார்,

''டீச்சர், நவீன் உங்களுக்குத் தெரிந்த மாணவன் ஆதலால் அவனிட்ட நீங்களே கேட்டு அவனைத் தொடர்ந்து படிக்கச் செய்யுங்களேன். நல்ல பையன். படிக்காமல் விட்டால் அவனது எதிர்காலம் பாழாய்ப் போகும்''.

''இவர் ஏன் என்னைக் கேட்க வேண்டும். தானே நேரடியாகக் கேட்டிருக்கலாம் தானே'' பிருந்தாவிற்கு எரிச்சலாக இருந்தது.

''ஏதோ இந்த முறை பெயில் ஆயிட்டான். அடுத்த முறையாவது....''

குறுக்கிட்டாள்

''ஏன் சேர்! நீங்களே கேட்டிருக்கலாம் தானே, - அதிபர் என்கிற தோரணையில்''.

"ஓ, கேட்டிருக்கலாம் தான். இருந்தாலும் நீங்களும் நானும் அவனுடன் பழகும் முறை வித்தியாசமானது தானே!''

நிமிர்ந்து கொண்டாள்.

''பழகும் விதம் வித்தியாசமானது என்றால்...?''

"........ பிழையாக அர்த்தம் பண்ணாதீங்கள்! உங்களைக் கேட்டுப்பார்க்கலாம் என நினைத்தேன் உங்களுக்கு விருப்ப மில்லாட்டி விட்டு விடுங்கோ'' - தொடர்ந்தார், ''எல்லோரும் விரும்பினம் நீங்கள் கேட்கலாம் என்று - நீங்கள் கூட நவீனைக் காதல் பண்ணுகிறீர்கள் என்று.....''

கண்கள் சிவந்தன! கன்னம் கோபத்தால் எரிந்தது.

"யார் அப்படிச் சொன்னது" பொரிந்தாள்.

அவளை அந்தக் கோலத்தில் முன்பு காணவில்லை.

"கோபப்படாதேயுங்கோ பிருந்தா, எல்லாரும் கதைக்கினம். ஆறுதலா இருங்கோ அவ்வளவுதான்!'' முடித்தார் அதிபர்.

மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது, தலைவலித்தது.

எதுவுமே பேசாது எழுந்து கொண்டாள்.

அதிபர் கூப்பிட்டதை எங்கே அவள் பொருட்படுத்தப் போகிறாள்?

அதிபருக்கு உள்ளூரே பயம்.....''இதனால் விபரீதம் ஏதும் நடந்து விடுமோ? எனக்குத் தான் தலையிடி''

கதவு அடித்துச் சாத்திக் கொண்டது.

அதிபருக்கு இதயம் படபடக்கத் தொடங்கி அதிக நேரமாகியிருந்தது.

* * *

# அத்தியாயம் பதினெட்டு

பல நாட்களாகியும் நவீனைக் காணத தவிப்பு பிருந்தாவுக்குத் இருக்கத்தான் செய்தது. யாவரும் நம்மை இணைத்துப் பேசுவது நவீனின் மீது ஆத்திரத்தையும் உண்டாக்கத் தவறவில்லை.

''பிருந்தா! உன்னாலேயே என்னைப் புரிந்து கொள்ள முடியாத போது பலரும் கதைக்கிறார்கள் என்பதற்காக நவீனின் மீது ஆத்திரப்படுதல் நியாயமா?'' மனச்சாட்சி கேட்டது.

''நியாயமில்லைதான்..... அதுக்காக ஜனங்கள் கதைப்பதை நிறுத்த வழி தான் என்ன?''

''சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதா?''

''சமாதான உடன்படிக்கைகள் எல்லாம் தோற்றுப் போன மண்ணில் வாழ்கின்ற நீ, வீதிக்கு வந்து பார் அவனது வீட்டை - விடை தெரியும்''

''எப்படி?''

''உன்னுடன் எத்தனை பழக்கம். நீ அடித்ததால் அவன் வராமல் விட்டிருக்கலாம். அல்லது சோதனை பெயில் ஆனதால் வெட்கத்தால் வராமல் விட்டிருக்கலாம்.... எனவே நீயே அவனது வீட்டிற்குப் போய்வா. அவனும் மனம் மாறிச் சமாதானம் செய்து கொள்ளலாம்.''

''நிச்சயமாக''

''நிச்சயமாக.... ஒரு வேளை அவன் உன்னை விரும்பியும் இருக்கலாம் உனது இழப்பு அவனை வேதனைப் படுத்தியிருக்கும் நீ போவதால் அவன் சந்தோஷப் படவும் கூடும்.''

மனச்சாட்சி வெற்றி பெற்றது.

''அவன் உண்மையிலேயே விரும்பியிருந்தானே? அப்படி யானால் நான் நவீன்!... என்னால் விடை காண முடியவில்லையே! என்னுள் ஏற்பட்ட கிளர்ச்சி காதலா.....?''

பொங்கி வந்து பின் வடிந்து விடும் பால் போல - எழுந்து

கரையை முத்தமிட்டுவிட்டப் பின் ஒடுங்கிக் கொள்ளும் அலைபோல - அவளுள் கணப்பொழுதில் சந்தோஷமும் சோகமும் மாறிமாறி மோதி ஓய்ந்தன.

''உண்மையிலேயே நான் அவனை விரும்பியிருந்தால் ஏன் நான் நேரடியாகக் கேட்டிருக்கவில்லை? ஏன் அவன் கூடக் கேட்டிருக்கலாமே.....?''

கடைசியாக நவீன் கூறிச் சென்ற வார்த்தைகளை இப்போது அவள் தனது உதடுகளால் உச்சரித்துப் பார்த்துக் கொண்டள்.

"எங்கள் இருவரின் தனித்தனி வாழ்க்கையை மட்டுமல்ல எங்கள் காதலையும்......."

வழமை போல ஆசிரியர் அறையில் கலகலப்பு அதிகமாயிருந்தது. சம்பள நாள் ஆதலால் எல்லோரும் சம்பளம் எடுத்த கையுடன் சிறிய தேனீர் விருந்திற்கு ஆயத்தம் செய்து விட்டு இவ்வருட இல்ல விளையாட்டுப் போட்டி, நாடகப் போட்டி எல்லாவற்றையும் அலசினார்கள். பிருந்தா ஓர் மூலையில் ''அந்தரங்க கீதம்'' நாவலில் லயித்திருந்தாள்.

''ஏன் மிஸ் பிருந்தா இன்று மௌனம்?"

புன்னைகத்தாள்.

திருமதி. நாகராஜனுக்கு பதில் அந்தப் புன்னகை தான்

பாத்திமா டீச்சர் சொன்னாள்

''நவீன் பாடசாலைக்கு வருவதில்லை அதனால் தானே?''

"அதுதானாக்கும்!" திருமதி. நாகராஜன் தோளில் தட்டினாள்.

பிருந்தா எதுவுமே பேசவில்லை, அதற்கும் புன்னகைதான்.

''என்ன தான் இருந்தாலும் நவீன் தொடர்ந்து படித்திருக்கலாம்'

''பயலுக்கு வெட்கமாக்கும்''.

''எதுக்கு சோதினை பெயில் எண்டா? அல்லது காதல் பெயில் எண்டா?''

பிருந்தாவின் அந்தரங்க கீதத்தில் சிறிது தடங்கல் - கீறல் வீழ்ந்தது மாதிரி. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள். ''கண்ணாடி உடைந்தால் சேதம் யாருக்கு? கல் தன்பாட்டில் உடைத்து விடும்...... மனது?''

பிருந்தாவின் இமை கோடியில் கோடிட்டது.

திடலில் மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

''இந்த முறை நவீன் இருந்திருந்தால் நாடகப் போட்டியில் பிருந்தாவிற்குத் துணையாய் இருந்திருப்பான்.''

"போன வருசம் கூட நவீன் நடித்ததாலோ பிருந்தா இயக்கியதாலோ நாடகம் முதல் பரிசு வாங்கிக் கொண்டது.''

"நாடகப் பரிசு வாங்கினதை விட இருவருக்குமிடையே நெருக்கம் ஏற்பட்டதே! அது தான் முக்கியம்.''

"இந்ந ஆண்டு?"

"கடவுளே" பாத்திமா டீச்சர் வேண்டுமென்றுதான் பெரு மூச்சு விட்டாளோ?

சுவரில் கடிகாரம் 11.30 காட்டியது.

பிருந்தா எழுந்து கொண்டாள். பன்னிரண்டாம் வகுப்பு 'சி' பிரிவுக்கு பாடம் எடுக்கப்புறப்பட்டாள். இன்னும் இங்கிருந்தால் தன் தவிப்பு உடைந்து விபரீதம் நிகழ்ந்து விடலாம் என்பதும் முக்கியமே. ஏனென்றால் அவளால் அதிபருடன் மோதியது இன்னும் மறக்க முடியவில்லை.

"வணக்கம்"

மாணவர்களின் வரவேற்புடன் நுழைந்தாள்.

* * *

# அத்தியாயம் பத்தொன்பது

திரையரங்கில் நண்பர்களுடன் 'என்ட்லெஸ்' ஆங்கிலப்படம் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான் நவீன். வழியில் பல நினைவுகள் அவனை அலைக்கழித்தன. பிருந்தாவுடன் படம் பார்த்தது, அவளுடன் கோயிலுக்குச் சென்றது, ஓட்டலிற்கு சாப்பிடப் போனது மாணவர்களுக்கான சுற்றுலாவில் அவளுடன் சென்றது, தனிமையில் அவளுடன் இருக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம் சிரித்துச் சிரித்துப் பேசியது......

இப்போதும் மறக்க முடியாமல் இருந்தது.

மின்சார பல்ப்புகள் கடைகளிலிருந்து ஒளி உமிழ்ந்து வீதிகளுக்கு வெளிச்சம் தந்தன.

இவனைக் கடந்து போலிஸ் ஜீப் ஒன்றும் சென்றது.

''ஓ டீச்சர் பழகி வந்த பழக்கம் பாதியில் நின்று விட்டதும் ஏற்படுகின்ற தவிப்பு சொல்லில் முடியாது. எனக்குள் மோதும் வேதனைகளை ஆற்றுப்படுத்த நீங்கள் அருகில் இல்லையே! என்னுள் இருந்து விடை தராமல் இருந்த புதிர் கூடப்பழகிய போது தெரியவில்லை. இப்போது காதல் என்று மனம் அடித்துச் சொல்கிறதே! சொல்லத்துடிக்குது என் மனது..... ஓ டீச்சர் ஐ லவ் யு"

கால்கள் வேகமாகச் சைக்கிள் பெடலை மிதித்தன.

பிருந்தாவின் வீட்டைக் கடக்கும்போது மனதுள் ஏதோ செய்தது.

ஓங்கிக் கத்தவேண்டும் போலிருந்தது.

மதிலால் எட்டிப் பார்த்தான்.

விதவிதமான பூக்கள் இருந்தன.

பூக்களுடன் பூக்களாகப் பிருந்தா நிற்பாளோ என்ற தவிப்பு.

உற்றுப்பார்த்தான்.

ஏமாற்றம் தான்.

கூப்பன் கடையில் பிருந்தாவின் அம்மா பொருட்கள் வாங்குவது தெரிந்தது.

''அவ கண்டாவெண்டால் மதிப்புக் கெட்டுப் போகும் ஏன் வீட்டை வரேல்லை எண்டு நானும் ஏறுமாறு பதில் சொல்லிப் போட்டா பிரச்சனைதான்.''

''நல்லவேளை அவள் காணவில்லை''

ரேடியோவில் நினைவில் நிறைந்தவை நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்தது.

நெஞ்சம் மறக்காத பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருக்கும் போது - பிருந்தா மட்டும் கனவுகளுடன் போராடிக் கொண்டிருந்தாள். கனவுகளைக் கொடுத்து விட்டு வராமலேயே விட்டு விட்ட நவீனின் மீது ஏற்பட்டிருந்த எரிச்சல் சற்று தணிந்து இருந்தது. பார்க்க வேண்டும் என்கிற தவிப்பு நாளுக்கு நாள் அதிகாரித்துக் கொண்டிருந்தது. தாயும் கேட்டுப் பார்த்தாள். ''ஏன் நவீன் வருவதை நிறுத்திக் கொண்டான்? நீ ஏதாவது சொன்னாயா?''

'இல்லை' என்று பிருந்தா தலையாட்டினாள். ''பிறகு ஏன் வருவதில்லை? சின்னப் பையன் ஏதாவது நினைத்துக் கொண்டானோ? நீயாவது போய் அழைத்துக் கூட்டிக் கொண்டுவா!''

சுவரில் பறவைச் சித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பிருந்தா. ஜோடிப் பறவைகள். ஒன்று ஆண், மற்றையது பெண்.

''ஒன்று நவீன், மற்றது நான்.''

''அப்படியாயின் ஜோடிப்பறவைகள் போல் நாங்களும் காதல் பறவைகளோ?''

''எனது வயது அவனுடன் வாழ ஒத்துவருமா?''

''மனது ஒன்றுபட்டுவிட்டதா என்று பார்..... பிறகு முடிவுசெய். வயதை சிந்திக்காதே.....''

''எனக்குள் எழுந்துள்ள உணர்வுகள் காதலா?''

நிச்சயமாகக் ''காதலாகத் தான் இருக்கமுடியும்.''

''அப்படியாயின் நவீனைக் காதலிக்கும் தகுதி எனக்கிருக்கிறதா?''

''கொண்டவர்கள் வாழ்வுக்கு இதுவே போதும்''

''என்னால் கேட்க முடியுமா? நவீன்........ நவீன்

''ஐ லவ் யு........''

உரத்துச் சொன்னாள்.

"ஐ லவ் யு"

சுவரில் மோதித் திரும்பியது.

''உறவு என்றொரு சொல்லிருந்தால்....! நவீன், உமக்காக நானும் எனக்காக நீரும் வாழ்கின்ற வாழ்வை ஏற்படுத்திக் கொள்வோமே!''

மார்பு உயர்ந்து தணித்தது.

"எங்கள் இருவரின் தனித்தனி வாழ்க்கையை மட்டுமல்ல எங்கள் காதலையும்........."

நவீன் அன்று சொன்னது திரும்ப நினைவுக்கு வந்தது.

எழுந்து கொண்டாள்.

முகம் கழுவித் தலைவாரிப் பொட்டிட்டு...... அழகிய புடவைக்குள் நுழைந்து கண்ணாடி முன் நின்றாள்.

அவளால் கூட அவளை நம்பமுடியவில்லை.

"நான் அழகாய் உள்ளேனா?"

உதடுகள் புன்னைகத்தன.

வாசலில் கிடந்த செருப்பினுள் கால்கள் நுழைத்து நடந்தன.

* * *

# அத்தியாயம் இருபது

''நவீன் வீட்டிலிருக்கவில்லை ஏதோ படத்திற்குப் போய் விட்டான்'' என்று தாய் சொன்னாள்.

"நவீன்! நானும் படம் பார்த்து ரொம்ப நாளாயிட்டுது. உங்களுடன் கடைசியாகப் பார்த்த 'சொல்லத்தான் நினைக்கிறேன்' படத்திற்குப் பிறகு படமே பார்க்கவில்லை.'' நினைத்துக் கொண்டாள்.

''நீர் இல்லாமல் என்னால் படமே ரசிக்க முடியவில்லை. ஆனால் உம்மால் மட்டும் எப்படி இதுமுடிகிறது''

''அப்படியானால் என்னை நீர் காதல் பண்ணவேயில்லையா?''

''உமது பார்வைகள் பேச்சுக்கள் - குறும்புகள் - அனைத்தும்

வெறும் அக்கறை தானா?''

"உம்மை விளங்கிக் கொள்ள முடியவில்லை"

''முன்பொரு முறை படம் பார்த்துக் கொண்டிருந்த போது உணர்ச்சி வசப்பட்டு என் கைகளை அழுத்தியது... நான் தட்டிவிட்டுக் கொண்டதும், பின் நான் தவறுதலாக உம்மில் உரசியதும் நீர் விலகிக் கொண்டது.... அர்த்தம் புரிய வில்லையே?''

"ஓ நவீன்! உண்மையாகவே உம்மை விரும்புகிறேன்"

தனிமை வாட்ட, நவீனின் அம்மா தந்த தேனீரை அருந்தி விட்டுக் கப்பை நீட்டினாள். முன்பு போல் கலகலப்பாக அவர்களால் பேச முடியவில்லை. இருவரும் வெவ்வேறு கவலைகளில். ''அம்மா நான் பிறகு வருகிறேன்'' என்று எழுந்து கொண்டாள்

அன்றைய கலைவிழாப் போட்டியில் பிருந்தா இலக்கிய உறவு என்றொரு சொல்லிருந்தால்! நாகப் பேரிவை இழந்தது யாவருக்கும் அதிர்ச்சியே.

சென்ற முறை போட்டியில் முதல் பரிசைத் தட்டிக் கொண்டதும் நவீனின் நடிப்புத்தானே.

சோபை இழந்து காணப்பட்டாள்.

யாவருடனும் பேசவில்லை. சோகம் நெஞ்சை அழுத்தியது இரவு பதினொரு மணியாற்று.

போட்டி முடிவு அறிவிக்கப்பட்ட பின் அங்கிருக்க அவள் விரும்பவில்லை.

திருமதி. நாகராஜன் கேட்டாள்.

''நில்லு பிருந்தா! நான் கொண்டுபோய் விடுகிறேன்"

''பரவாயில்லை. நான் பஸ்ஸிலேயே போய்க் கொள்கிறேன்.'' திருமதி. நாகராஜன் பாத்திமா டீச்சரிடம் முசுமுசுத்தது இவளுக்குக் கேட்டது.

திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தாள் வீதியில்.

வாகனங்கள் அதிகமாகத்தான் காணப்பட்டன.

பழைய மாணவர் சங்கம் கூட அழைப்பிதழ் பெற்று வந்திருந்ததால், பணக்காரப் பழைய மாணவர்களின் சகாக்கள் வந்திருந்ததில் அவளுக்கும் வியப்பில்லை.

தகப்பன் கூட ஒரு முறை சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

''நான் உயிருடன் இருந்தால் சுவீப் விழுந்தாவது ஒரு அம்பாஸிடர் காரில் ஒடித்திரிவோம்''

சிரிப்புடன் அழுகையும் வந்தது.

தகப்பனும் இல்லை. இப்போது நட்பென்று இருந்த நவீன்......? அவளைக் கடந்து வெஸ்ப்பா சென்றது.

* * *

# அத்தியாயம் இருபத்தொன்று

காலம் எவ்வளவு தான் மாறிப் போயிருந்தது.

நவீன் கூட முன்புபோல் இல்லை. தலை மயிரைக் குறைத்து வெட்டி... அழகாக அரும்பு மீசை... பார்ப்பதற்கு ஸ்மாட்டாகக் காட்சியளித்தான். இருந்தும் ஒரு சோகம் அவனுள் அழுத்தியது.

பிருந்தாவைப் பார்க்காமல் இவ்வளவு நாட்களைக் கடத்தி விட்டோமே என்கிற அரிப்பு.

''ஏன் நான் மாறிப் போனேன்? இருந்தாலும் நான் முட்டாள் தனமாக நடந்து கொண்டு விட்டேன். அவளுடன் பழகும் போது புதிராகவும், இப்போது வாஸ்தவமான காதலாகவும், முகிழ்ந்து, அரும்பாகி, மலராகி, மலரும் பூவல்லவா காதல் என்பார்களே... அதுமாதிரி இதயங்கள் பேசும்... கண்கள் உறவாகும்.... உதடுகள் சங்கமிக்காமலேயே உடலில் குளிர் ஒடும்......''

''ஓ..... நான் பித்தனாகி விட்டோனே?''

உதடுகளில் ஒரு சிறு புன்னகை ஓடி மறைந்தது.

இன்று தலைநகரில் உள்ள பினான்ஸ் கொம்பனி ஒன்றுக்கு கணக்கு எழுது வினைஞர் வந்திருந்தான். பழைய நண்பர்களையும் சந்தித்தான். விக்ரோறியாவில் நண்பர் நரேனுடன் சேர்ந்து பியர் குடித்தான் கடற்கரைப் பக்கம் போன போது -

காதலர்கள் தங்களை மெய் மறந்து இருந்த நிலமை இவனைச் சங்கடப்படுத்தியது. பிருந்தாவை நினைவுக்குக் கொண்டு வந்தது.

ஒ பிருந்தா ஐ லவ் யு. நாங்களும் இப்படி மகிழ்ந்து ஆடிப்பாடி... நீங்கள் சொன்ன மாதிரி நான் ரஹ்மான் மாதிரியும், நீங்கள் நதியா மாதிரியும் டுயட் பாடி -

கனவுகளின் சல்லாபம்.

நவீன் நெடுந்தூரம் நடந்தான்.

மணல் காலில் மிதிபட்டு இவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. கடற்காற்று மெல்லிதாக வீச, கடற்பறவை ஒன்று உயரே சிறகடித்துப் பறந்து போயிற்று.

அன்று மாலையே ஊர் திரும்பி விட்டான்.

நரேன் சொன்னது ஞாபகத்தில் இருக்க

பிருந்தாவைச் சந்தித்தான்.

மாலைப் பொழுது அவனுக்குள் குதூகலத்தைத் தந்தது.

கதவைத் தட்டினான்.

திறந்தது.

குளித்து விட்டுத் தலையைத் துடைத்தபடியே திறந்தவளுக்கு நவீனைக் கண்டதும் ஆச்சரியமாக இருந்தது. விழிகளை மலர்தினாள். தன் கண்களையே நம்ப முடியாமல் இருந்தாள். ''எவ்வளவு நாட்கள் உம்மைக் காணாமல்...... என் மனம் என்ன பாடு பட்டிருக்கும். உமக்குத் தெரிந்தால் தானே?'' விழிகள் பேசின. ''நீங்கள் மட்டும் என்னவாம்? உங்களைப் புரிந்து கொள்ள முடியாத நட்புடன் என்னால் எப்படி? நான் உங்களைக் காதலிப்பது உறுதி செய்யப்பட்டதும் என்னுள் ஏற்பட்ட தவிப்பு, குழந்தையின் முன்னால் விளையாட்டுப் பொருட்களை நீட்டியதும் ஏற்படும் குதுகலம் - அதுமாதிரி எனக்குள்'' அவனது விழிகள் பேசின.

சோபாவில் உட்காரச் சென்றான்.

பிறகு நாவல் நிற சாரிக்குள் நுழைந்து தலையைப் பின்னலிடாமலேயே அழகு சொட்ட தேவதையாய் வந்தாள்.

கதைத்தாள்.... அவனும் தொடர்ந்தான்.

பலதும் பத்துமாய் மாறிக் கதை தங்களுக்குள் வர இருவரும் விழித்துக் கொண்டனர்.

காப்பியைக் குடித்தபடி சொன்னான்..... "கோப்பி இதமாக இனிமையாக உள்ளது உங்களைப் போல்"

''இன்றைக்கு ஒன்றுமில்லாதவாறு அழகாயிருக்கிறீர்''

''நீங்கள் மட்டும் என்னவாம் பனியில் குளித்த ரோஜாமலர் மாதிரி..... ''

சிரித்தாள்.

திடீரென்று நவீன் கேட்டான்

''நான் ஒன்று கேட்கட்டுமா?''

''கேளுமன். ஏன் புதிர் போடுகிறீர்?''

''வாழ்க்கையே புதிர்தானே''

''விசயத்திற்கு வாரும்''

''நாங்கள் எங்களது வாழ்வைத் தீர்மானித்துக் கொள்ளும் நேரம் இது என நினைக்கிறேன்''

''எனது வாழ்வைப்பற்றி நான் இன்னும் முடிவுக்கே வரவில்லை. உமது வாழ்வு பற்றி?''

''திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்.'' நவீன் சொன்னான். பிருந்தா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

''சுவாரஸ்யமாய் இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டாளோ?'' நவீன் நினைத்தான்

''யார் அந்த பாக்கியசாலி? ஏற்கனவே பார்த்து வைத்திருக்கிறீரா....?''

"நான் பார்த்து வைத்திருக்கிறேன். ஆனால்......"

"என்ன? ஆனால்..."

''..... ஒரு பக்கமான முடிவு தான். பெண் சம்மதித்தால்...?''

''உம்மேட முடிவுப்படியே அவளும் சம்மதிப்பாள். கவலைப் படாதீர் நவீன்'' நிம்மதிப் பெருமூச்சு ஒன்று விட்டுக் கொண்டாள்.

"அந்த அதிர்ஷ்டசாலி யார்?"

மீண்டும் கேட்டதும் -

''பார்வையாலேயே நீங்கள் தான்" என்றான்.

தடுமாறிப் போனாள்.

"முடியாது!.......நவீன்.....முடியாது!......என்னால் முடியாது...... "நா தழதழத்தது''.

''நான் உங்களைக் காதலிக்கிறேன்! மிஸ் பிருந்தா!!''

அழுத்திச் சொன்னதும் பிருந்தாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. ''என்னமாய் உச்சரிக்கிறான் இவன்..... மிஸ் பிருந்தா.... டீச்சர் எல்லாம் பொய். படிக்கும் போது மட்டும்தான் உலகில் யாவரும் மாணவர்கள்.''

''கற்றது கையளவு.....பழமொழி மாதிரி நமது காதலுக்கு இது முட்டுக்கட்டையாக இருக்க கூடாது!''

"என் வயது?"

''வயது பார்த்தால் காதலின் அர்த்தம் வேறு விதமாயிருந்திருக்கும்''.

''சமூகம் எம்மை நிந்தனை செய்யும்''

''நாங்கள் தானே வாழப் போகிறோம்''.

''சமூகத்தின் வட்டத்திற்குள் வாழ்ந்தாக வேண்டுமே?''

''நான் முடிவு செய்தாச்சு. நான் உங்களைத்தான் கல்யாணம் செய்வேன்" எழுந்து கொண்டாள்.

''கல்யாணம் செய்து கொள்ள எனக்குச் சம்மதமே. இப்போது நீங்கள் சம்மதித்தால்......''

தடுமாறினாள் பிருந்தா.

அவளது காதல் வித்தியாசமானது. திருமணம் என்பதை

அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. தான் அவனின் இதயத்தை மட்டுமே விரும்புவதை உணர்ந்தாள். ஆனால் நவீனின் முடிவு இளமைக் கனவுகளைச் சுமந்து காம உணர்ச்சி மட்டுமே நிறைந்த காதலாக இவளுள் உணரச் செய்தது.

சாதாரணமாக ஐ லவ் யு என்று சொல்லியிருந்தால் ஒருவித ஆறுதல் தந்திருக்கும். கல்யாணம் என்கிற முடிவு அவளை நவீனின் மீது இருந்த மதிப்பைக் குறைத்துப் பார்க்க நினைத்தது. "அவனது அறிவு மங்கி விட்டதோ?"

நவீனும் எழுந்து அவளருகில் சென்றான் .

ஜன்னலூடே மாலைக் காற்று குளிரச் செய்தது.

பிருந்தாவின் இரு கரங்களையும் எடுத்து கண்களில் ஒத்திக் கொள்ளப் போனான்.

கைகளை உதறி விலகிப் போனாள்.

மெல்லிய குரலில் "பிருந்தா ஐ லவ் யு" என்றான்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அது நடந்து முடிந்தது.

வெட்கத்தால்..... ஆத்திரத்தால் - துணியால் முகத்தைத் துடைத்தபடி படியிறங்கி நடந்தாள்.

சிந்தனை அலைபாய்ந்தது.

"காதலிக்கும் போது மலர்களைப் போல் இருக்க வேண்டும். மலர்களை ருசிக்க மட்டுமே காதலுக்குத் தெரிந்திருக்க வேண்டும். முரட்டுத்தனம் இருக்கக் கூடாது. கவிஞனாக அனுபவிக்க வேண்டும். அப்படியானால் நான் ஏன் தோற்றுப் போனேன்?"

"புரிந்து கொள்ளாமையா? "

"அப்படியானால் அவளது பார்வையின் அர்த்தம்...."

வீதியில் பூவரசமரங்கள் அழுது வடிந்து கொண்டிருந்தன.

❋ ❋ ❋

# அத்தியாயம் இருபத்திரண்டு

அன்றைய பத்திரிகைச் செய்தியைப் படித்ததும் நவீனும் தடுமாறிச் செய்வதறியாது திகைத்து நின்றான்.

கண்கள் பனித்தன.... விழிகள் புரண்டன.

தாயும் அழத் தொடங்கி விட்டாள்.

''ஓ! அம்மா இன்று தான் நீ உண்மையிலேயே விதவையாகி விட்டாய்! சாமியாராய்ப் போனவர் சமாதியாகியிருந்தால் பெருமையாய் இருந்திருக்கும். காடையர்களால் அடிபட்டு இறந்தல்லவோ போனார் உன்கணவர். என்னால் அப்பா என்று சொல்ல முடியவில்லை மன்னித்துக் கொள்ளம்மா.''

படத்துடன் செய்தியாய் வெளிவந்தது. ''சாமியார் கோலத்தி லிருந்த பலரை ஏமாற்றி போலீசாருக்கு டிமிக்கி கொடுத்த பேர்வழி இன்று காடையர்களால் அடிபட்டு மரணமடைந்து விட்டார்'' என்பதே அச் செய்தி கணவனே தெய்வம் என வாழும் நவீனின் தாய்க்கு அது மேலும் அதிர்ச்சியைத் தந்ததில் வியப்பில்லை.

நெற்றியில் இருந்த குங்குமத்தை அழித்துக் கொண்டாள். கொண்டையில் சூடியிருந்த பூக்களை விலக்கிக் கொண்டாள். மீண்டும் கண்ணீரைச் சுமந்து கொண்டு அவள், ''நீ ஒரு விதவை..... விதவை எனச் சமூகம் சொல்லுமே'' - தயாராகி விட்டாள். அவளின் செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்த நவீனினால் எதுவுமே சொல்ல முடியவில்லை.

'எனி மேல் முற்றத்து மல்லிகை தன் பாட்டில் பூத்துச் சாய்த்து நிலத்தில் விழும் - அம்மாவின் கூந்தலுக்கு வந்து ஒட்டிக் கொள்ளாது. சிவக்கொழுந்துவின் கடைக்கு அம்மாவால் குங்குமம் விலைப்படாது.'

அவனையும் அறியாது நீண்டதொரு பெருமூச்சு வந்தது.

கதிரையில் இருந்தவாறே தூங்கிப் போனான்.

விழித்தபோது அம்மா சொன்னாள் பிருந்தாவின் அம்மா வந்து விட்டுப் போனதாக திக்கென்றது அவனுக்கு.

''ஏன்?'' என்ற கேள்வி எழுந்து மடிந்தது.

''அன்று நடந்த சம்பவத்திற்கு மன்னிப்புக் கேட்கத்தான் கூப்பிட்டாளா?''

''அன்று நடந்தது என் தவறல்லவே''

காதல் என்பது கண்களின் சந்திப்பால் - கருத்தொருமித்த இரு இதயங்களின் சங்கமத்தில் பிறப்பதுதான். எனது காதல் அப்படித்தான். உங்களின் கருத்துப்படி வெறும் உடற்பசிக்குப் பெயர் காதலல்ல.... எனது காதல் வெறும் நீரில் தோன்றும் நிழலல்ல - அழிந்து போவதற்கு.

கண்களில் நீர் கட்டியது

கூரைக்கு மேலாக ஹெலிகொப்டர் தாழ்ந்து பறந்தது. பனை மரங்கள் சலசலத்தன.

''கரவோலிகள் அதிகமாய்ப் போச்சு. வெட்டவேண்டும்''

அம்மா சொல்லியிருந்தாள் முன்பு.

''எப்படிப் போவது?. எப்படிப் பேசுவது? முன்பு மாதிரி கலகலப்பை ஏற்படுத்தலாமா?'' மனது பரபரத்தது.

எனக்கென்ன நான் ஆம்பிளை. போய்த்தான் பார்ப்போமே. கால்கள் முன்னேறின.

நடையில் பழைய வீரியம் இல்லைதான். எனினும் நடந்தான்.

கோவில்களில், கடற்கரையில், பாடசாலையில், சினிமா கொட்டகைகளில் எல்லாம் கலகலத்ததுத் திரிந்த நாங்கள் ஒரு கணப் பொழுதில் வெட்கப்படவேண்டியதாயிற்று. நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? ஆம்பிளை நான். அவளல்லவா நாண வேண்டும். சந்தியைக் கடந்து திரும்பினான்.

''அந்த ஒரு கணப்பொழுதில் ஏன் மாறிப் போனாள்? அப்படி என்ன தான் சொல்லிட்டேன்? ஐ லவ் யு என்று சொன்னது தப்பா....? அதற்குப் பிழையாய் அர்த்தம் கற்பித்துக் கொண்டு அப்படி..... அப்படி....சீ....டீச்சர் நீங்களா அப்படி வெட்கப்படும்படி நடந்தீர்கள்? நம்பமுடியவில்லையே. நான் காதலித்தது உங்கள் உள்ளத்தைத் தானே....! உடம்பை நான் விரும்பியிருந்தால் தனிமையில் கழித்த எத்தனையோ நாட்களில் தொட்டிருக்க முடியும்.... உங்களால் கூட என்னை.... இதயத்துள் கட்டி எழுப்பப்பட்ட கோயிலை அதில் நீங்கள் என்றும் குடியிருப்பதைப் புரிந்து கொள்ளாமல் போய் விட்டீர்களே!''

வாசலில் ரோஷன் குரைத்து வரவேற்றது.

தடவிவிட்டுக் கொண்டு பெல்லை அழுத்தினான். உள்ளே தட்டாமலேயே போயிருக்க முடியும். இன்று மட்டும் ஏதோ தடுத்தது. டீச்சரின் தாய் தான் திறந்தாள்.

''வா தம்பி. பிருந்தா உள்ளே இருக்கிறாள். போய்க் கதையும். நான் பக்கத்து வீட்டில் புதுப் படம் போடுகிறார்களாம் போய்ட்டு வாறன்'' சென்று விட்டாள்.

தயங்கியபடியே நுழைந்தான்.

கட்டிலில் ஒருக்கழித்துப் படுத்திருந்தாள் பிருந்தா. அருகே போய் மெதுவாக ''டீச்சர்'' என்றான்.

மெதுவாகக் கண்களை மலர்த்தியவள் கண்களை ஒரு கணம் மூடிப் பெருமூச்சொன்றை விட்டுவிட்டுத் திறந்தாள். பார்வை பேசியது.

அருகில் உட்கார்ந்து கொண்டான். எழுந்திருக்க முயன்றாள் முடியவில்லை.

''படுத்திருங்கள் 'டீச்சர். என்னாச்சு உங்களுக்கு?'' கேட்டான்.

''ஒன்றுமில்லை தலையிடியும் காய்ச்சலும் தான்.'' நவீன் நினைத்தான் - இவளுக்கு இங்கே காய்ச்சலும் தலையிடியும், அவள் தாய் மட்டும் புதுப்படம் பார்க்கப் போய்விட்டாள். புன்கை உதடுகளில் மலர்ந்து மறைந்து போயிற்று.

ஒரு நீண்ட மௌனம்.

பிருந்தா கலைத்தாள்.

"எப்படி இருக்கிறீர்?"

"நான் நன்றாய் இருக்கிறேன், நன்றி"

புன்னகை இருவர் உதடுகளிலும் தவழ்ந்தது. ''ஏதாவது மருந்து எடுத்தீர்களா? கேட்டான் நவீன்.

"சும்மா அஸ்பிரின் மட்டும்"

''ஏதாவது சீரியஸாயின் டாக்டரிடம் போகலாம் தானே?''

''நத்திங் சீரியஸ் ஹியர்'' என்றாள்.

சிறிது நேரம் யோசித்து விட்டு சொன்னாள்...

'மன்னித்து விடும் நவீன்..... நான் அன்று அப்படி நடந்து கொண்டதற்கு ...... அது என்னுடைய பிழை .........."

".....எனது அன்பை நீங்கள் பிழையாக விளங்கிக் கொண்டதே அந்த அர்த்தத்திற்குக் காரணம்.''

''இப்ப கூட நினைத்தாலே வெட்கமாயிருக்கிறது நவீன்''

"எனக்கு என்மேலேயே கோபம்"

''இதில் எனக்குப் பங்கு இருக்கு தானே?''

''எனது வயது அனுபவமும் வித்தியாசமானது. ஆனால் நீர் இன்னும் டீன் ஏஜ்ஜாகத்தான் இருக்கிறீர். அதனால் தான் எனது தவறுக்கு - உமது தூய்மையான காதலுக்கு நான் காமம் என்கிற அர்த்தம் கொடுத்து நடந்து கொண்டேன்...''

''இப்போது கூட நான் உங்களை விரும்புகிறேன்.''

"மனசுக்கு மனசு, கண்ணுக்குக் கண், காமத்துக்கல்ல"

நவீன் என்னால் என்னையே புரிந்து கொள்ளாத வாழ்வு வாழ்ந்த எனக்கு அன்றைய நிகழ்ச்சி ஒரு திருப்பம். என்னையே புரிந்து கொள்ளவதற்கு..... நமது தொடர்புக்குச் சரியான அர்த்தம் கண்டு கொள்வதற்கு....."

மேசையில் கிடந்த விசிறியை எடுத்து விசிறிக் கொண்டான்.

"வியர்க்கிறதா நவீன்?..... காற்றாடியைப் போடட்டுமா?"

"பரவாயில்லை..... நான் வரட்டுமா?"

"நவீன்"........

அவனது கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

"போகாதீர், இரும். என்னோடு இரும்."

நின்று நிதானித்து அவளையே பார்த்தான் நவீன்.

கண்களில் எதையோ தேடினான்..... ஏதோ புரிந்தது.

அவள் பார்வையால் அவனது இதயத்தில் ஏதோ எழுதிச் சுதாகரித்துக் கொண்டாள்.

"என்னை விரும்பினால் இப்பொழுது போகாதீர்." கெஞ்சியது போலிருந்தது அவனுக்கு இருந்தான்.

கேட்டாள் -

"என்னைத் திருமணம் செய்வதால் சமுதாயத்தின் எதிர்ப்பை எப்படிச் சமாளிப்பது!"

கேள்வியை அவளிடமிருந்து எதிர்பார்க்கவில்லை அவன். அதுவும் அவ்வளவு சீக்கிரத்தில்.....

யோசித்தான்......

அன்று அவள் நடந்து கொண்டது கண்முன்னால் ஒடியது.

ஐ லவ் யு என்கிற விமானம் பிருந்தாவில் மோதி தடுமாறி நொறுங்கு முன் -

அவள் செயலிழந்து விட்டாள்.

நவீனின் வார்த்தைகள் அவளை நிலைகுலையச் செய்து விட்டன.

கணப்பொழுதில்

அவளது உடைகள் நிலத்தை முத்தமிட்டன.

நவீன் நிலைகுத்தி நின்றான்.

வார்த்தைகள் மறந்து போயின.

அவள் நெருங்கி வந்தாள்.

இவன் பின்னோக்கிப் போனான்.

எதிர்பாராத மோதல். ஆதலால் பதில் தர வார்த்தையைத் தேடினான்.

பின்னோக்கி நடந்த நவீன் சுவரில் சாய்ந்து நிமிர்ந்தான்.

கண்கள் வெட்கத்தால் மூடிக் கொண்டன.

இதயப் படபடப்பு அதிகரித்ததை உணர்ந்தான்.

மாறி மாறி அவனை முத்தமிட்டாள்.

அவளது கரங்கள் நடுங்கின. சுவரில் ஆத்திரத்தால் அறைந்தான். ஒன்றுமே செய்ய இயலாமல் எதையோ இழந்தவனாய் - காதல் ஒரு கோயிலுக்குச் சமனானது புனிதமானது, போற்றப்படவேண்டியது என்கிற அவனது கணிப்பு கவனிப்பாரற்றுப் போனதுவோ? ''டீச்சர்.... டீச்சர்....ம்...பிருந்தா'' ஆத்திரமாய் வந்தன!! அவளது கரங்கள் மார்பில் பிரம்பாய் ஊர்ந்து கீழே இறங்க....

பலம் எல்லாம் கூட்டி அவளைத் தள்ளினான்.

சுவரில் மோதுண்டு வீழ்ந்தாள்.

அவளது கண்கள் ஒரு வித வெறியால் சிவந்திருந்தன.

நவீனின் கண்கள் பொல பொல வென முதன் முறையாக அழுதான். "இப்போது திருப்தி தானா.....என் உடலை விரும்பித்தானே ஐ லவ் யு என்று எல்லாரும் பாவிக்கிற ஆயுதத்தை என்மீதும் எறிந்தீர்....ம் என் உடல் உமக்காகக் காத்திருக்கிறது. நீர் விரும்பியதை எடுத்துக் கொள்ளும்"

வார்த்தைகள் அவளிடமிருந்து விசிறு துப்பாக்கியிலிருந்து சிதறும் குண்டுகள் மாதிரி பொழிந்தன.

நவீன் தனது ஆத்திரத்தை விழுங்கிக் கொண்டு மெதுவாக அவளிடம் சென்று சேலையால் அவளது உடலை முடிவிட்டான். மூலையில் குந்தியிருந்து காலைகளை கைளால் மடித்துக் கட்டி முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கிக் அழுதாள்.

அவளருகில் சென்று முழந்தாளிட்டு அமர்ந்து மெதுவாக வாய் திறந்தான்.

ஐ லவ் யு என்கிறது உங்களுக்கு அம்பாய்த் தைத்தது. வாஸ்தவம் தான் அதுவே எனது உள்ளத்திலிருந்து வெளி வந்த.....என்னால் பூஜிக்கப்படுகின்ற அன்புத் தெய்வத்திற்கு அர்ப்பணித்த காதல் மலர் என்பதாக எனக்குத் தெரிந்தது...."

அவள் இன்னமும் அழுது கொண்டிருந்தாள்.

"உங்களது செயலால் நான் நிலைமாறவில்லை. எத்தனையோ தனிமைகளை நாங்கள் அனுபவித்திருக்கிறோம். அப்போதில்லாத உணர்ச்சி இப்போதா வந்து விடப்போகிறது.

"காதல்தான் முழுமையானது. அன்பாக ஆசையாக ஒரு கவிதையாக அர்ச்சனை மலராக ஸ்பரிக்க வேண்டியது...... காமம் என்னைப் பொறுத்தவரை இரண்டாம் பட்சம் தான்."

"உங்கள் நிர்வாணம் எந்த முனிவனையும் சபலப்படுத்தும். ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் முற்றும் துறந்த முனிவனல்ல. தங்கள் இளமையைப் பயன்படுத்தித் தங்களது சுகத்தை அனுபவிக்க எத்தனையோ மாணவர்கள் உண்டு. ஆனால் நான் இன்னும் உங்களது

பக்தனாக மட்டுமே உங்களது வாசகராக மட்டுமே இருக்க ஆசைப்படுகிறேன்.''

''சமூகத் தடைகள் முறிந்து போய் எங்களுக்கு வணக்கம் செலுத்திக் கொள்ளும் ஒரு நாளில் வயதுகள் தொலைந்து போகும். காதல் பறவைகள் வலம்வர முட்கள் பூக்கள் சிந்திக் கொள்ளும்-....நீங்கள் சம்மதித்திருந்தால்.'' கலைந்திருந்த மயிரைக் கோதி விட்டு சேட்டுப் பொத்தானைகளை மாட்டியபடி

வெளியேறினான்.

இப்போது

திருமணத்திற்கான எனது விருப்பத்தை கேட்கிறாளே... எவ்வளவோ மாறி விட்டாள்.

கண்கள் மூடாது அவனையே பார்த்தான்.

கட்டிலில் முதுகிற்குத் தலையணையை அணை கொடுத்து, கூந்தல் பரவி இருக்க சாய்ந்திருந்ததே ஒரு அழகுதான். நாவல் கலரில் சாரி உடுத்தியிருந்தாள் அவளுக்கு மேலும் அழகு சேர்த்தது மாதிரி

சூரிய காந்தியாய் மலர்ந்து சூரியனின் வரவிற்காய்க் காத்திருந்தவன் இப்போது சூரிய பகவானின் தேவாரத்திற்காகக் காத்திருக்கிறனோ?

சம்மதமே நீ பூவானால்

சரம் தொடுக்க.......

இங்கே-

ஒளி கண்டு மலர்

மலர்ந்ததா இல்லை

மலர் கண்டு ஒளி

வந்ததா?

மலர் வனக்காடுகளில் பூப்பறிக்க வந்தவள்

மாலைக் கரங்கள் வாழ்த்த

இங்கே

சம்மதமே - நான் பூவாக..... நீ மேசையில் கிடந்த கவிதையை நவீனின் கண்கள் வாசித்தன.

கடிகாரத்தைப் பார்த்தவன் பிருந்தா தனது பிறந்த நாளுக்குப் பிரசன்ட் பண்ணியது நினைவுக்கு வந்தது.

"இது உமக்கு நவீன்"

நிமிர்ந்து பார்த்தான்.

"இன்று உமது பிறந்த நாள்"

அவனுக்கே நினைவில்லை, அவளுக்கு மட்டும் எப்படி? தடுமாறித்தான் போனான்.

அவளே தெரிவு செய்து அவனது கரத்தில் மாட்டி விட்டாள். வானத்தில் பறப்பது போன்ற ஓர் உணர்வு.

"மெத்தப் பெரிய உபகாரம்" மெதுவாகச் சொன்னான்.

பிறகு.... பிறகு -

சேர்ட் வாங்கித் தந்தது... சினிமாவிற்குப் போனது.... நினைவை அரித்தபடி மீண்டும் கேட்டது. அவனுள் உறைத்தது.

''அம்மி மிதித்து அருந்ததி பார்த்து நாலுபேர் மத்தியில் நான் உங்களுக்குத் தாலிகட்டி மனைவியாக்கி......

முழுமனிதனாக வாழ எனக்குச் சம்மதமே......''

சொன்னதும் மகிழ்ச்சியால் துள்ளி எழுந்து கொண்டாள்.

"ஓ மெத்தப் பெரிய உபகாரம்."

இருவரின் உதடுகளும் சிரிப்பைப் பரிமாறிக் கொண்டன.

"இருவரது அம்மாக்களும் முதலில் இதற்குச் சம்மதிப்பார்களா?" இப்போதும் அவர்களது மனதுகளில் ஆட்டம் கண்டன. "சமாளித்துக் கொள்ளலாம்." சமாதான உடன் படிக்கைகளும் அவரவர் மனதுகளில் நடந்து முடிந்தன.

இரண்டு இதயங்கள் பிரகடனப் படுத்தப்பட்டு இந்தக் காதலுக்குப் பூ மழைதூவி வானவர்கள் வாழ்த்துச் சொன்னது மாதிரி அவர்களுள் ஒரு பிரமை.

* * *

# அத்தியாயம் இருபத்தி மூன்று

களைத்துப் போய்க் கல்லூரியால் வந்து வாசலின் உட்பக்கம் செருப்பைக் கழற்றி வைத்து விட்டு உள் நுழைந்தாள். மேசையில் குடையையும், புத்தகத்தையும் வைத்து விட்டுக் கூந்தலைக் கலைத்தாள், வியர்த்திருந்தது.

''ப்பூ...... சரியான களைப்பு" முணுமுணுத்தாள். உடைகளைக் களைந்து கொடியில் போட்டு விட்டு உடலை மறைத்துத் துணியால் கட்டியபடி கிணற்றடிக்குப் போய் நன்றாகக் குளித்தாள்.

சூடும் பறந்தது.

களைப்பும் சிறிது குறைந்தது.

தாய் சமையலில் மும்முரமாக இருந்தாள் - நேரத்திற்குச் சமையல் முடிந்து விட்டால் பக்கத்து வீட்டுக்குப் படம் பார்க்கப் போகலாமல்லவா?

அந்த அவசரம் அவளில் துரிதம் காட்டியது. தானே பிளாஸ்கில் தேனீரை ஊற்றி இதழ்களில் பொருத்தி உறிஞ்சினாள்.

''இன்று எப்படியாவது கேட்டுவிடவேண்டும். எனி என்ன வெட்கப்பட இருக்கிறது. எனது திருமணத்தை நானே முடிவெடுப்பதில் தவறில்லையே. உழைக்கிறேன், நாலுபணம் கைகளில் புரள்கிறது, டியுசன் வேறு. கவலைப் படாமல் வாழலாம். அம்மாவும் மறுப்புத் தெரிவிக்கமாட்டாள். எப்படி அவளால் எதிர்ப்புக் கொடி காட்ட முடியும். பெத்த மகளின் உழைப்பால் சாப்பிடுகிறதே ஒ ரு சந்தோஷமான பச்சை விளக்குக் காட்டும் நிகழ்ச்சி தானே.''

நினைத்தபடி திரும்பினாள்.

கிணற்றடிப் பக்கமிருந்து மெல்லிய காற்று வந்து அவளது மேனியை முத்தமிட்டுச் சென்றது. சிலிர்த்துக் கொண்டாள்.

''அப்பா இருந்தால் எவ்வளவு தைரியமாக நடத்தி வைத்திருப்பார். அப்பா ஒரு முற்போக்குவாதி. கண்டிப்புத்தான் எனினும் அன்பானவர். நான் காதலிக்கும் விடயம் தெரிந்ததும் பச்சை சிக்னல் விழுந்திருக்கும். ம்....அவரின்ஆத்மாவும்.....'' கண்கள் பனித்தன.''அப்பாவும் உயிருடன் இல்லையே....அம்மா அதை மறந்துவிட்டாளா? அப்பாவுடன் வாழ்ந்த காலங்களை மறந்து விட அவளால் எப்படி முடிந்தது? காலம் தான் அவளை மாற்றி விட்டதா? அல்லது என்னால் அவளது கவலைகள் மறக்கடிக்கப் பட்டு விட்டனவா?''

''வெறுமை படிந்த அம்மாவின் நெற்றி.... எப்போதும் தயாராய் சீவிக் குடுமி கட்டி.... கூந்தல் என்றும் அவளுக்கு அழகுதான். உனது மகளல்லவா நான். உன்னால் நிச்சயிக்கப்பட்ட எனது பழக்கங்கள். உன்னால் வளர்த்தெடுக்கப்பட்ட எனது அழகுகள், எனது கல்வி வளர்ச்சி, தொழில், இப்போது திருமணம்....''

அம்மா ஆரம்பித்தாள்.

தாய் மகளைப் பார்த்தாள்.

கேட்டேவிட்டாள். ஆச்சரியமும், அதிர்ச்சியும்தான் முகத்தில். காதலை அங்கீகரிக்க.... அவளால் அவளின் நாயகனை அங்கீகரிப்பதில் தாமதம் ..... வயது .....

''மனதுகளின் சங்கமத்தில் வயது கடைசிப்பட்சம்தானே?''

''இருந்தாலும் பருவம் வாழ்க்கை என்று வரும்போது பெண் கணவனினும் வயது குறைந்ததாய் இருப்பது சிறந்தது. குடும்ப நலன் பாதிக்கப்படாது.''

தாயின் அருகில் போய்த் தரையில் உட்கார்ந்து கொண்டாள். பிருந்தா. மனதை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு கேட்டாள்.

''ஏனம்மா பக்கத்து வீட்டு மஞ்சுளாவின் கணவன் வயதில் குறைவு. அவர்கள் சந்தோஷமாக இல்லையா? அழகான பிள்ளைகள் வேறு. என்னுடன் படிப்பிக்கிற உஸ்மான் மாஸ்டரின் மனைவி

ஆறுவயது மூந்தவள். லவ்மரேஜ். நல்ல அமைதியான குடும்பம், அழகான குழந்தைகள். நடைமுறைக்கு இது ஒத்துவருமோ இல்லையோ அனுசரித்துப் போவது நானும் அவரும் தானே?''

அவர் என்ற உச்சரிப்பைத் தாய் ஊன்றிக் கவனித்தாள். ''என்னமோம்மா..... எனக்கும் சரியாப்படவில்லை. ஏனென்றால் சமூகத்தின்ற எதிர்ப்பைச் சம்பாதிச்சு வாழ முடியாது. அதுக்குத்தான்.''

''நிச்சயமா..... வாழமுடியாதம்மா..... ஆனால் இத்தனை வயதாகியும் உன்னாலும் எனக்கு வரன் பார்க்க முடியலையேம்மா? சீதனம், செவ்வாய் தோஷம், கிரகங்கள் பகை.... இப்போ வயது ஏறிவிட்டது. வெள்ளிக் கம்பியாய் தலை மயிர் மாறுகின்ற பருவம். எனி உன்னாலும் வரன் பார்க்க முடியாதம்மா - கிழவி எனக்கு புரோக்கரும் நழுவி விடுவார். எனிமேலாவது என்னை வாழ விடுங்களம்மா'' கெஞ்சினாள்.

தாய் பிருந்தாவின் தலையை வருடிக் கொடுத்தாள்.

''அம்மா நீதான் இப்போ அப்பா அம்மா எல்லாம். நீயும் எதிர்ப்புக் காட்டி விட்டால் ..... ஓ ..... கிழவியானாலும் கன்னியாகவே இருக்கிற போது ரொம்ப கவலைப்படுவோம். இன்னும் கொஞ்சக் காலத்திற்குத் தான் உழைக்கவும் முடியும்.'' பிறகு சென்னாள்....''எனக்கென்று வேலியை உன்னால் போடமுடியாத பட்சத்தில் எனக்கு நானே வரன் அமைத்துக் கொள்வதில் தவறில்லையம்மா?''

தாயும் கற்பனை பண்ணிப் பார்த்தாள்.

''நானும் கிழடு தட்டும் வயது.... எங்களால் முடியாத போது இளையதுகளுக்கு வழிவிட்டுத்தனேயாக வேண்டும். பிறகு இவள் கிழவியாகி... கன்னி கழியாமல்... அனாதையாகி .... ஓ ..... ஆ கொடுமையிலும் கொடுமை. சீதனம் இன்றி இவளைக் கட்ட எந்த ஆம்பிளையும் தயாராய் இல்லை. படங்களிலே வாறமாதிரி எனது மகளுக்கும்.....ஓர் இக்கட்டான நிகழ்வு.....கூடாது. எதிர்ப்பைக் காட்டுகிற சக்தி என்னிடம் இல்லை. இளைய தலைமுறையை

எதிர்காலத்தில் நிறுத்த முடியாது.'' தாயும் சொல்லத்துடித்தாள். அவளது முடிவை பிருந்தாவும் எதிர்பார்த்தாள்.

''உன் விருப்பப் படியே நடக்கட்டும்.'' சேலைத்தலைப்பால் கண்ணீரைத் துடைத்தாள்....... எந்தத் தலைமுறை தோற்றது? எந்தத் தலைமுறை வென்றது?

தாயைப் பார்த்து "....... ரொம்பத்தாங்ஸ்'' என்றாள். கன்னத்தில் முத்தங்கள் பதித்தாள். தாயோ தனது எதிர்ப்பைக் காட்டமுடியாத தோல்வியில் டெபாசிட் இழந்த அரசியல்வாதி போல இருந்தாள்.

பிருந்தா எழுந்துகொண்டாள்.

நவீன் வருவான் என்கிற அவளது எதிர்பார்ப்பு, இரவு பதினொரு மணியாகியும் அவன் வராதது அவளுக்குப் பெருத்த ஏமாற்றமாயிருந்தது.

''நாளை அட்வான்ஸ் லெவல் ரிசல்ட் வரும். வருவான் தானே, கதைத்துக் கொள்ளலாம்.''

இரவு முழுவதும் கனவில் கிடந்தாள்.

கனவில் முதலிரவுச் சந்தோஷங்களை அன்றே அனுபவித்தாள். விடியலை நோக்கி அந்த இரவும் மெல்ல நகர்ந்தது.

* * *

# அத்தியாயம் இருபத்தி நான்கு

பரீட்சை முடிவு வெளிவந்திருந்தது.

சந்தோஷ ரேகை படர்ந்த முகங்களை உடையவர்களின் போக்கில் பெருமிதம் தென்பட்டது. ஒரு குதூகலம்..... புலரும் பொழுதில் பாடும் பூபாளக் களிப்பு - மறுகோடியில் ஒதுங்கியபடி எதிலும் ஒட்டாத உணர்வில் சோகம் கொப்பளிக்க நின்றிருக்கும் பெயில் ஆன மாணவர்கள்...

இத்தனைக்கும் மத்தியில் தானே ராஜாவாய் மாணவர் தலைவனாய்...... மக்களின் பேராதரவினால் வெற்றியீட்டிய முதலமைச்சர் மாதிரி நவீன் காணப்பட்டான்.

அதே கிராப் தலை..... ஐ லவ் யு பனியன்..... அமெரிக்கா ஸ்டைல் காற்சட்டை.....உதட்டில் என்னமாய்ப் புன்னகை.

சென்ற ஆண்டு கிடைத்த தோல்வி....இவ்வாண்டு வெற்றி.... அரசியல் வாதிமாதிரி.

இவர்களின் குதூகலத்தினைத் தூரத்தே ஸ்டாப் ரூமில் இருந்த படியே பார்த்துக் கொண்டிருந்தாள் பிருந்தா.

அவனது வெற்றிக்குத், தானே காரணம் பிருந்தாவின் இதயத்தில் பிடிபடாத சந்தோஷம்.

இந்தக் குதிரை தான் வெல்லும் என்று பணம் கட்டியதும் குதிரை வென்று பணமும் இரட்டிப்பாய்க் கிடைக்குமே! அது மாதிரி சந்தோஷம்.

மெல்ல எழுந்து வாசலுக்கு வந்தாள்.

மாணவர்களை விலக்கிக் கொண்டு அவளிடம் வந்தான் நவீன்.

''வாழ்த்துக்கள் நவீன்''

கைகளை நீட்டினாள் குலுக்கிக் கொள்ள அவனும் கைகளை நீட்டி..... குலுக்கிக் கொண்டான்.

இரு நாட்டு அதிகாரிகள் வந்து குலுக்கிக் கொள்வார்களே. அதுபோல. அவளது வலதுகரம் நவீனது தலையைக் கோதியபடி.....

"...... ரொம்ப சந்தோஷம். என் பிரார்த்தனை வீண் போகவில்லை... எனது வாழ்த்துகள் மீண்டும் மீண்டும்''.

மெல்லியதாகக் கன்னத்தில் தட்டி விட்டுக் கொண்டாள்.

''இவ்வளவு தானா? வேறொன்று மில்லையா?'' சிரித்தபடி கேட்டான் நவீன்

''என்ன வேண்டும்? கேளும் தருகிறேன்.''

''ஒரு பெண்ணிடமிருந்து விலைமதிக்க முடியாத பரிசு இப்போது எனக்குத் தேவையாயின் அதை உங்களால் ஊகிக்க முடியாதா?''

சிரித்தாள்.

பிறகு சொன்னாள்.....

''திருமணத்திற்குப் பிற்பாடு மொத்தமாகத் தருகிறேனே! அதற்குள் என்ன அவசரம்?''

''அட்வான்ஸ் ஏதாச்சும்....'' கண்களால் சொல்ல, அவளுக்கு அது விளங்கியிருக்க வேண்டும்.

''வீட்டிற்கும் வாரும் தருகிறேன்''

''உண்மையாக வா?''

''ஏன், நம்பமாட்டீரா?''

''எப்படி நம்புவது?''

''மனதுகள் ஒத்துப் போனபின் நம்பமாட்டீரா? இப்போதே தந்துவிட்டால் வேறு இனிமையாக இருக்காது.''

''ஓ! ஸ்வீட்டுடன் வேறு ஏதாவது வீட்டிற்கு வந்ததும் தரப்போகிறீர்களாக்கும்''

இருவரும் சிரித்தனர். சிறிது நேரம் மௌனம்.

மௌனத்தைக் கலைத்த படியே அவள்,

''உமது எதிர்காலப் படிப்பிற்கு எனது வாழ்த்துக்கள்'' என்றதும், ''தாங்ஸ்'' என்றான்.

அவர்களது சந்தோஷம் நிரந்தரமாக இருந்திட வேண்டுமே.

விதியின் எழுத்தை மாற்ற இந்த மானிடர்களால் முடிந்த காரியமா என்ன?

நவீன் தனது பாக்கட்டிலிருந்து ஒரு துண்டை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''இது என்ன?'' என்று பிருந்தா கேட்டாள்.

''ஓ! கவிதை! யார் எழுதியது?''-இது பிருந்தா.

''ஏன்? நான்தான். நம்பமுடியவில்லையோ?''

''நம்புகிறேன்.....காதல் வயப்பட்டபின் கவிதை தானாக வரும்தானே?''

''படியுங்கள்''

''வாசகராக வேண்டும். கவிஞன் நிலையில்'' நவீன் சொன்னான்

வாசித்தாள்.

''காதலின் அத்தியாயங்கள் புரியவைத்தது உனது -

விழிகளைப் படித்த போதுதான்

உன் இதயத்தைக் கேட்டேன்

அங்கே -

நீ குடியிருப்பதை இழந்தால்

என்னையே இழப்பது போல -

என்றாய்

இப்போது புரிகிறது!

இதயமே உன்னில் தொலைந்ததாய்!

நீ -

எழுதிக் கொண்டிருக்கும்

காதல் கவிதைகளை முடித்து விடாதே

அங்கே தானே -

எனது ஆத்மாவின் ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது!

உன் பேனாவைக் கீழே வைத்துவிட்டால் -

என் இதயத்துடிப்பு நின்று விடுவதாய் -

ஒரு அச்சம்!

எனவே தேவி -

கவிதைகளில் வாழ்வோம்!

- நவீன் 20.02.84

வாசித்து முடிந்ததும் நவீனைப் பார்தாள் - பழுத்த அனுபவாதியைப் போல், தன்னை விட உயர்ந்தவனாய்த் தோன்றினான் அவன்.

அப்படியே அள்ளி அணைத்து முத்தமிட ஒரு துடிப்பு எழுந்தது.

கண்களால் அவனைப் பாராட்டினாள்.

விழிகளின் சந்திப்பில்தானே கதையே ஆரம்பம்.

இங்கே நான்கு விழிகள் மட்டுமென்ன வீரியமற்றவைகளா என்ன?

அவை காதலுக்கு

விழிகளின் அழைப்பிதழ் அல்லவா?

கன்டீனில் நுழைந்தனர்.

ஸ்வீட்ஸ் வந்தது.

இரண்டு பெப்சிக்கு ஆடர் கொடுத்தாள் பிருந்தா. சாப்பிட்டபடி கேட்டாள் -

''உம்மட அம்மாட்ட கேட்டுவிட்டீரா?''

''இல்லை, ஒருவித பயம். இன்று வந்த ரிஸல்ட் பற்றிச் சொல்லி அந்தச் சந்தோஷத்துடன் கேட்டால் பதில் நமக்குச் சாதகமாக வரும். அதனால்தான் நேற்று கேட்கவில்லை.''

தலை குனிந்தபடி பெப்சியை உறிஞ்சினாள் பிருந்தா.

நவீன் கேட்டான் ''உங்கட அம்மா....''

''அவ ஒரு மாதிரி ஓம் எண்டிட்டா''

''ஓ உங்கட பக்கம் பச்சை விளக்கு விழுந்திட்டுது.....''

கன்டீனில் அவ்வளவு கூட்டமில்லை.

பிருந்தாவே பில்லைக் கட்டினாள்.

இருவரும் கன்டீனை விட்டு வெளிவரும் போது தூரத்தே அதிபர் இவர்களையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு பிருந்தா சொன்னாள். நீர் கிளாஸிற்குப் போம் நான் ஆசிரியர் அறைக்குப் போகிறேன்.

நகர்ந்தனர்.

விதி இவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு நின்றது.

* * *

# அத்தியாயம் இருபத்தைந்து

மாலைப் பொழுதில் புகையிரத நிலையத்தில் அதிகம் கூட்டம். நவீனும் அன்று தான் பயணமாகிறான் பல்கலைக்கழகப் படிப்பிற்கு.....

''கடவுள் புண்ணியத்தில் நீ பாசாகிட்டாய்....கவனமாய்ப் படிச்சுக் குடும்ப மானத்தைக் காப்பாத்திப் போடு'' - தாய் கண்ணீரோடு வழியனுப்பியிருந்தாள்.

புகையிரத நிலையத்திற்குத் தாயார் வரவில்லை. வீட்டிலேயே தங்கி விட்டாள். பிருந்தாவை எதிர்பார்த்தான் வரவில்லை. ஏமாற்றம் தான். நெஞ்சில் ஒரு தவிப்பு.

''உம்மை எவ்வளவு விரும்புகிறேன் தெரியுமா? என்னை நல்ல நிலைக்கு அழைத்துச் செல்லும் உமது பிரார்த்தனை, உமது அன்பு என்னால் மறக்க முடியாத ஒன்று. என்னை வழியனுப்ப வருவதாகச் சொல்லிவிட்டு என்னை ஏமாற்றி விடும் எண்ணமோ?''

புகையிரதம் புறப்படத் தயாராகும் பச்சை விளக்கு விழுந்தது. சத்தத்திலிருந்து புகையிரதம் தயாராய் விட்டதை நவீன் உணர்ந்தான்.

''அவள் வராமலேயே விட்டுவிடுவாளோ?

ஐந்து ஆண்டுகள் பிரிந்து

முகங்களை.... பழகிய நினைவுகள்..... பழகிய உணர்வுகளை மறக்க முடியுமா?''

கூவி அழைக்க வேண்டும் என்கிற தவிப்பு....

''பிருந்தா ஐ லவ் யு! உரத்துக் கத்த வேண்டும்......அது எதிரொலித்து அவளது குரலுடன் இணைந்து என்னிடம் திரும்பி வரவேண்டும்'' இப்படி ஒரு எதிர்பார்ப்பு அவனிடம்.

யார் யாரோ வந்தார்கள். வழி அனுப்ப வந்தவர்கள்..... பழகிய நண்பர்கள்.... படிப்பித்த ஆசிரியர்கள்.... இன்னும் இன்னும்..... அவளைத் தவிர.

விழிகள் தேடின.

''கூட்டத்தில் அவள் இருக்கக் கூடாதா?''

புகையிரதத்தின் இறுதிச் சத்தம் ஓங்கி ஒலித்துத் தணிந்தது. இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டான்.

''இனி அவளைப் பார்க்க முடியாது. சில நிமிடங்களில் புகையிரதம் புறப்பட்டு விடும். மைல் கற்கள் நம்மைப் பிரித்து விடும். காலம் நம்மைத் தூரக் கொண்டு போய் விடும்.....காதலுடன் நாங்கள்......''

முன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த பெண்மணி ஒரு நாவல் ஒன்றில் மூழ்கியிருந்தாள். ''பேச்சுத் தொடுக்கலாமா? சற்று ஆறுதலாக இருக்குமே. ச்சி.....பிருந்தா பார்த்தால் தப்பாகப் புரிந்து கொள்வாள். எல்லாப் பெண்களும் போலவா அவள்? .......வித்தியாசமானவள் சுதந்திர உணர்வுடன் வாழத்துடிப்பவள்.....வட்டத்திற்கு வெளியே வந்து விடத் துடிப்பவள்.....தப்பாய்ப் புரிந்து கொள்வாளா?'' மனதை அடக்கிக் கொண்டான்.

அவளே பேச்சுக் கொடுத்தாள்.

புரிந்தது. அவளும் பல்கலைக்கழகம் செல்லுகிறாள் என்று கரைந்தாள்.....

நவீனுக்குத் தனது சோகத்தை சொல்லி அழவேண்டும் போல் இருந்தது.

''அந்நியப் பெண்ணிடமா?'' வெட்கப்பட்டான்.

அவள் கேட்டாள் ''உமது முகத்தில் ஏதோ ஏமாற்றத்தின் சாயல் தெரிகிறதே!''

மௌனமாக இருந்தான்.

கைகள் சேட் பட்டனைச் சரிசெய்து கொண்டிருந்தது.

மீண்டும் கேட்டாள்.

''நவீன்! இருவரும் ஒன்றாகப் பயணம் செல்கிறோம். சற்று ஆறுதலாகப் பேசிக் கொண்டே போவோம்.... பொழுதும் போகுமல்லவா?''

அவள் சொன்னதும் நவீன் சிரித்தான். 'அப்பொழுதுகளை' நினைத்துக் கொண்டானோ?

''சொல்ல முடியாவிட்டால் விட்டுவிடுங்கள். இந்த நாவலை நவீன் படித்தீர்களா?''

'நெஞ்சிருந்தால் நினைவிருக்கும்'

''படிக்கவில்லை'' நவீன் சொன்னான்.

''இது ஒரு காதல் கதை. வயது ஒத்துவராத மனது ஒத்துப் போன இரு இதயங்களின் காதல் கதை''

நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான் நவீன்.

''வயது ஒத்துவராத மனது ஒத்துப் போன இரு இதயங்களின் காதல் கதை'' - உச்சரித்தன அவனது உதடுகள்.

சொன்னான் அவளிடம் ஆரம்பம் முதல்

முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்த அவள் சொன்னாள் -

''இதோ பாருங்கள் நான் கூட ஒருவரை காதல் பண்ணுகிறேன். இருவரும் நன்றாகப் பழகினோம். அவர் கூட என்னை அனுப்ப வருவதாகச் சொல்லி இருந்தார்..வரவில்லை..எனினும் கவலைப் படவில்லை. புத்தகத்தில் முழ்கிவிட்டேன்.''

''உங்களால் முடிந்திருக்கிறது. என்னால் முடியவில்லை..... நான் அவளது உடலை அல்ல உள்ளத்தை மட்டுமே விரும்புகிறேன்''

''ஏன் நான் மட்டும் உடலை மட்டுமா விரும்பியிருந்தேன்? இல்லவே இல்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதலே காதலின் முக்கியத்துவம். அவர் வந்தால் என்ன வராவிட்டால் என்ன காதல் காதல்தான். மீண்டும் சந்திப்போம் என்கிற ஆறுதல். இது ஒரு தற்காலிகப் பிரிவுதான்.''

''என்னால் அந்தத் தற்காலிகப் பிரிவைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியவில்லையே?''

நவீன் அப்படிச் சொல்லும் போது முகம் வியர்ந்திருந்தது. ஜன்னலைத் திறந்து விட்டபடி அவள் சொன்னாள். ''மிஸ்டர் நவீன், இந்தக் குளிர் காற்றைச் சுவாசித்துக் கொள்ளுங்கள் சுகமாக இருக்கும்..... இதோ எனது டிரான்சிஸ்டரில் பாட்டுக் கேளுங்கள் தூக்கம் வரும்.''

''நவீன் சிரித்தபடி ''தூக்கம் வந்தால் கனவு வரும் என்கிற பயம் எனக்கு''

''கனவே ஒரு சுகம் தானே....என்னைப் பொறுத்த வரை.....

...நாம் சுதந்திரமாக உலவுவதற்கு... சட்டங்களை உடைப்பதற்கு... வட்டத்தைக் கிழித்து வெளியே வருவதற்கு.... இன்னும் மேலே காதலனுடன் கட்டுப் பாடின்றிச் சல்லாபிப்பதற்கு....''

அவள் சிரித்தாள் நவீனும் சிரித்தான்.

புகையிரதம் தனது நீண்ட பயணத்தைத் தொடங்கி வெகு நேரமாகியிருந்தது.

* * *

# அத்தியாயம் இருபத்தாறு

படுக்கையில் புரண்டு படுத்தபடி பிருந்தா அழுது கொண்டிருந்தாள். வெகு நேரமாகியும் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வரவில்லை. தாய் வந்து சென்னாள் - ''ஏண்டியம்மா விளக்கும் கூட போடாமல்.... இருண்டு வெகு நேரமாகி விட்டதே.....எழுந்து முகம் கழுவிச் சாமிப்படத்திற்கு விளக்குக் கொளுத்தக் கூடாதா? கிருஷ்ணன் படத்தைத் தூசி தட்டி வைக்கும்படி காலையில் சொன்னேனே. ஏன் செய்யவில்லை.''

பிருந்தா எதுவும் பேசவில்லை.

விளக்கு ஒளிர்ந்தது - தாய் தான் ஏற்றினாள்.

ஜன்னலூடே குளிர்ந்த காற்று வந்து உடலெங்கும் சில்லிடச் செய்தது. திரும்பிப் படுத்தாள்.

தாய் அருகில் வந்து கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டு பிருந்தாவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள் சுட்டது..... தாய்க்குத் திக்கென்றது.

மனமோ பற்றி எரிந்தது. உடல் சுடும் தானே?

அவளை ஆதரவாகப் பற்றி உட்காரவைத்துத் தன்னுடன் அணைத்துக்கொண்டு அவளது விழிகளிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டாள். பின்னர் கூந்தலைச் சரிப்படுத்திப் பின்னி விட்டாள்.

ம்....எழுந்திரம்மா......சுடுத்தண்ணி போட்டுத்தாரன் முகம் கழுவி விட்டு வா! பிருந்தா தாயைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்பாவைப் பிணமாகத் தோளில் கொண்டு வந்து நான்கு பேர் வைத்த போதும், பிறகு ஈமக்கிரியைகளுக்காக அவரைத் தூக்கிக் கொண்டு வாசலுக்குப் போனபோதும், முப்பது நாளும் கண்ணீரும் கம்பலையுமாகக் கிடந்த போதும் ஆறுதல் படுத்திய பிருந்தாவிற்கு

இப்போது அதே அம்மா ஆறுதல் சொல்லும் நிலை.....அதுதான் அனுபவ முதிர்ச்சியோ?

''புத்தனாகி விட

போதிமரம் தேவையில்லை

சிறு கொடி கூடபோதும்

எந்தச் சித்தார்த்தனும் ஞானியாகி விட''

நவீனின் கவிதை வரிகளை நினைத்துப் பார்த்தாள் பிருந்தா.... ''நவீன் சாரி..... உம்மை நான் ஏமாற்றிவிட்டேன்.'' இதயம் இரத்தக் கண்ணீர் வடித்தது.

''வழியனுப்ப வருவீர்கள் தானே?'' - நவீன் கேட்டபோது,

''நிச்சயம்மாக வருவேன். எத்தனை தடைகள் வரினும் நிச்சயம் வருவேன்'' என்று சொன்ன பிருந்தாவை எவ்வளவு தூரம் எதிர் பார்த்து இருந்தான் நவீன். பிருந்தா ஏமாற்றித்தான் விட்டாள். அழுகை மீண்டும் வர......அழுதாள்.

எழுந்து சென்று முகம் கழுவிவிட்டு வந்தாள்.

சுடச்சுடத் தேனீர் தாய்தர வாங்கி உதட்டில் பொருத்தினாள்.

தொண்டைக் குழிக்குள் இறங்கியதும் ஒரு ஆறுதல்....கதிரையில் உட்கார்ந்து கொண்டாள்.

சுவரில் நவீனின் படங்கள்.... நாடகப் போட்டியில் வெற்றியீட்டிப் பரிசுப் கோப்பையுடன்.... பேச்சுப்போட்டியில் முதலாமிடம் பெற்றுத் தங்கக் கேடயத்துடன்.....

திருக்குறள் மனைப் போட்டியில்....சமய பாடப் பரீட்சையில் சித்தி பெற்று பரிசில்களுடன் நவீன் -

''இந்த முன்னேற்றத்திற்கு நீங்கள்தானே காரணம் என்றால் இவைகளை மறக்கவே முடியாது'' - நவீன் சொல்ல,

பிருந்தா சிரித்தபடி வாழ்த்துத் தெரிவிக்க, அவன் கேட்டான் - ''வாழ்த்து மட்டுமா? பரிசு ஒன்றும் இல்லையா?'' பிருந்தாவும் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று சுவீட்ஸ் வாங்கித் தந்தாள்.

''இந்த ஸ்வீட்ஸ் தருகின்ற இனிப்பை விட உங்களுடன் இணைந்திருப்பது இனிமை தருகிறது!''

பிருந்தா செல்லமாகி தலையில் குட்டினாள். இருவரும் சேர்ந்து சிரித்தனர். இப்போது படத்திலிருந்து நவீன் சிரித்தபடி இவளையே நோக்கிய வண்ணம்.... பிருந்தா கதிரை விளிம்பில் சரிந்து கொண்டாள்.

''இந்நேரம் நவீன் போய் விட்டிருப்பான்! என்னை நினைத்துக் கொண்டானோ?''

வேதனைப்பட்டாள்.....

''தனது நீண்ட பயணத்தைப் புகையிரதம் ஆரம்பிக்க.... தொடர... நவீனும் ஏமாற்றத்துடன் தூங்கிப் போவான். கனவு வரும். நிச்சயமாய் கனவு வரும் என்னுடன் பழகிய அனுபவங்களை திரைப்படமாக்கித் கனவு தரும். என்னுடன் காதலில் திக்குமுக்காடிப் போவான். டிக்கட் பரிசோதக்கர் வந்து உலுப்பும் வரை கனவு தொடரும்...''

சோகத்துடன் சிரிப்பு வர பிருந்தா சிரித்தாள். கண்கள் மட்டும் கண்ணீரை வடித்துக் கன்னத்தை நனைத்துக் கொண்டிருந்தன.

தாய் வந்து பார்த்து விட்டுப் போனாள். சமையலறையிலிருந்து இரவுச் சாப்பாட்டிற்கான ஆயத்தங்களில் மூழ்கி விட்டாள் தாயார். தாயக்கு அவசரம். பக்கத்து வீட்டில் புதுத்தமிழ்ப் படம் வீடியோவில் காட்டுகிறார்களாம். மகளின் சோகம் மறந்து போயிற்றே அவளுக்கு!

நேரம் சென்று கொண்டிருந்தது.

தாயார் சாப்பாட்டைத் தயார் செய்து விட்டு போய் விட்டாள். பிருந்தா தனிமையில் விடப்பட்டிருந்தாள். அப்போதும் நவீன் அவளைப் பார்த்துச் சிரித்தபடி படத்தில் தெரிந்தான்.

''நவீன் மன்னித்துவிடும். சொறி. நான் வரமுடியவில்லை. ஏனென்றால், ஏனென்றால் ....அது..... என்னுள்ளே புதைந்து போகட்டும் அந்த ரகசியம்..... ஓ நவீன்....'' அடக்கிப் பார்த்தாள். முடியவில்லை. சில சமயம் குதூகலம் கரையை உடைக்கும். பின்பு சோகம் வந்து விட்டாலோ காயப்படுத்திச் செல்லும். இது இயல்பு. பிருந்தாவும் அதே நிலைமையில் தான் இருந்தாள்.

நவீனின் தாயார் வந்து அவளிடம் காலில் வீழ்ந்து கெஞ்சிக் கேட்டுச் சத்தியமும் வாங்கிச் சென்றதை நினைத்துப் பார்த்தாள். அன்று காலை நடந்ததை நினைவு படுத்திப் பார்த்தாள். சம்பவங்கள் கோர்வைப் படுத்தப்பட்டுத் தயாராய் நின்றன.

அன்று காலை ஒன்பது மணியிருக்கும்.

தலையிடி என்று சிறு விடுப்பு எடுத்து விட்டு நின்று விட்டாள் பிருந்தா. நவீனின் பயணத்திற்கு வழி அனுப்பப் போகவும் வேண்டும் என்கிறதும் அவள் பாடசாலை போகததிற்கு ஒரு காரணம்.

குளித்து விட்டுக் கூந்தலை வாரிக் கொண்டை போட்டுக் கொண்டு பொட்டுத் துலங்கக் கண்ணடி முன் தன் அழகைப் பார்த்துக் கொண்டாள். இந்த அழகுக்குச் சொந்தக்காரன் வந்துவிட்டால்.... முழுமையாக அர்ப்பணிக்கும் நேரம் கூடத்தான் வந்துவிட்டது. காதலாகக் கனிந்து தீர்மானமும் ஆகிய பின் ஒருவித சந்தோசம், குதூகலம் வருமே. அதை விபரிக்க வார்த்தைகளே வராது. சாப்பிட்டுக் கைகழுவிவிட்டுத் துண்டால் கைகளைத் துடைத்துக் கொண்டு வந்த போது தான் நவீனின் தாயார் வந்திருந்தாள்.

''வாருங்கள் ஆன்டி''

பிருந்தாதான் வரவேற்றாள்.

தாயார் மார்க்கெட்டுக்குப் போயிருந்ததால் பிருந்தாமட்டும் தனியாகவே இருந்தாள். இதுவே நவீனின் தாய்க்குப் பேசுவதற்குச் சாதகமாகி விட்டது. பச்சைக் கொடி காட்டியது மாதிரி அவளுக்குப் புலப்பட்டதோ?

''உட்காருங்கள்''

பிளாஸ்கில் இருந்த தேனீரைக் கப்பில் ஊற்றிக் கொடுத்து விட்டு தானும் தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

யார் ஆரம்பிப்பது? எப்படி ஆரம்பிப்பது?

சிறிது மௌனம். மௌனத்தை நவீனின் அம்மாதான் கிழித்தாள். ''அம்மா பிருந்தா....'' நிறுத்தி, பிருந்தாவைப் பார்த்துவிட்டுத் தலையைத் தாழ்த்திக் கொண்டு தொடர்ந்தாள் –

''நீயும் நவீனும் பழகியது, காதல் நிலைக்குத் தள்ளப்பட்டது, திருமணம் செய்யவும் துணிந்தது, நவீன் சொல்லித்தான் தெரிந்தது. எனக்குள் அதிர்ச்சிதான். நவீனை உன்னுடன் பழகி விட்டது ஒரு ஆசிரிய மாணவ ஸ்தானத்தில் தான். இருவரும் அதுக்கும் மேலாக நாங்கள் மனிதர்கள் என்பதை நிரூபித்து விட்டீர்கள். என்னிடம் சொல்லி எனது பச்சைக் கொடிக்கு, சிக்கனலுக்கு எதிர் பார்த்த நவீனுக்குப் பதில் எதுவும் கூறமுடியாமல் தவித்த தவிப்பு....அம்மா பிருந்தா! திருமணம் என்பது இரு இதயங்களின் இடம் பெயர்ச்சி ஒத்துக் கொள்கிறேன்.....''

பிருந்தா இமை கெட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வயது அந்தஸ்து-சாதி-சமுதாயம் என்பது பாராதது காதல் ஒன்றுதான். என் மகனின் வாழ்விலாவது ஒளி பிறக்கும் என எதிர் பார்த்தேன். தகப்பன் ஒரு ஓடுகாலி....மகனும் அந்த நிலைக்குத் தள்ளப்படக் கூடாது என எதிர் பார்த்துத் தான் உன்னிடம் யாசிக்க வந்திருக்கிறேன்....''

நிறுத்திவிட்டு மூச்சை நன்றாக உள் இழுத்து வெளியே விட்டாள். பிருந்தாவைப் பார்த்தாள்

''என்ன சிலையான முகம்.... ஆனாலும் என்னால் மருமகளாக ஒத்துக்க சமுதாயச் சங்கிலி தடையாக உள்ளது.'' வெளியே வாகனங்கள் வேகத்துடன் வந்து மோதிய சத்தம் உள்ளே கேட்டது.

இருவரும் எழுந்து கொள்ளவில்லை.

தாயார் தொடர்ந்தாள்.

''நவீன் படித்துப் பட்டம் பெற்று ஆளாகி விட்டால் நமது குடும்ப மானம் நிலை நிறுத்தப் படலாம் என எதிர்பார்க்கிறேன். திருமணத்தால் அவன் கல்வி தடைப்பட்டு விட்டால் விளைவு பாரதூரமாகலாம். எனது கனவுகள் கூடச் சிதைந்து போகலாம். எனவே தாயே! நவீனை மறந்துவிடு...அவனுக்கு ஆசிகூறி மாணவனாகவே வாழ்த்துக் கூறி வழி அனுப்பு - உன் இதயத்திலிருந்து கூட. நமது குடும்பங்களுக்கிடையே பகை வரக்கூடாதம்மா''

இப்போது பிருந்தா நிமிர்ந்து உட்கார்ந்தாள். அந்தத் தாயின் விழிகளில் கண்ணீர்..... ''கெஞ்சுகிற ஒரு தாயின் உணர்வுகளை மிதித்து கொண்டா நமது திருமணம்?'' நினைத்துப் பார்த்தாள் ஒரு கணம். எழுந்து கொண்டாள்.

ஜன்னல் பக்கம் சென்று கதவுகளைத் திறந்து விட்டாள்.

சிட்டுக்குருவிகள் சிறகடித்துப் பறந்தன.

பக்கத்து வீட்டு மாமியின் வளர்க்கும் கிளி ஏதோ பேசுவது கேட்டது. மெதுவாகத் திரும்பிக் கேட்டாள்.

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?''

'அப்பாடா' என்பது போல் நிம்மதிப் பெருமூச்சு விடுவது மாதிரி உணர்வு அந்தத் தாயிடம்.

''தந்தை ஒரு ஓடுகாலி என்கிற இழி சொல் அழிய வேண்டும். மகனாவது படித்து ஆளாகிக் குடும்ப மானத்தைக் காப்பாற்ற வேண்டும்.''

''அதற்கு?''

''நவீன் பயணமாகும் போது நீ போகாதே.... பிறகு ஐந்து ஆண்டுகளில் மறந்தே போய் விடுவான்.''

பிருந்தா நினைத்தாள் - ''எவ்வளவு சுயநலவாதிகள்... மறந்து விடு என்று தாயே சொல்வது..... மறந்து விட்டு மட்டும் இங்கே வாழவா போவது? அவர்களது மானம் காப்பாற்றப்பட எனது மறத்தலா அவசியம்? ஒன்றை அழித்துத்தானா இன்னொன்று உருவாகிறது? ஐந்து ஆண்டுகளில் அவன் மறந்து விடுவானாம் என்று சொல்ல அந்தத் தாயால் எப்படி முடிகிறது? அவளும் ஒரு பெண்ணல்லவா? நான் வடிக்கின்ற கண்ணீர் யாருக்குப் புரியப் போகிறது?''

கேட்டு விட்டாள், ''அம்மா! ஐந்தாண்டுகளில் மறந்து விடுவான் - பால்யக் கனவாய்? அது எப்படிச் சாத்தியமாகும்? அப்படி நவீன் மறக்கவில்லையானால்?''

தாய் சொன்னாள் ''படிப்பு - பழக்கம் - பட்டம் - பதவி - இவை நிச்சயம் அவனை மாற்றும்.'' இப்படிச் சொன்ன அவள், தாயின் நிலையிலிருந்து இறங்கி விட்டதாய் பிருந்தா உணர்ந்தாள்.

''என்னால் முடியுமா?'' தன்னையே கேட்டாள் பிருந்தா.

தாயின் கண்ணீர் கண் முன்னால் தெரிந்தது.

''தன் மகளின் வாழ்க்கைத் துணைபற்றித் தெரிந்தும் வாழ்த்துத் தெரிவித்த என்னம்மா எங்கே - என் மகனை மறந்து விடு என்கிற இந்தத்தாய் எங்கே - எங்கே சுயநலம்? எது பொதுநலம்?'' எரிச்சல் கூட பிருந்தாவிற்கு ஏற்பட்டது.

கண்ணாடி முன் வந்து நின்றாள்.

'நவீன் எவ்வளவு ஆசையுடன் வேண்டுகோள் விடுத்தான் - வழி அனுப்ப வரவேண்டும் எதிர்பார்த்திருப்பேன்' என்று

எனி எந்த முகத்துடன் அவனின் முகத்தில் விழிப்பேன்?

''என்னை ஏமாற்றி விடாதீர்கள்''

''எத்தனை கனவுகள்....கற்பனைகள்......எல்லாமே காகிதப் பதிவுகள் தானா?''

விழிகளில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துவிட்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

அப்போது -

நவீனின் தாயார் மிக அருகில் வந்து நிற்பதை உணர்ந்தாள். திரும்பிப் பார்த்தாள்.

''உனது முடிவு தான் என்ன? உனது காலில் வீழ்ந்து கெஞ்சி....''

காலில் விழுப்போன அந்தத் தாயைத் தூக்கி நிறுத்திச் சொன்னாள்.

''உங்கள் ஆசைப்படியே நடக்கட்டும்.''

அப்போது தான் நவீனின் தாயார் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். படியிறங்கி வீதிகளில் மறையும் வரை பிருந்தா அந்தத் தாயையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''முடிவானது ...... முடிந்த கதை தொடரக் கூடாது .....!

நவீனின் எதிர்காலமே எனது நோக்கமாகும். எனது மாணவன் நவீன் என்கிற பெருமையே எனக்குப் போதும். நான் ஏமாற்றுக்காரி என்று நவீன் நினைத்தாலும் பரவாயில்லை. அவனின் தாயின் கனவு அழிந்துவிட நான் காரணமாக மாட்டேன். என்னிடம் சத்தியம் வாங்கிப் போன அந்தத் தாயின் கனவுகள் நனவாகும். என்னால் அது நனவாகட்டும் என்கிற பெருமிதமே போதும். நவீனிடம் சொல்லக் கூடாது தாய் வாங்கிக் கொண்ட சத்தியம் பற்றி! வழி அனுப்ப நான் வருவேன் என்று ஏமாற்தோடு போகட்டும்....பட்டம் படிப்பு பதவி சூழ்நிலை மாற்றம் அவனை மாற்றட்டும் ..... என்னில் மாற்றம் வருமா?''

குலுங்கிக் குலுங்கி அழுதாள்.....தாய் வரும் வரை. அந்தப் படத்தில் அப்போதும் அதே சிரிப்புடன் நவீன்.....

''பழகிய நட்பு கெட்ட கனவாகிப் போகுமா?''

''பிருந்தா நான் உம்மைக் காதலிக்கிறேன்'' - அழுத புன்னகையும் ...... இதழ் குவித்து ....

''நவீன்!..... மன்னியுங்கள், உங்களை ஏமாற்றியதற்கு. ஒரு தாயின் கனவை நனவாக்கிக் கொள்ள இந்தப் பெண்ணின் சிறு முயற்சி இது. தியாகம் என்றாலும் ஆகட்டும்.''

தாய் வந்து சொன்னாள் -

''நல்ல படம் பாரதிராஜா டைரக்ஷன் பண்ணியது..... என்ன மாதிரி கதை அப்பப்பா புல்லரிக்கிறது.''

தாயைப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும்.

வேதனையிலும் சிரிக்க முயன்றாள் பிருந்தா.

''அங்கே என்னவென்றால் ஓடிப்போன கணவனால் ஏற்பட்ட களங்கத்தை நினைத்து நினைத்து அழும் தாய்! மகனின் எதிர் காலம் ஒன்றே வாழ்வின் லட்சியமாய்க் கொண்ட தாய்! தனது எதிர்காலம் ஒன்றிற்கான படிக்கட்டுகளை மிதித்தபடி பயணமாகிய அவனது மகன்! அந்த மகளைக் காதலித்த நான்! எனக்கொரு அம்மா - மகளின் துயரத்தை விடப் படக் கதைநாயகியின் துயரம் அவளுக்கு உசத்தி! இவர்களை யெல்லாம் தீயிட்டுப் பொசுக்கி விடவேண்டும்'' - எரிச்சல் வந்தது.

விம்மித் தணிந்தது மார்பகம்.

''ஒரு நிஜத்தின் தரிசனத்தில் எரிந்து கொண்டிருக்கும் எனது சோகங்களை யார்தான் புரிந்து கொள்ளப் போகிறார்கள்? நவீன் அருகில் இருந்திருந்தால் சோகங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கலாம். சோகங்கள் எழும் போது நிச்சயம் நட்புக்கள் தேவை - பங்கிட்டுக் கொள்வதற்கு...''

உள்ளே இருந்தால் இருதயம் வெடித்துப் போய்விடும் என்று நினைத்துக் கதவுகளைத் தாண்டி படிகளில் இறங்கி வீதியில் கால்களைப் பதித்தாள்.

வாகனங்கள் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தன.

உயரே விமானம் ஒன்று தாழ்ந்து ஏதோ நோட்டம் விட்டுப் போவது போல் பறந்து போனது.

நடந்தபடி புகையிரத நிலைய மேடைக்கு வந்தாள்.

அங்கு யாருமே இருக்கவில்லை. வெறிச் சோடி இருந்தது.

தூரத்தே ஒரிருவர் தூங்கிவழிந்த வண்ணம் இருந்தனர்.

''இங்கே தானே எவ்வளவு ஆசையுடன் நவீன் காத்துக் கொண்டிருந்திருப்பான். நான் வராதபோது ஏமாற்றத்துடன் பயணமாகி இருப்பான்.''

''நான் எவ்வளவு ஏமாற்றுக்காரி....யாரோ ஒருத்தியின் கனவுக்காகச் சத்தியம் செய்துவிட்டு எனது கனவை எரிந்து விட்டு.....'' கண்கள் பனித்தன.

குளிர்ந்த காற்று வந்து காதோரம் ஏதோ ரகசியம் பேசிச் சென்றது. நெற்றியில் படர்ந்த தலைமயிரைப் பின்னால் தள்ளி விட்டபடி.....

''காத்திருக்கையிலும் ஒரு சுகம் உள்ளது....எனினும் இது காத்திருக்கையில்லையே......கனவுகளை விலை கூறி வியாபாரம் செய்து விட்ட வியாபாரியைப் போல.....எல்லாமே இழுந்து போனநிலை.''

புகையிரதம் ஒன்று வந்து நின்று விட்டுப் புறப்பட்டது. பிருந்தா புகையிரதம் சென்று மறையும்வரை பார்த்துக் கொண்டு நின்றாள்.

இப்படித்தான் நவீனையும் சுமந்து புகையிரதம் சென்றிருக்கும் என்கிற நினைவுடன்......

நீண்ட நேரம் நின்றாள்.

முற்றும்.

* * *

## ஆசிரியரின் பிற நூல்கள் :

நித்ய கல்யாணி

புதிய அடிமைகள்

விடியத் துடிக்கும் ராத்திரிகள்

யுத்த காண்டம்

விழுதுகள் மண்ணைத் தொடும்

ஆத்மா

முடிந்த கதை தொடர்வதில்லை

யாகம்

## முல்லை அமுதன்

யாழ்பாணம், கல்வியங்காட்டில் பிறந்த இளைஞர். முல்லை அமுதன் என்ற புனை பெயரில் கவிஞராக அறிமுகமானவர். இயற் பெயர் இ. மகேந்திரன். இந்த வெளியீட்டின் மூலம் நாவலாசிரியராக இலக்கிய உலகில் பேசப்படுவார் நாவல் இலக்கியப் படைப்பின் பல்வேறு



உத்திகளுள் இவர் கையாளும் உத்தி தனித்தன்மை பெறுகிறது. விமர்சனங்களை எதிர்பார்க்கிறார்.